பக்கங்கள் 24

# புதுவிதி
PUTHU VITHI

அறிமுகவிலை 20/=

புதுமை : 01 | 13 ஓகஸ்ட் 2016 | விதி : 09



## 'காட்போட்' குழந்தைகள்

# வடக்கில் அதிகரிக்கும் விவாகரத்துகள் திகைக்க வைக்கும் பின்னணி

தொடர்கதை



○ சயந்தன்

09

# ஆறாவடு

சிவராசனால் தீர்மானமான முடிவுக்கு வர முடியவில்லை. சனங்கள் கிளாலிப் பக்கமாக ஓடிக் கொண்டிருந்தார்கள். அவரது மனதிற்குள் பெரும் பிரளயமே நடந்து கொண்டிருந்தது. மட்டுவிலிலும், சாவகச்சேரியிலிலும் சனங்கள் இராணுவத்திடம் அகப்பட்டிருந்தார்கள். அவர்களை யாழ்ப்பாணத்திற்கு அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள் என்றும், இல்லை சனங்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்கிறார்கள் என்றும் இளம் பெண்களைத் தனியே பிரித்து எடுக்கிறார்கள் என்றும் ஒவ்வொரு மாதிரிக் கதைக்கிறார்கள்.

சிவராசனின் குடும்பம் எழுதுமட்டு வாளில் ஒரு சேர்ச்சில் தங்கியிருந்தது. அவருக்கு மூன்றும் குமார்ப் பிள்ளைகள். அது தான் அவரை அலைக்கழித்துக் கொண்டிருந்தது. அவர்களோடு யாழ்ப்பாணம் திரும்புவதை அவரால் நினைத்தும் பார்க்க முடியவில்லை.

“எட்டி நடவணை” என்றும் “கெதியில வா” என்றும் குரல்கள் ஒலித்தபடியிருந்தன. இருட்டில் யாரோ சிவராசனை அழைத்தார்கள், “சிவராசண்ணை, நல்லூரடிக்கு ஆமி வந்திட்டானாம். சனங்கள் அரியாலைக் கால வெளியில போகுது கள். பொம்பிளைப் பிள்ளைகளை வைச்சிருக்கிறனியள். கெதியா வெளிக்கிடுங்கோ”

ஆமி கொடிகாமத்திற்கும் வந்து விட்டதாய்ச் செய்தி வந்த போது அவர் ஒரு முடிவுக்கு வர வேண்டியிருந்தது.

“அழகு, நீ பிள்ளைகளைக் கூட்டிக் கொண்டு வன்னிக்குப் போ ... நான் யாழ்ப்பாணம் போறன்...” என்று மனைவியிடம் சொன்னார். அழகு தலையில் கை வைத்து ஒப்பாரி வைக்கத் தொடங்கினாள்.

“என்ன புசத்திறியள் நீங்கள்.... எனக்கு வன்னியிலே ஆரைத் தெரியுமெண்டு போறது... மூண்டு குமருகளை வைச்சு நான் அங்க என்னத்தைச் செய்யிறது. நீங்களும் வாறதெண்டா வாங்கோ வன்னிக்குப் போவம். இல்லாட்டி ஆமிக்காரனிட் டத் தப்பியொட்டினா யாழ்ப்பாணம் போவம். இனி அந்தக் கடவுள் விட்ட வழி”

மூன்று பிள்ளைகளும் மிரண்டு போயிருந்தார்கள். மூத்தவள் தீபா ஏற்கனவே நவாலி சேர்ச்சில், புக்காரா அடியில் அகப்பட்டு அருந்தப்பில் உயிர் தப்பியிருந்தாள். அந்தக் காயத் தழும்புகள் இப்பொழுதும் முகத்தில் இருந்தன. அந்தச் சம்பவத்திற்குப் பிறகு குண்டுச் சத்தம் கேட்டாலோ விமானங்களின் இரைச்சல் கேட் டாலோ அவளது முகம் இருண்டு விடும். இப்பொழுதும் அப்படித் தான், துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் நெருங்கி கொண்டிருந்தன. ஆனைவிழுந்தான் இருந்து ஆட்லறிகள் இவர்களைக் கடந்து போய் வெடித்தன. அவள் தன் பாட்டில் காதுகளைப் பொத்திக் கொண்டு நிலத்தில் விழுந்து கிடந்து குளறுவதும் மரங்களுக்குப் பின்னால் ஒளிவதுமாக அந்தரித்துத் திரிந்தாள்.

இப்படியொரு அவலம் தனக்கு நேரும் என்று சிவராசன் கனவிலும் நினைத்ததில்லை. யாழ்ப்பாணத்தை விட்டு வேறு பகுதிகளுக்குச் செல்லுமாறு அறிவிப்பு வந்த போது அவரின் குடும்பம் இரவுச் சாப்பாட்டை முடித்துத் தூங்குவதற்கு ஆயத்தமாயிருந்தது. சிவராசனின் அம்மா ஒரு பாரிசவாத நோயாளி. நடக்கவோ சைக்கிளில் ஏறி உட்காரவோ முடியாதவர். எண்பத் தியிரண்டு வயதிலிருந்து அவர் படுத்த படுக்கையிலேயே நாட்களை கடத் தினார். ஒவ்வொரு நாளும் மருந்துகளை எடுக்க வேண்டியிருந்தது.

இடம் பெயரச் சொன்ன போது நாளைக்கே சிங்கள இராணுவம் யாழ்ப்பாணத்தில் பெரும் தாக்குதலைத் தொடுத்து மக்களை சிறைப்பிடிக்கத் திட்டமிட்டிருப்பதாகவும், அதன் சதி வலையில் இருந்து உங்களையும் உங்கள் குழந்தைகளையும் காப்பாற்ற இரவோடு இரவாக யாழ்ப்பாணத்தைக் கடக்கும் படியும் சொல்லப்பட்டிருந்தது.

சிவராசன் தன் மூன்று பிள்ளைகளை பற்றியே நினைத்தார். அதற்கு காரணமிருந்தது. அவர் இயக்க ஆதரவாளராகச் செயற்பட்டிருந்தார். இயக்கத்தின் தெருக் கூத்துகளிலும், நாடகங்களிலும் அவர் இயங்கியிருந் தார். அவரது நாடகங்களில் ஊருக்குள் புகுந்த சிங்கள இராணுவத்தினர் முதலில் பெண்களைத் தேடித் தேடிப் பிடித்து ஸ்கிரீனுக்குப் பின்னால் இழுத்துச் சென்றார்கள். அதற்குப் பிறகு வீறிடும் பெண் குரல்களால் அவர் அரங்கினை நிறையச் செய்தார். தெருக் கூத்துகளில் பச்சை உடையணிந்த ஆமிக்காரர்கள் பூதங்கள் வருவதைப் போல கைகளை வீசி கால்களை உதைத்து வந்து இளைஞர்களின் தலைகளை சீவி எறிந்தார்கள். நீண்ட கூரிய வாள்களால் அவர்களின் நெஞ்சைக் குத்திக் கிழித்தார்கள்.

அப்படியானவருக்கு தானும் பிள்ளைகளும் வெளியேறாதிருப்பது தற்கொலைக்குச் சமமானது என்பது புரிந்திருந்தது. ஆகக் குறைந்தது காலை வரை சமாளிக்க முடிந்தால் விடிந்ததும் அவரது பாரிசவாத அம்மாவினையும் வெளியேற்ற முயற்சிக்கலாம் என்று அவர் நம்பினார். பிள்ளைகளிடம் உடுப்புக்கள், காணி வீட்டு உறுதிகள், நகைகளை எடுத்துக் பத்திரப் படுத்தச் சொல்லி விட்டு ரோட்டுக்கு வந்தார்.

சனங்கள் சைக்கிளில் கட்டிய மூட்டை முடிச்சுக்களுடன் வெளியேறிக் கொண்டிருந்தனர்.



“எட்டி நடவணை” என்றும் “கெதியில வா” என்றும் குரல்கள் ஒலித்தபடியிருந்தன. இருட்டில் யாரோ சிவராசனை அழைத்தார்கள், “சிவராசண்ணை, நல்லூரடிக்கு ஆமி வந்திட் டானாம். சனங்கள் அரியாலைக்கால வெளியில போகுது கள். பொம்பிளைப் பிள்ளைகளை வைச்சிருக்கிறனியள்.கெதியா வெளிக்கிடுங்கோ”

சிவராசன் வீட்டுக்கு ஓடி வந்தார். “பிள்ளையள் வெளிக்கிடுங்கோ.... அழகு, அரிசிமாவும் கொஞ்சம் தண்ணியும் எடுத்துக் கட்டு. தீபா, நீ ஆஷாவை ஏத்து. சோபா தன்ரை சைக்கிள்ளை வரட்டும்” என்றவர் அம்மா படுக்கும் கட்டிலருகே வந்தார். மருந்து டப்பாக்களையும் பெரிய ஐந்து க்ளாஸ்களில் தண்ணீரையும் நிரப்பி அம்மாவின் கை எட்டும் தூரத்தில் வைத்தார். அரிக்கன் லாம்புக்குள் கொஞ்ச மண்ணெண்ணெய் விட்டு வெளிச்சத்தை தூண்டி வைத்து “அம்மா” என்றார்.

“ம் ....” என்ற முனகல் மட்டும் கேட்டது. அம்மா கண்களைத் திறந்திருந்தார்.

“எணை, இதில மருந்தும் தண்ணியும் இருக்கு. நான் இவளவை யக் கொண்டு போய் சாவகச்சேரிப் பக்கமா விட்டுட்டு விடியுறதுக்குள்ள வந்திடுவன்” அம்மா கை நீட்டி சிவராச னின் கைகளைப் பற்றிக் கொண்டார். “நீ போட்டு வா, பிள்ளையள் பவுத்திரம். ஒரு இரவுதானே.. நான் இருப்பன்.. சலத்துக்கு அந்தச் சட்டியை வைச்சிட்டுப் போ....”

சிவராசனும் அழகுவும் பிள்ளைகளும் வீதிக்கு வந்தார்கள். அவர் தன் அம்மாவிடம் திரும்பி வருவதாகச் சொன்ன விடியற்காலை அவர்கள் அரியாலையில் நின்றனர். வானம் தூறிக் கொண்டிருந்தது. ஒரு அடி எடுத்து வைப்பதற்கு அவர்களுக்கு நிமிடங்கள் செலவானது. நாள் முழுதும் நடந்தார்கள். இரவு நடுச் சாமம் தாண்டிய பிறகு சாவகச்சேரியில் பஸ் ஸ்ராண்ட் ஒன்றுக்குள் இடம் பிடித்து பிள்ளைகளைப் படுக்க வைத்து விட்டு சிவராசன் திரும்பவும் ஊருக்குப் புறப்பட்டார். சைக்கிளை ஓடிச் செல்ல முடியவில்லை. சனங்கள் இப்பொழுதும் எதிர்த் திசையில் வந்துகொண்டிருந்தார்கள். இறங்கி சைக்கிளை உருட்டிச் செல்ல ஆரம்பித்தார். அடுத்த நாள் காலை கைதடிப் பாலத்தில் வைத்து சிவராசனை இயக்கம் மறித்து “அங்கால போக முடியாது” என்றது.

“என்ரை அம்மா அங்கை தனியக் கிடக்கிறா ... அவவைப் போய்க் கூட்டி யரவேணும். என்னை விடுங்கோ... வயசுபோன நடக்கமாட்டாத மனிசி அவ....”

“போனா வர முடியாமப் போகும். ஆமி கிட்ட நெருங்கிட்டான். கடும் சண்டை நடக்குது. நீங்கள் திரும்பிப் போங்கோ”

சிவராசனுக்கு விம்மி அழுகை வந்தது. றோட்டோரமாக குந்தியிருந்து அழத் தொடங்கினார்.

இயக்கப் பெடியனொருவன் அருகில் வந்தான். “எதுக்கும் நீங்கள் உங்கடை வீட்டு முகவரியைத் தாங்கோ.... உங்கடை ஏரியாப் பக்கம் நிக்கிற எங்கடை ரீமுக்கு அறிவிக்கிறம். அவையளாளை கண்டுபிடிக்க முடிஞ்சால் கடலால உங்கடை அம்மாவை எடுக்கலாம்”

(வலிகள் இன்னும்...)

சிக்மலிங்கம் றெஜினோல்ட்



# கூத்தால் உருவான மெலிஞ்சிமுனை

நடப்பதற்கு ஆமான தெருக்கவில்லை. பிள்ளைகள் படிப்பதற்கு ஒரு வாசிகசாலை கிடையாது. இருக்கிற பள்ளிக் கூடத்திலும் முறையான படிப்புக்கு ஆள் இல்லை. போக்குவரத்து வசதி கிடையாது. குடிப்பதற்கும் குளிப்பதற்கும் போதிய தண்ணீர் இல்லை. தொழில்கூடச் சனங்களுக்குச் சரியாக இருக்கென்றில்லை. மாரியில் குளமாகி, கோடையில் காய்ந்து தரைவையாகும் மெலிஞ்சிமுனையில் எது இருக்கிறதோ இல்லையோ பென்னாம்பெரிய தேவாலயம் இருக்கிறது. பரலோகராசாவின் ராஜ்ஜித்துக்காக கட்டப்பட்ட கோவில். அதைச்சுற்றிச் சனங்கள் இருக்கிறார்கள். மாரியில் வெள்ளத்தில் ஊறித்தெம்பி, கோடையில் வெக்கையிலும் வெயிலிலும் காய்ந்து வேகிறார்கள்.

இதைத் தவிர்த்தால், அங்கே கூத்துப் பாட்டிருக்கிறது. எல்லாத் தெருவிலும் எல்லா வீடுகளிலும் கூத்துக் கலைஞர்கள் விளைந்து போயிருக்கிறார்கள். கூத்துப் பங்கில்லாக் குடும்பங்கள் அங்கே இல்லை. தேவால்யத்திலும் கூத்திலும் எல்லோருக்கும் குடும்பப்பங்குண்டு. தலைமுறைப் பங்கு இது.

"கூத்தெங்கள் உயிருக்கு நிகர்" என்றுதான் மெலிஞ்சி முனையில் ஒவ்வொருவரும் சொல்வார்கள். மெலிஞ்சி முனையில் மட்டுமல்ல, மெலிஞ்சி முனையை விட்டு வெளியூருக்குப் போனாலும் சரி, வெளிநாட்டுக்குப் போனாலும் சரி, அங்கும் அவர்களுடைய உயிருக்கு நேர் கூத்துத்தான். கனடாவில் மெலிஞ்சி முத்தன், நோர்வேயில் தமயந்தி, அன்ரன் யேசுதாசும்... லண்டனில் யாகோப்பு... இப்படிச்செல்லுமிடத்திலும் வாழுமிடத்திலும் கூத்திலேயே லயித்து, அங்கும் கூத்தை அரங்கில் ஏற்றிப் பார்ப்பவர்கள், மெலிஞ்சிமுனை மனிதர்கள்.

நீ.வ.அந்தோனி அண்ணாவியார். பிறகு அவருடைய மகன் சவரிமுத்து அண்ணாவி. அண்ணாவி அம்புரோசு, அதற்குப் பிறகு அலெக்ஸாண்டர்... அன்ரன் யேசுதாசன், அலக்ஸாண்டர் யோன்சன்.. இப்படியே இடையறாத ஒரு நீண்ட தொடர் அங்கேயுண்டு. மெலிஞ்சி முனையை விட்டுச் சனங்கள் இடம் பெயர்ந்து, வாழ்க்கையே கேள்விக் குறியின் முன்னால் கைகட்டிக்கொண்டு நின்ற போதும் கூத்தாடிய காலங்களும் கதைகளும் மெலிஞ்சிமுனைச் சனங்களின் வரலாற்றிலிருக்கிறது.



கூத்துக்காக எதையும் செய்யத்துணிந்தவர்கள். ஒரு காலம் யாழ்ப்பாணத்தைக் கூத்தினால் கட்டியாண்டவர்கள். குருநகரில் பூந்தான் யோசப் என்றால் அதற்கு நிகராக மெலிஞ்சிமுனையில் நீ.வ. அந்தோனி அண்ணாவியார். தங்களின் தென்மோடிக் கூத்தைக் கொண்டு அவர்கள் தாளையடி, பண்டத்தரிப்பு, மண்டைதீவு, வலைப்பாடு, குடத்தனை, மாதகல், மன்னார், முல்லைத்தீவுக் கெல்லாம் போனார்கள். எல்லாமே கத்தோலிக்கக் கூத்துகள். நூறு வரையான பிரதிகளைக் காலந்தோறும் மாறி மாறி ஆடிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களே எழுதி, அவர்களே ஆடும் கூத்து.

கூத்தைத் தவிர்த்தால், அவர்களுக்கென்றொரு கடல் இருக்கிறது. அந்தக் கடலில் முள்ளும் உண்டு. மலரும் உண்டு. கடலில் கொய்வீஸ்சு கல்லடுக்கு, களங்கண்டி வலை, விடுவலை, கட்டைச் சிறகுவலை, வழிவலை, படுப்பு வலை, கொட்டு வலைகளில் தொழில் செய்வதும் சங்கு குளித்தலும் நடந்தன.

பிறகு, அடிவலை, நண்டு வலை போட்டுத் தொழில் செய்வதும் கடலட்டை பிடித்ததும். சிங்கறால், தாமரை, நாவடம் சங்கு போன்றவற்றை நீரடியில் சென்று பிடிப்பதும் தொழிலானது. கூடவே, கலவாய் வேட்டை. இதுவும் நீருக்கடியில் சென்று பாறைகளில் கலவாய், ஓரா, மதணன், கெடுத்தல் போன்ற நிலத்தடி மீன்களை வேட்டையாடுதல் என்று நடந்தது.

பிந்தைய காலங்களில் அருகி இல்லாமற் போன பாரம்பரியத் தொழில்கள்: கொய்வீச்சு கல்லடுக்கு சங்கு, நாவடம் குளித்தல்.

மெலிஞ்சி முனையில் பிடிபடும் பிரதான மீன் வகைகள், கணவாய், நண்டு கட்டா, பாரை, சீலா, சிறையா, கயல், முரல், திருவன், விளைமீன். மற்றும் கல்மீன்களான கலவாய், ஓரா, ஒட்டி, சுங்கன், மதணன், மசறி, கிளிமீன் இன்னும் சில வகைகள். மேலும் நிலத்தடி மீன்களான, சல்லி, திரளி, நகரை, கிளக்கன் போன்றவையும்.

இங்கே இன்னொரு விசேஷம், கடல் தாமரை.

(20 ஆம் பக்கம் பார்க்க...)

# இலங்கை குழந்தைகளின் நரகம்

இலங்கை தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையினால் சிறுவர் துஷ்பிரயோகம் பற்றி அதிர்ச்சியூட்டும் அறிக்கையொன்று வெளியிடப்பட்டிருக்கிறது. அதில் 2015 ஆம் ஆண்டு 10,732 சிறுவர்களும் 2016 யூலை வரை 6,548 சிறுவர்களும் துஷ்பிரயோகத்திற்குள்ளாக்கப்பட்டிருக்கிறார்கள்.

இதில் கொழும்பு (749) முதலா வது இடத்தையும் கம்பஹா (505) இரண்டாவது இடத்தையும் குருநாகல் (441) மூன்றாவது இடத்தையும் வகிக்கிறது.

யாழ்ப்பாணத்தில் 86 முறைப்பாடுகள் மட்டும் கிடைக்கப் பெற்றுள்ளது. முழு இலங்கையின் எண்ணிக்கையின்படி யாழ்ப்பாணத்தில் எண்ணிக்கை குறைவென எண்ணிச் சந்தோஷப்படுவதற்கு வாய்ப்பில்லை ஏனெனில் எமது கலாசார பண்பாட்டிற்கு இந்த எண்ணிக்கையே அதிகம் என்பதுதான் எமது கருத்து. யாழ்ப்பாணத்து எண்ணிக்கை இதைவிட அதிகமாக இருக்க வாய்ப்பு உண்டு. ஏனெனில் பிள்ளைகளினதும், குடும்பத்தினதும் நன்மைகருதி பலர் முறைப்பாட்டை தவிர்க்க வாய்ப்பு உண்டு என்று கருதுகிறோம்.

| மாவட்டம் | முறைப்பாடு |
|---|---|
| அம்பாறை | 113 |
| அநுரதபுரம் | 306 |
| பதுளை | 156 |
| மட்டக்களப்பு | 80 |
| கொழும்பு | 749 |
| காலி | 389 |
| கம்பஹா | 505 |
| அம்பாந்தோட்டை | 231 |
| யாழ்ப்பாணம் | 86 |
| களுத்துறை | 326 |
| கண்டி | 223 |
| கேகாலை | 230 |
| கிளிநொச்சி | 77 |
| குருநாகல் | 441 |
| மன்னார் | 42 |
| மாத்தளை | 103 |
| மாத்தறை | 191 |
| மொனறாகலை | 135 |
| முல்லைத்தீவு | 68 |
| நுவரெலியா | 116 |
| பொலநறுவை | 135 |
| பத்தளம் | 294 |
| இரத்தினபுரி | 336 |
| திருகொணமலை | 73 |
| வவனியா | 61 |

## தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்குக் கிடைத்த முறைப்பாடுகளின் விபரங்கள்

2016 ஜனவரி தொடக்கம் யூலை வரை




| துஷ்பிரயோகத்தின் விபரம் அல்லது வடிவம் | |
|---|---|
| கொடுமைப்படுத்தப்பட்டவர்கள் | - 1223 |
| கட்டாயக் கல்விக் கொடுமை | - 902 |
| பராமரிப்பற்றவர்கள், புறக்கணிக்கப்பட்டவர்கள் | - 480 |
| பாலியல் துன்புறுத்தல் | - 435 |
| கற்பழிப்பு | - 223 |
| பிச்சைக்கு எடுக்க தூண்டப்பட்டவர்கள் | - 181 |
| சிறுவர் தொழிலாளர்கள் | - 171 |
| பாலியல் துஷ்பிரயோகம் | - 99 |
| பிற | - 1822 |



தகவல் : தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை

நன்றி: சண்டே ரைம்ஸ்

> "இந்தியாவில் நடந்த பேச்சுவார்த்தைக்குச் சென்ற பிரபாகரன் மீசையை வழித்துவிட்டுச் சென்றாராம். ராணுவத் தளபதிகள் பகிடியாகக் கேட்டபோது, சிரித்துக் கொண்டு "சண்டைக்குச் செல்லும் போது தான் மீசை தேவை. சமாதானத்திற்கு எதற்கு?" என்றாராம்.

● யதார்த்தன்



# பிரபாகரனின் மீசை

காலையில் அம்மா "தாடி மீசையை எடு" என்று நச்சரிக்கா விட்டால் இதை எழுத தொடங்கியிருக்கவே மாட்டேன். அத்துடன் மேற்படி தலைப்பு நீங்கள் இந்தப் பத்தியைப் படிக்கத் தொடங்குவதற்காகவும் எனக்குப் பிடித்த ஒரு முக்கிய மீசைக்காரரின் மீசையின் பெயரில் பத்தியைத் தொடங்கும் சுய ஆசையினாலும் இடப்பட்டிருக்கிறது.

ஓம்.

மீசை, தாடியைப் பற்றித்தான் நானும் நீங்களும் இங்கே உரையாடப் போகிறோம். பிரபாகரன் மீசையைப் பற்றி பத்தியின் இறுதியில் தான் உரையாடப் போகின்றோம் என்பதால் கடைசிவரை படிப்பீர்கள் என்பது என் நப்பாசை.

மீசையையும் தாடியையும் ஒரு கலாசாரமாகவோ, கலை வடிவமாகவோ அழகுணர்வோடோ பார்த்த, பார்க்கின்ற உலகச் சமூகத்திலிருந்தும், உள்ளூர் சமூகத்தில் இருந்தும் வெகுதொலைவில் நிற்கின்றது தற்போதுள்ள தமிழ்ச் சமூகம்.

உதாரணத்திற்கு ஒரு கற்பனை கலக்காத சம்பவம் சொல்கின்றேன்.

கொஞ்ச நாட்களுக்கு முன்னால் யாழ்ப்பாணத்தில் வேலையில்லாத பட்டதாரிகள், வேலைதாருங்கள் என்று உண்ணாவிரதம் இருந்தனர். உண்ணாவிரதிகளுள் நண்பர் ஒருவரும் கலந்து கொண்டார். உண்ணாவிரதிகளைச் சந்திக்க வந்த வடக்கு மாகாண சபையின் அமைச்சர் ஒருவர் நண்பரின் தாடி மீசையைக் கையால் தடவி விட்டு,

"நீ ஏதோ மற்றப் 'பார்ட்டி' போல தான் கிடக்கு" என்றிருக்கிறார்.

பொதுவாக யாழ்ப்பாணத்து மன நிலையில் தாடிவளர்ப்பவர்கள் ஒரு சில விடுதலைப் போராட்ட இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்ற ஒரு மனவோட்டம் இருக்கின்றது.

ஏன் தமிழ் சினிமாவின் தாக்கத்தின் பின்னர், தாடி வைத்துக் கொள்ளல் என்பது 'தேவதாஸிசம்' என்றாகி விட்டது. ஒரு இளைஞன் தாடி வைத்திருந்தால் கண்டவுடன் கேட்பது "தாடிக்கு பின்னால் இருக்கிற லேடி யாரு?" அல்லது "என்ன சோகம்?" என்றுதான். இது தமிழ் சினிமாவினதும், தமிழ் மனோரதிய (romance) இலக்கியங்களினதும் தாக்கத்தின் தொடர்ச்சியாகும்.

யாழ்ப்பாணம் முதலான இலங்கையின் பல பல்கலைக் கழகங்களில் இருக்கும் பிற்போக்கு தனங்களில் ஒன்றான ராக்கிங்கில் அடிப்படையான அடக்கு முறை, மீசை தாடியை எடுத்து விடுவது. ஜூனியர்கள் மீசையுடனோ தாடியுடனோ வரமுடியாது. என்னைப் பொறுத்தவரை பல்கலைக்கழகம் வரும் 90 சதவீதமான ஜந்துக்கள் நாகரிகம் அடையாதவர்கள் என்றுதான் கூறுவேன். அதனால் இப்படியான மனநிலையுடன் இருப்பது ஆச்சரியமானதல்ல.

வன்னியில் இருந்த சமயம் பக்கத்து வீட்டு அக்கா இயக்கத்துக்கு போய்விட்டா அல்லது பிடித்துச் சென்றிருந்தார்கள். அதில் இருந்து அவளுடைய வீட்டாரின் முகத்தில் எப்போதும் துயரம் அப்பிக் கிடக்கும். அவளுடைய அப்பா 'ஷேவ்' செய்யாமல் தாடி வைத்திருந்தார். கொஞ்சம் கொஞ்சமாக அவருடைய முகம் தாடியினுள் புதைந்து கொண்டிருந்தது. திடீரென்று ஒருநாள் அவர் தாடி மீசையெல்லாம் எடுத்துக் கொண்டார். முகம் பழையபடி ஒளிகொள்ளத் தொடங்கியது. அவர் 'கிளீன் ஷேவிற்கு' மாறிய அடுத்தநாள் அவரிடம் போய். "என்ன அக்கா திரும்பி வந்திட்டாளா?" என்றேன். மனுசன் அதிர்ந்து போய் "உனக்கெப்பெடியடா தெரியும்?" என்றார் ரகசியமாக. "அதுதான் உங்கட முகமே காட்டிக்கொடுத்து விட்டதே" என்றேன்.

இப்ப நான் மீசையையும் தாடியையும் சேர்த்துக் கதைக்கிறேன். ஆனால் இரண்டுக்கும் நடுவில் மெல்லிய கோடுகள் ஓடிக் கொண்டிருக்கின்றன. தாடியை விடவும் மீசை அதிகம் செறிவான கலாசார, பண்பாட்டு இருப்பைக் கொண்டது. சில இடங்களில் மீசையும் தாடியும் தனித்தனியே கதைகளைக் கொண்டிருக்கின்றன.

அறிவியலின்படி மீசை - தாடி என்பது டெஸ்ட்டோஸ்டீரானின் உடலியல் விளையாட்டு. இது பருவ வயதில் சுரக்கும் போது மீசை வளரும். ஆண்களுக்கு மீசை முளைக்க அடிப்படை காரணமாக இருப்பது இந்த டெஸ்ட்டோஸ்டீரான் எனப்படும் ஹோர்மோன்தான். இந்த ஹோர்மோனின் முதல் வேலை அக்குள், பிறப்புறுப்புகளில் முடியை வளர வைப்பதாகும். அதன் பிறகு மீசை மற்றும் உடல் பகுதிகளில் ஆங்காங்கே முடியை வளரவைக்கும். பெண்களுக்கு முகத்தில் பெரும்பாலும் மீசை- தாடி வளர்வதில்லை.

மீசை என்பது ஆண்மையின் அடையாளம், மீசை என்பது ஆண்மைத் தன்மையையும், வீரத்தையும் வெளிப்படுத்தும் ஒரு குறியீடு என்ற நம்முடைய சமூகத்தின் மனநிலையை கடுமையாக கண்டிக்கின்றேன். இந்த எண்ணம் ஒரு பிற்போக்குத்தனம்.

மீசையை ஒரு கலை வடிவமாகவும், ஆண் பெண் வேறுபாடு தாண்டிய ஒன்றாகவுமே பார்க்க நினைக்கிறேன். விக்டோரியன் யுகத்தின் வரலாற்றை புரட்டும் போது மீசை என்பது ஆண் சின்னமாக அன்றி அது புரட்சியாளர்களையும் கலைஞர்களையும் குறிக்கப் பயன்படுகின்றது. மீசை கலையுடன் நெருக்கமானதாகச் சொல்லப்படுவதில் எனக்கு பிரியம் மிக்க உடன்பாடுள்ளது. மீசை தாடி என்பவற்றிலேயே அதி சிறந்த அழகுணர்வுகளைக் காட்ட இயலும்.

உதாரணத்திற்கு உலகப்புகழ் பெற்ற பெண் ஓவியர் ப்ரைடா கார்லோ (Frida Kahlo) தனக்கிருந்த மீசையை தன்னுடைய பெண் தன்மைக்குள் உள்ளடக்கியே ஓவியங்களை வரைந்தார். அவருடைய சுய பிரதிமை ஓவியங்களில் மீசை ஒரு தனியான பிரதிவாசிப்பு சார்ந்ததாக மாறி உலகப் புகழ் பெற்றது.

சர்ரியலிச (surrealism) பிரதியுருவாக்கத்தில் புகழ் பெற்ற ஓவியர் சல்வடோர்டலில் (Salvador Dali) 1954 இல் தன்னுடைய புத்தகத்தை தன்னுடைய மீசைக்குச் சமர்ப்பணம் செய்தார். அத்தனை புகழ் வாய்ந்த ஒரு மீசையை கொண்டிருந்த கலைஞர் அவர்.

புத்தர் சிலைகளையும் ஏனைய புத்த படிமங்களையும் பார்த்திருப்பீர்கள், எல்லாவற்றையும் துறந்துவிட்டு, பற்றற்று அலைந்த புத்தர் எவ்வளவு அழகாக இருக்கிறார். 'ஷேவ்' செய்து அழகாக வஸ்திரம் உடுத்து, கட்டுடலான மேனியுடன் இளவரசன் சித்தார்த்தனாக இருந்த மாதிரியே இருக்கிறார் புத்தர். உண்மையில் புத்தர் அப்படித்தான் இருந்திருப்பாரா என்ன? தாடியும் மீசையும் ஏறி, உடல் மெலிந்து என்பு தெரிய இருக்கும் புத்த படிமங்களை பார்த்திருக்கின்றீர்களா? உண்மையில் புத்தர் தாடி மீசையுடன் தான் இருந்திருப்பார்.

இந்திய கலை வரலாறு காந்தார காலத்திலே புத்த படிமங்களை ஒழுங்குபடுத்தியதாக சொல்கின்றது குறிப்பாக குஷானர்களுக்கு பிறகு புத்தர் 'ஷேவ்' செய்யப்பட்டு அமைதியின், அழகின் சொரூபமாக மாற்றப்பட்டார். அது வரை புத்த படிமங்கள் தாடி மீசையுடனேயே காணப்பட்டன. கலை வரலாற்றில் அது ஒரு பெரும் நிலை மாற்றமாகப் பார்க்கப்படுகின்றது.

மீசை- தாடி என்பன இனத்தின், சமயத்தின் அடையாள நம்பிக்கைகளுள் ஒன்றாகவும் இருக்கின்றது. உதாரணத்திற்கு முன்பு கூறியது போல தமிழ்ப் பரப்பில் மீசை, ஆண்மையின், வீரத்தின் அடையாளமாகப் பார்க்கப்பட்டிருக்கின்றது.

"விழுந்தாலும் மீசையில மண் ஒட்டேலை"

"கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசை"

"மீசை நரைத்தாலும் ஆசை நரைக்கவில்லை"

போன்ற பழந்தொடர்களை பேச்சு மொழியில் அவதானிக்கின்றோம். குறித்த இனத்தின் உடல் அரசியலில் இருந்து இது போன்ற நம்பிக்கைகள் வளர்ந்து வருகின்றன.

இதன் பின்னாலும் பல ஆயிரம் வருடத்தின் ஆணாதிக்க, அல்லது ஆண்சார்ந்த அடையாள உருவாக்கமே அடியாகக் கிடக்கின்றது. மீசை முளைக்கத்தக்க தந்தை வழிச் சமூகத்தின் அடையாளத் தொடர்ச்சியாக இதனைப் பார்க்க இயலும்.

ஆண் தன்மையை உயர்த்திக் காட்டுவதற்கு மீசை ஒரு குறியீடாகக் கையாளப்பட்டு வருகின்றது. உண்மையில் குரங்கிலிருந்து நேர்க் கூர்ப்படைதல் என்பதில் ரோமங்களை இழத்தல் முக்கிய மரபணு மாற்றமாகவே குறிப்பிடப்படுகின்றது.

(18 ஆம் பக்கம் பார்க்க...)

புதுவிதி
PUTHU VITHI

107, இராசவீதி,
கோப்பாய் - திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
puthuvithi@gmail.com
T.P: 021 493 7777

## அரசியல் கைதிகளுக்கு விடிவில்லையா?

எப்படி முடிவின்றி இலங்கையில் இனப் பிரச்சினை நீள்கிறதோ அதேயளவுக்கு சற்றும் சளைக்காத சமாந்தர நீட்சியைக் கொண்ட இன்னொரு விடயம் அரசியல் கைதிகள் விவகாரம். "இலங்கையில் அரசியல் கைதிகள் என்று எவருமில்லை" என்று உலகத்தின் முன்னால் இலங்கை அரசு கற்பூரத்தை அணைத்துச் சத்தியம் செய்த போதிலும், உண்மையில் இன்னும் நூற்றுக் கணக்கான அரசியல் கைதிகள் தங்கள் விடுதலை எப்போது என்று தெரியாமல் ஏங்கிக் கொண்டு இருக்கிறார்கள்.

பல நூறு கோடிகளை விழுங்கிய மோசடி முதலைகள், தம் அரசியல் மற்றும் குடும்பத்துக்கு எதிரானோரை ஈவிரக்கமின்றி கொன்ற திமிங்கிலங்கள் எல்லாம் கல்யாண வீட்டுக்கு போய் வருவது போல, சிறைக்கு சென்ற சில மணித்தியாலங்களிலேயே வீட்டுக்கு திரும்பி விடுகிறார்கள். ஆனால் "என்ன குற்றத்துக்காக கைது செய்யப்பட்டோம்?" என்று இதுவரை தெரியாமல் இருக்கும் அரசியல் கைதிகளோ 20, 30 வருடங்களாக சிறைகளுக்குள்ளேயே அடைபட்டு இருக்கிறார்கள். இதில் வேடிக்கை என்னவென்றால் அரசியல் கைதிகள் சிலரை ஏன் பிடித்தோம் என்று கைது செய்தவர்களுக்கே தெரியாது. "இவ்வளவு 'பயங்கரவாதிகளை' பிடித்தோம்" என்று கணக்குக் காட்ட, கண்ணில் அகப்பட்டவர்களை எல்லாம் கைது செய்து கம்பி எண்ண வைத்தால், எப்படி நினைவிருக்கும் ஏன் பிடித்தோம் என்று?

சிறையில் வாடும் அரசியல் கைதிகளை புனர்வாழ்வளித்த பின் விடுவிப்பதாக முன்னர் சொல்லப்பட்டது. அதன் பின்னர் ஒகஸ்ட் 8 க்குள் அரசியல் கைதிகள் தொடர்பில் சாதகமான முடிவொன்று அறிவிக்கப்படும் என ஜனாதிபதி மைத்திரி கூறியிருந்தார். அந்தக் கூற்றும் நீர் மேல் எழுத்துத்தான். அதனால் இன்னமும் தாங்கள் சிறைகளுக்குள்ளேயே இருப்பதை அதிகார பீடத்துக்கு நினைவூட்ட, அரசியல் கைதிகள் தங்களின் வழக்கமான ஆயுதமான உணவுதவிர்ப்பில் இறங்கியுள்ளனர். இந்த முறையும் "கைதிகள் விடயம் பற்றி மிக விரைவில் இறுதித் தீர்மானம்" என்ற உறுதிமொழி அரசதரப்பால் கைதிகளுக்கு வழங்கப்பட்டு, அதன் பின்னர் சில நாள்கள் கைதிகளின் போராட்டம் தள்ளி வைக்கப்படலாம். ஆனால் இனியும் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தசாப்தக் கணக்கில் கம்பி எண்ணிக் கொண்டிருக்கும் அப்பாவிகளை விடுவிக்காமல் வைத்திருப்பது நல்லாட்சிக்கு அழகல்ல.

"போர் முடிந்து விட்டது" என்கிறார்கள். "புலிகள் முற்றாக அழிக்கப்பட்டு விட்டார்கள்" என்கிறார்கள். அப்படி புலிகள் முற்றாக அழிக்கப்பட்டுவிட்டது உண்மையெனில் சிறைக்குள் இருப்பவர்கள் அனைவரும் அப்பாவிகள் என்பது தானே நேர்மாறு விகித சமனில் நிறுவப்படுகின்றது. போரும் இல்லை, புலிகளும் இல்லை என்று உறுதியாகத் தெரிந்த பின்னரும் "என்ன சீலம்பாய்க்கு விடாமல் வைச்சிருக்கிறாங்கள்?" என்பதே அரசியல் கைதிகளின் உறவினர்களின் மில்லியன் ரூபா பெறுமதியான கேள்வியாக இருக்கின்றது. இதே கேள்வியை ஆட்சிப் பீடத்தில் அமர்ந்திருப்பவர்கள் ஒரேயொரு முறை தங்களைக் கேட்டுக் கொண்டால், அப்போதேனும் அவர்களின் மனச்சாட்சி விழித்து, அரசியல் கைதிகளின் எஞ்சிய காலமாவது ஒளியுடன் பயணிக்க ஏதுவாகும். ●●●

'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!'



# வடக்கில் அதிகரிக்கும் விவாகரத்துகள் திகைக்க வைக்கும் பின்னணி

ஒரு பஸ் பயணம்.

பக்கத்திலிருந்தவர் பேப்பரை வாசிப்பதும், அது பற்றிய 'பொழிப்புரை' ஒன்றைச் சொல்வதுமாக யாழ்ப்பாணத்தின் கந்தபுராணக் கலாசாரத்தை காத்தபடி வந்தார். அவருக்குப் பக்கத்தில் இருந்தவரின் முகம் தொய்ந்து போயிருந்தது. செல்போனில் கதைத்தபடியே மோட்டார் சைக்கிளில் சென்றதால், நீதிமன்றில் தண்டப்பணத்தைக் கட்டிவிட்டு வருபவரின் முகம் அப்படித்தானே இருக்கும்.

"செல்போனை ஹெல்மெட்டுக்க மறைச்சு வைச்சு கதைச்சுக் கொண்டு போயிருந்தா பிடிபட்டிருக்க தேவையில்லையே. சரி 'பைன்' கட்டிட்டீங்கள் தானே இனியுமேன் யோசிக்கிறீங்கள்" என அவரது தொய்ந்த முகத்துக்கு, 'ரியூப் லைட்' பூட்ட முயன்றேன்.

"எனக்கு தண்டப்பணம் கட்டினதைப் பற்றிக் கவலையில்லை அண்ணை ஆனா அங்க நடந்த இன்னொரு விசயத்தைப் பற்றித்தான் யோசிச்சுக் கொண்டிருக்கிறன்" என்றார் அவர்.

"அப்பிடி என்ன விசயம்?"

"இண்டைக்கு ஒரு நாள் மட்டும் 43 விவாகரத்துக் கேஸ் கோர்ட்டில நடக்குது. இப்பிடியே போனா இன்னும் நாலைஞ்சு வருசத்தில விவாகரத்து செய்யாத ஆக்களை தேடித்தான் கண்டுபிடிக்க வேணும் போல" சொல்லிவிட்டு மீண்டும் யோசிக்கத் தொடங்கிவிட்டார்.

● ● ●

விவாகரத்துகள் மலிந்த பூமியாக வடமாகாணம் மாறத் தொடங்கிவிட்டது. அப்படியானால் இலங்கையின் ஏனைய பகுதிகளில் விவாகரத்துகள் இடம்பெறுவதே இல்லையா? என்று சிலர் கேட்கலாம். எல்லா இடமும் விவாகரத்துகள் இருக்கின்றன தான். ஆனால் ஏனைய இடங்களை விடவும் வடக்கில்-அதன் கலாசாரத் தளத்தில்-விவாகரத்து என்பது சமூக நம்பிக்கைகளைக் குழிதோண்டிப் புதைக்கின்ற விடயம். அதனால் தான் "கல்லானாலும் கணவன். புல்லானாலும் புருசன்" என்று தங்கள் கணவன் செய்யும் அத்தனை அக்கிரமங்களையும் மனதில் புதைத்துவிட்டு, கடைசி மட்டும் அவரோடே வாழவேண்டிய நிலை பெண்களுக்கு இருந்தது. அதே போலவே ஆண்களும் தமக்கு ஒவ்வாத, அல்லது தன் ரசனைக்குப் பொருந்தாத மனைவியோடு குடும்பக் கௌரவம் என்ற ஒரே காரணத்துக்காக இணைந்து வாழ வேண்டியிருந்தது. இதைவிட மனதளவில் எதிரெதிர் நிலைகளில் பிரிந்து வாழும் தம்பதியரும், வீட்டுக்குள் தனித்தனிக் குடும்பங்களாக நடந்து கொண்டாலும் சமூகத்துக் காக "ஈருடலும் ஓருயிரும் கொண்ட" தம்பதியர் போலவே நடந்து கொள்ளவும் செய்தனர். சமூக நன்மதிப்பு, குடும்பக் கௌரவம் எனும் சில மரபார்ந்த தன்மைகளுக்காகவே வேண்டாத் துணைவர்களோடு வாழ்வைத் தொடர்ந்தும் பகிர வேண்டிய கட்டாயம் இருந்தது.

எனினும் அந்தக் கட்டிறுக்க நிலை மெதுவாகத் தளர்வடைந்து இப்போது விவாகரத்து என்பது சந்தையில் போய் மரக்கறி வாங்குவதைப் போல சாதாரண விடயமாகி விட்டது. அதற்காக விவாகரத்து என்பது சமூக மேம்பாடான விடயம் என்றோ அல்லது சமூகச் சீரழிவான விடயம் என்றோ எடுத்த எடுப்பில் தீர்ப்பெழுத முடியாது. சந்தர்ப்பங்களையும், மனித நடத்தைகளையும் பொறுத்தே விவாகரத்து வரமா? சாபமா ? என்று தீர்மானிக்க முடியும். விவாகரத்தை எதிர்க்கும் அதேயளவு எண்ணிக்கையினர் அதை ஆதரிக்கவும் செய்கின்றனர்.

விவாகரத்து சரியா, பிழையா என்பதற்கப்பால் அதன் திடீர் அதிகரிப்பு வேறு சில செய்திகளைச் சொல்லி நிற்கிறது. விவாகரத்து என்பது காய்ச்சல் மாதிரி. காய்ச்சல் உண்மையில் ஒரு நோய் அல்ல. வேறு சில நோய்களின் அறிகுறி. எனவே காய்ச்சலுக்கான சிகிச்சையில் அதற்குக் காரணமான பிரதான நோயே கருத்தில் கொள்ளப்படுகிறது. அதேபோன்றுதான் திடீரென வீங்கிப் பெருத்துள்ள விவகாரத்துகளுக்கான அடிப்படைக் காரணங்களைக் கண்டறிந்து அவற்றினைத் தீர்ப்பதன் மூலமே எதிர்காலத்தில் ஆரோக்கியமான சமூக அமைப்பொன்றைக் கடியெழுப்ப முடியும்.

தமக்கு விருப்பமற்ற துணையோடு வாழும் சிக்கலான நிலையில் இருந்து விடுபட விவாகரத்து/ மணமுறிவு ஒரு நிவாரணியாக இருந்தாலும், பிரிந்து வாழ்தல் என்பது சமூகச் செழுமைக்கு உதவாது. அப்படியானால் முன்னரைப் போல சமூக நலன் தான் முக்கியம் என, பிடிக்காதவரோடு சேர்ந்து வாழத்தான் வேண்டும் என்றில்லை. விவாகரத்து கோருவதற்கான அடிப்படைக் காரணிகளைக் களையவேண்டும். அதன் மூலம் குடும்பங்களுக்குள் நிகழும் பூசல்கள் குறைவடைந்து, விவாகரத்துக் கோருவதற்கான வாய்ப்புகள் அருகிவிடும்.

மணமுறிவுக்கு பெண்கள் தமது தரப்பில் சில காரணங்களையும், ஆண்கள் தங்கள் பக்கத் தில் சில காரணங்களையும் அடுக்குகிறார்கள்.

## பெண்கள் சொல்லும் காரணங்கள்

**1. கணவரால் ஏற்படுத்தப்படும் உடல்ரீதியான துன்புறுத்தல்கள்**

தமிழ்ச் சமூகத்தில் எப்போதும் ஆணே முதனிலைப்படுத்தப்படுகிறான். பெண் அவனுக்கு அடங்கிப் போக வேண்டியவளாகவே பார்க்கப்படுகிறாள். இத்தகைய ஆணாதிக்கச் சமூக மனோநிலை சிறு பிரச்சினைகளையும் வன்முறை மூலம் தீர்த்துக் கொள்ள முனைகிறது. அதன் வெளிப்பாடாக கணவன் தன்னுடைய பேச்சுக்கு மனைவி எதிர்ப்பேச்சு பேசினால், அதைக் கருத்தால் எதிர்கொள்ளாமல், எடுத்த எடுப்பிலேயே அடிதடியில் இறங்கி விடுகிறான். தான் வைத்த சட்டம் பிழை என்றாலும் அதை மனைவி தட்டிக் கேட்கவோ சுட்டிக் காட்டவோ கூடாது. அப்படிச் செய்தால் அடிதான். இப்படி நித்தமும் குடும்ப வன்முறைக்கு உள்ளாக்கப்படும் பெண் தன் பொறுமையின் முடிவுப்புள்ளியை எட்டியதும் விவாகரத்தை நாடுகிறாள்.

**2 .அளவுக்கதிகமான போதைப்பாவனை**

உழைக்கும் பணத்தின் பெரும் பகுதியை போதைப் பொருளுக்காக செலவிடுதல், போதை தலைக்கேறிய நிலையில் வீட்டுக்கு வந்து சண்டை பிடித்தல் என்பவற்றால் குடும்ப பொருளாதாரமும், சந்தோஷமும் சரிந்து விடுகின்றன. எத்தனை நாளுக்குத்தான் வீட்டில் பிள்ளைகள் பசித்திருக்க, கையிலே உள்ள காசுக்கு குடித்து விட்டு வந்து, வீரம் காட்டும் கணவனை மனைவி சகிக்க முடியும்.

(06 ஆம் பக்கம் பார்க்க...)

K

**3. பிற பெண்களோடு இரகசியத் தொடர்பு**

மனைவி வீட்டில் இருக்க வேறு பெண்/பெண்களுடன் கணவனுக்கு பாலியல் ரீதியான இரகசியத் தொடர்புகள் ஏற்படுவது இப்போது சாதாரணமான ஒன்றாகி விட்டது. அத்தகைய தொடர்புகளை கைவிடச் சொல்லி மனைவி நேரடியாகவும், மறைமுகமாகவும் புத்தி சொன்னால், அதற்குக் காது கொடுக்காமல், தொடர்ந்தும் அத்தகைய பாலியல் சகவாசங்களை கணவன் தொடர்கின்ற போது, மனைவி விவாகரத்தை நாடுகின்றாள்.

**4. கணவன் வீட்டாரின் தலையீடு**

கணவன் - மனைவி உறவு நிலை சார்ந்த விடயங்களில் கணவன் வீட்டார் தேவையற்றுத் தலையிடும் போது, சாதாரண பிரச்சினையும் பூதாகரமாக மாறி, தீர்க்க முடியாத முரணாக மாற்றம் அடைந்து கடைசியில் விவாகரத்து வரை வந்து விடுகின்றது.

**5. கணவரின் அடாவடியில் இருந்து பிள்ளைகளைப் பாதுகாத்தல்**

தினமும் குடும்பத்துக்குள் நிகழும் சண்டைகளின் போது கணவன் தன் கட்டுப்பாட்டு நிலையை மீறி, குழந்தைகளைத் தாக்குதல், வீட்டுப் பொருள்களை உடைத்தல் என்பவற்றில் ஈடுபடுவர். இதனால் குழந்தைகள் உடல், உள ரீதியாக பாதிப்படைவதால் அவர்களின் எதிர்காலத்துக்காக கணவனைத் துறக்கும் முடிவை பெண்கள் எடுக்க நேர்கிறது.

**6. அயலவர்கள் கேலி செய்யும் வகையில் அமையும் கணவரின் நடவடிக்கைகள்**

உரத்த தொனியிலான தகாத வார்த்தைப் பிரயோகம், மனைவியின் நடத்தை பற்றிய கேவலமான சித்திரிப்புகள், குடிபோதையில் வீதிகளில் அலங்கோலமாகக் கிடத்தல் போன்ற ஆணின் செயற்பாடுகள் பெண்ணுக்கு அவள் வாழும் சூழலில் தலைக்குனிவை ஏற்படுத்துகின்றன.

**7. பொய் சொல்லித் திருமணம் செய்ததால் உண்டாகும் மனக்கசப்பு**

திருமணத்துக்காக வேலை, பதவி, சமூக அந்தஸ்து, சொத்து போன்ற விடயங்களில் கணவன் பொய் சொல்லி, திருமணத்தின் பின்னர் தெரிய வரும்போது பெண் தான் ஏமாற்றப்பட்டதை உணர்கிறாள். அந்த ஏமாற்றம் அதிகரிக்கும் போது கணவன் மீது அவநம்பிக்கை ஏற்பட்டு பிரிய முடிவெடுக்கிறாள்.

**8. பொருத்தமற்ற தன்மை**

பாலுறவு, இரசனை,பழக்க வழக்கங்கள், சமூக அந்தஸ்து என்பன போன்ற காரணிகளால் தனக்கும் தன் கணவருக்கும் மணவாழ்வு பொருந்தாது என முடிவெடுக்கும் பெண்களும் விவாகரத்தையே நாடுகிறார்கள்.

**9. மனநலக் குறைபாடு**

திருமணத்துக்கு முன்/பின் கணவருக்கு மனநலம் குன்றுவதால் பெண் தன் வாழ்வை காப்பாற்ற மணமுறிவுக்கு செல்கிறாள்



அண்மைக்காலமாக விவாகரத்துகள் இங்கு அதிகரிக்கும் விடயமானது, எதேச்சையாக நடைபெறுகின்றது என்றோ, திட்டமுட்டு நடைபெறுகின்றதென்றோ என்று சொல்வதற்கில்லை.அவை விபத்தாகவும் இல்லை. நாளாந்த செயற்பாடு களின் திரட்டாகத் தான் நான் இதனைப் பார்க்கிறேன். பெண்களை அடிக்கலாம் அல்லது திட்டலாம் என்ற துணிச்சலையும், ஆணுக்குப் பெண் அடங்கிப் போக வேண்டும் என்ற வழிகாட்டலையும் தான் சமூகம் எமக்குக் கற்றுத் தந்திருக்கிறது. அத்தகைய வழிகாட்டலையும், ஆண்களுக்கு கீழ்ப்படியுமாறு வற்புறுத்துவதையும் கேட்டுக் கேட்டே வளர்ந்திருக்கிறோம். வன்முறைகள் அதிகரிப்பதற்கு ஆண்களின் பழக்கவழக்கங்களும் அவர்களது மனோபாவமும் பெருமளவில் பங்காற்றுகின்றன. வறுமை, மதுபோதைப் பாவனை, புரிந்துணர்வற்ற தன்மை, ஏனைய குடும்ப உறவுகள் அல்லது நண்பர்களின் தலையீடு, ஊடகங்களின் தாக்கங்கள், சமூகத்தில் பிறர் சார்ந்த ஒப்பீடுகள், நுகர் பொருள் கலாசாரம் என்பனவற்றினூடாக ஏற்படுகின்ற கருத்து முரண்பாடுகள் குடும்ப உறவுமுறைகளில் விரிசலை ஏற்படுத்துகின்றன. இதனால் ஏற்படுகின்ற சலிப்பும், குடும்பப் பற்றற்ற நிலைமையும் வன்முறைக்கு வித்திடுகின்றன.

கடந்த பத்து ஆண்டுகளுக்கு முன்பு, இத்தகைய குடும்ப வன்முறைகள் குடும்பத் தலைமைகளால் உதாசீனப்படுத்தப்பட்டன. கணவனும் மனைவியும் தங்களுக்குள்ளேயே பேசித் தீர்த்துக்கொள்ள வேண்டிய பிரச்சினையென்று ஒதுங்கியிருந்தனர் உறவினர்கள். இவற்றை குடும்பவன்முறைகள் என அடையாளப்படுத்தக் கூடிய அறிவு அவர்களிடம் இருக்கவில்லை. ஆனால் நிலைமை தற்போது மாறியிருக்கிறது. வன்முறைகளை இனம் காணும் பக்குவத்தை அவர்களுக்கு ஏற்படுத்தியிருக்கிறோம். இதனால் குடும்பங்களில் வன்முறைகளின் விகிதம் குறைந்திருக்கிறது. வன்முறைகள் அற்றுப் போனால்தான் விவாகரத்தை இல்லாதொழிக்கலாம். அது தற்போது முழுமையாகச் சாத்தியப்படாது. ஏனெனில் வன்முறையென்பது எம்மையறி யாமலே எமது இரத்தத்தில் ஊறிய விடயம். எனவே பாடசாலைக் கல்வி முறையிலே ஒரு மாற்றத்தைக் கொண்டு வருவதன் மூலமே நாம் இத்தகைய வன்முறைகளை ஒழிக்கமுடியும்.

**• உதயனி நவரத்தினம்**

(மாவட்ட இணைப்பாளர், பெண்கள் அபிவிருத்தி, யாழ்.மாவட்ட செயலகம்.)

பெரும்பாலும் இளவயதினரே விவாகரத்தை விரும்புகின்றனர். யாழ்ப்பாண மரபின்படி தனது கணவன் இன்னொருவரோடு உறவு வைப்பதைப் பெண்கள் விரும்புவதில்லை. வயது வந்த பெண்கள் அல்லது வயது வந்த பிள்ளைகள் உள்ளவர்கள் விவாகரத்தை விட தாபரிப்பு வழக்கு களுக்கே செல்கின்றனர். ஏனெனில் தங்களையும் பிள்ளைகளையும் பேணுவதே அவர்கள் குறிக்கோள். மறுமணம் செய்யவேண்டுமென்ற எண்ணமும் அவர்களிடமில்லாததும் ஒரு காரணம்.

தற்போது வழமையின்படி 25 - 28 வயதெல்லையை அடைகின்றபோது தான் அநேகமான திருமணங்கள் நடைபெறுகின்றன. இவை பெரும்பாலும் பெற்றோரால் நிச்சயிக்கப்பட்ட திருமணங்கள். இதற்கு கல்வி, வேலை என்பன காரணிகளாக இருக்கின்றன. ஆனால் இளவயதில் காதல் வசப்பட்டு, பாலியல் ஈர்ப்பினால் 20 வயதுக்கு முன்பாகத் திருமணம் செய்து கொள்ளும் போக்கும் அதிகரித்தே வருகின்றது. இப்படிப்பட்ட சமயங்களில் அவர்கள் தமது தராதரத்தைப் பற்றியோ அல்லது சமூக சட்ட திட்டங்களைப் பற்றியோ சிந்திப்பதில்லை. தமது ஆசைகளும், உடல் பசியும் தீர்க்கப்பட்ட பின்னரே அவர்கள் வாழ்க்கையின் பெறுமதி பற்றியும் தமது பங்காளிகள் பற்றியும் சிந்திக்கிறார்கள். இதில் திருப்திப்படாதவர்களே அதிகம் விவாகரத்தை நோக்கி செல்கின்றனர்.

ஆண்களால் பெண்கள் பாதிக்கப்படுவதுபோல ஆங்காங்கே பெண்களால் பாதிக்கப்பட்ட ஆண்கள் கதையும் உண்டு.

போருக்குப் பின்னால் உருவாகியிருக்கின்ற சமூகப்பிரச்சனையாகவே விவாகரத்து அதிகரிப்புச் சம்பவங்களை கருதலாம். வன்னியில் வாழ்ந்த சமயம் கட்டுப்பாடுகள் அதிகம். அப்போது இப்படிப்பட்ட பிரச்சனைகள் நடைபெற்றது குறைவு. தற்போது சமூகக் கட்டுப்பாடுகள் அற்ற தான் தோன்றித்தனமான சமூக அமைப்பில், சுதந்திரம் என்ற போர்வையில் என்னென்னவோ எல்லாம் நடைபெறுகின்றன. இதற்குத்துணைபோவதைப் போல தொலைக்காட்சி நிகழ்ச்சிகளும் ஒளிபரப்பாகின்றன.

குடும்ப வன்முறைகளுக்கு விவாகரத்தே தீர்வு என்ற மனோநிலையை வகுப்புக்கள் மூலமும், பயிற்சிப்பட்டறைகளை நடத்தியும் மாற்றிவிடலா மென்று எண்ணுவது தவறு.

**• பெண் சட்டத்தரணி ஒருவர்**

# ஆண்கள் சொல்லும் காரணங்கள்

**1. பிற குடும்பங்களுடனான ஒப்பீடு/நுகர்பொருள் கலாசாரம் பற்றிய ஏக்கம்**

அக்கம் பக்கத்தில் உள்ளவர்களின் நிலையோடு தங்கள் குடும்ப நிலையை ஒப்பிட்டு பேசுதல். அவ்வாறு தங்கள் குடும்பத்தின் கீழ் நிலைக்கு கணவனின் இயலாமையே காரணம் என சொல்லுதல் என்பன தொடர்கதையாகும் போது ஆண் தன் மனைவியை பிரிய விரும்புகிறான்.

**2. சீறிப்பாயும் மனைவி**

எந்த விடயத்தையும் சீர்தூக்கிப் பார்க்காமல் கணவனுடன் எதற்கெடுத்தாலும் சீறிப்பாயும் பெண்களும் இருக்கவே செய்கிறார்கள். இத்தகைய மனைவிகள் உள்ள வீட்டில் எந்த நாளும் கணவனால் நிம்மதியாக இருக்க முடிவதில்லை. நிம்மதிக்கான தேடல் விவாகரத்தில் முடிகிறது.

**3.குடும்ப தேவைகளை சரிவரக் கையாள மறுப்பது / தொலைக்காட்சி போன்ற ஊட கங்களில் மூழ்கி குடும்பத்தைக் கவனியாது விடல்**

பிள்ளைகள் பராமரிப்பு, வீட்டைப் பராமரித்தல், சமையல் போன்ற விடயங்களை மனைவி கவனிக்காதிருத்தல்.அத்துடன் தொலைக்காட்சி, பேஸ்புக் போன்றவற்றுக்குள் மூழ்கும் நிலையால் மனைவியால் குடும்பத்தைக் கவனிக்க முடியாத தன்மை தோன்றும். இதனை ஆண்கள் பொறுக்க முடியாமல் விலக நினைக்கிறார்கள்.

**4.இரகசியத் தொடர்புகள்**

பெண்களுக்கு பிற ஆண்களுடன் ஏற்படும் பாலியல் தொடர்புகள் கணவனுக்கு தெரிய வரும்போது, அதுவும் விவாகரத்துக்கு வழி கோலுகின்றது.

**5.உளவியற் சிக்கலுக்கு ஆளாவது**

மனப்பிறழ்வால் மனைவி பாதிக்கப்படும் போது அவளுடன் வாழப்பிடிக்காத கணவன் விவாகரத்தைக் கோருகின்றான்.

**6.பாலியல் திருப்தியின்மை**

ஒரு ஆண் விரும்புகின்ற பாலியல் சுகத்தை பெண் கொடுக்க முடியாமல் போகின்ர போது, அவன் மனைவியை துறக்க நினைக்கிறான்.

● ● ●

இந்தக் காரணிகளை விட இருதரப்புக்கும் பொதுவான பல பின்னணிகளும் விவாகரத்தை தூண்டுகின்றன. இன்னொரு புதிய துணையுடன் சேர்வதற்காக பழைய மணவாழ்வை தூக்கியெறிதல், பழைய காதல் தொடர்புகள் மீளுயிர்த்தல், திருமணம் தன் வாழ்வுக்கு தடை என நினைத்து அதை உதற நினைத்தல் என இன்னும் பல பின்னணிகள் விவாகரத்துகளில் ஒளிந்திந்திருக்கின்றன.

"என்ர புருசன் ஆபாசப்படங்களில வாற பொம்பிளையள் மாதிரி நானும் படுக்கையில அவரோட நடக்கவேணுமெண்டு ஆய்க்கினை பண்ணுவார். எனக்கு அதுகள் பிடிக்கிறேலை. அதால தான் டிவோர்ஸ் கேஸ் போட்டு இருக்கிறன்" என்று சொல்லும் பெண் போல, விநோதமான காரணங்களும் அண்மைக் காலமாக வடக்கில் மணமுறிவுகளை அதிகரிக்கச் செய்திருக்கின்றன.

பிரிவதை விடவும் இணைவதில் தான் சமூகம் மேம்பாடடைகிறது. எனவே விவாகரத்துக்கான காரணிகளை இல்லாதாக்கினால், விவாகரத்துக்கான தேவைகளே இல்லாமல் போய், மகிழ்வான வாழ்வு வாய்க்கும். வடக்கில் அந்த மகிழ்வை உண்டு பண்ணுவது ஒவ்வொரு கணவன், மனைவி கையில்தான் உள்ளது.

## அவளும் பெண் தான்

"பிரித்தானியாவில் தெரேஸாமே. ஜேர்மனியில் அஞ்சலோ மெர்கில்.அமெரிக்காவில் நிச்சயம் ஹிலாரி தான் வருவாள்... உலகின் சக்தி வாய்ந்த நாடுகளில் எல்லாம் பெண்கள் சாம்ராஜ்யம்.. எப்பேர்ப்பட்ட விடயம் இது. உலகமே இனி பெண்களின் ஆளுமையின் கீழ்... உலகில் பெண்கள் மீதான அனைத்து அடக்கு முறைகளும் குறையலாம்.." என்று காலை நேரம் பெருமிதத்துடன் படித்த அந்தப் 'பர பர' கட்டுரை நினைவுக்கு வர, மூச்சு விட முடியாத மாலை நேர பஸ்ஸில் சிக்கி, வேர்த்து, கசங்கிய காகிதமாய் மாறிப் போய் இருந்த அந்த 'கவர்மண்ட்' சேவகி, தனக்குள்ளே கேலியாய் புன்னகை செய்து கொண்டாள்...!

-ஸபர் அஹமட்

## வர்ணங்களால் வளமாகும் வாழ்வு



நல்லாட்சிக் காலத்தில் கண்ணுக்குத் தெரிந்தும் தெரியாமலும் அக்கிரமங்கள் தொடர்ந்தாலும், ஒரு சில நல்ல காரியங்களும் நடக்கத்தான் செய்கின்றன. எப்படி அக்கிரமங்களை எதிர்க்கிறோமோ அப்படியே நடக்கின்ற நல்ல விடயங்களையும் பாராட்டத்தான் வேண்டும்.

குளிர்பானங்களின் சீனியின் செறிவை வெளிப்படுத்தும் விதத்தில் அவை அடைக்கப்பட்டுள்ள, போத்தல் மூடிகளுக்கு ஒவ்வொரு விதமான குறியீட்டு வர்ணங்கள் பயன்படுத்தப்பட வேண்டுமென அரசு உத்தரவிட்டுள்ளது. 100 மில்லிலீற்றர் போத்தலுக்கு 11 கிராமிற்கு அதிகமாக சீனி கலக்கப்பட்டிருக்குமாயின், குறித்த குடிபான போத்தல்களின் மூடிகள் சிவப்பு நிறத்திலும், 2 கிராமிற்கும் 11 கிராமிற்கும் இடையிலான குளிர்பான போத்தல்களுக்கு மஞ்சள் நிற மூடியும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

ஆகவே சிவப்பு வர்ண மூடி கொண்ட குளிர்பானங்கள் அதிக சீனி கொண்டவை என்பதை மக்கள் இலகுவாக அடையாளம் காண முடியும். இதனால் இயன்ற வரை அவற்றின் பாவனையைத் தவிர்த்து, நீரிழிவு போன்ற நோய்களில் இருந்து தற்காத்துக் கொள்ள முடியும். இப்போது இன்னொரு நல்ல செய்தி என்னவெனில், சீனியைப் போன்றே உணவுப்பொருள்களில் உள்ளடக்கப்பட்டுள்ள உப்பின் அளவையும் கண்டறிய இது போன்ற வர்ணக் குறியீடுகளை இடுமாறு அரசு உத்தரவு பிறப்பிக்கவுள்ளது. எளிமையான வகையில் தங்கள் ஆரோக்கியத்துக்கு ஏற்ற வகையிலான உணவு நுகர்வு முறையினை மக்கள் கைக்கொள்ள இப்படியான வர்ணக் குறியீட்டு முறைகள் வரவேற்கப்பட வேண்டியவையே.

## ஈழம், புரட்சி, கள்ளு, மொந்தை







ஒரு காலத்தில் ஈழம், புரட்சி என்ற கோஷங்களோடு புறப்பட்ட பலரும் இப்போது தங்களின் இருப்புக்காக அந்தப் பதங்களையே மறக்கத் தொடங்கியிருக்கிறார்கள். உண்மையில் சில இயக்கங்கள் 90 களிலேயே "ஈழக் கொள்கையும் வேண்டாம் சோளக் கொல்லையும் வேண்டாம்" என்று அலறியபடி, அதிகாரத்தின் நிழலில் ஒதுங்கிக் கொண்டு, மக்களுக்கு எதிராக தங்கள் துவக்குகளை நீட்டியவர்கள் தான். அப்படி நீட்டியமைக்கு அவர்கள் சொல்லிக் கொண்ட காரணம், "புலிகள் எங்களைச் சகோதரப்படுகொலை செய்கிறார்கள். அவர்களிடம் இருந்து தப்பவே இப்படி அரசின் பக்கம் சேர்ந்தோம்" என்பது தான். ஆனால் அப்படி புலிகளிடம் தப்பிக்க அரசின் பக்கம் சேர்ந்தவர்கள் ஏன் மக்களை இம்சைப்படுத்தினார்கள்? என்ற கேள்விக்கு பதிலே இல்லை.

சரி. அதெல்லாம் பழங்கதை. 90 களில் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை ஏற்ற கட்சி/ ஆயுதக்குழு ஈ.பி.ஆர்.எல்.எப் என்கிற ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி. வடக்கு - கிழக்கு மாகாணசபைத் தேர்தலிலும் அந்தக் கட்சியே வெற்றி பெற்றது. கடைசியில் மீண்டும் புலிகளின் ஆட்சி வரப்போவதை அறிந்து, அவசரத்தனமான "தமிழீழப் பிரகடனத்தை" செய்துவிட்டு ஓடியே விட்டார்கள். அதன் பின்னர் அந்தக் கட்சி சில கூறுகளாகப் பிரிந்தது. டக்ளஸ் தேவானந்தா ஈ.பி.டி.பி என தனி ஆவர்த்தனம் தொடங்க, சுரேஷ் பிரேமச் சந்திரன் இன்னொரு கன்னையாகப் பிரிந்து புலிகளின் நெருக்கத்தை விரும்பினர். இந்த இரு பிரிவுகளிலும் சேர்க்கப்படாமல் தனித்துவிடப்பட்டவர்கள் "பத்மநாபா ஈ.பி.ஆர்.எல்.எப்" என இயங்கி வந்தார்கள்.

நீண்டகாலம் இந்திய அரசின் பாதுகாப்பில் இருந்துவிட்டு, நாடு திரும்பிய ஈ.பி.ஆர்.எல்.எப் கட்சியின் முதுகெலும்பான வரதராஜப் பெருமாள் கட்சியைப் புனரமைக்க விரும்பினார். ஆனால் ஏற்கனவே மக்களால் ஒதுக்கப்பட்ட கட்சிக்கு வரதர் எவ்வளவோ முயன்றும் கடைசிவரை காற்று ஏற்றவே முடியவில்லை. எனவே புதிய மொந்தையில் பழைய கள்ளைக் கொடுத்தால் மக்களிடம் சிலவேளை எடுபடலாம் என்று வரதர் அணியினர் நினைத்திருக்கிறார்கள். அதனால் உடனடியாக கட்சிக்கு 'தமிழர் சமூக ஜனநாயகக் கட்சி' என்ற புது 'லேபிளை' ஒட்டி அதை உத்தியோகபூர்வமாக அறிவிக்கவும் செய்துள்ளார்கள். கள்ளை மாற்றாமல் மொந்தையை மாற்றுவதால் யாருக்கும் எந்தப் பலனும் ஏற்படப்போவதில்லை. கள்ளு புளித்து நாறப்போவது தான் மிச்சம்.

## தங்கம் வென்ற போரின் குழந்தை



"*நாங்கள் போர்களை மட்டுமே கண்டு வளர்ந்தவர்கள். எங்கள் நாடு வெறும் போர்களை மட்டும் சந்திக்கும் நாடு மட்டுமல்ல. திறமையாளர்கள் நிறைந்த நாடு என்பதை இந்த உலகுக்கு உணர்த்த வேண்டும் என்று நினைத்தேன். வாழ்க்கை சிதைந்து போன நிலையிலும் எங்களால் சாதிக்க முடியும் என்று நம்பினேன். தற்போது அதனை நிறைவேற்றியுள்ளேன்.*

*எங்கள் நாட்டில் எத்தனையோ குழந்தைகள், தங்கள் பெற்றோர் உயிரோடு இருக்கிறார்களா எனக் கூடத் தெரியாமலேயே வாழ்ந்து வருகின்றனர். கல்விக்கு வழி கிடையாது. படிப்பதற்கு புத்தகங்கள் கிடையாது. அத்தகைய ஏழ்மை நிலையில் நாங்கள் வாழ்கிறோம். அதனால் இந்த வெற்றி எங்களுக்கு மகத்துவமானது.*"

- ஜூடோ போட்டியில் தங்கம் வென்ற கோசோவா நாட்டு வீராங்கானை மஜ்லிண்டா கெல்மெண்டி (Majlinda Kelmendi)

## கள்ளருக்கும் காதலருக்கும் வில்லன் கமெரா



நல்லூர் கொடியேறிட்டுது. கனபேருக்கு சந்தோசம். கிட்டத்தட்ட நல்லூர் திருவிழாவை விரதம், பக்தி எண்டதையும் தாண்டி "யாழ்ப்பாணத்தின்ர வர்த்தகச் சந்தை-2016" எண்டும் சொல்லலாம். சனம் கோயிலுக்குள்ள போறதை விடவும், மணிக்கடைக்கும், ஐஸ்கிறீம் கடைக்கும் போறதுதான் கூட. ஆரும் கேட்டா 'நல்லூருக்கு போறம்' எண்டிட்டு, வெளிவீதியில நிண்டு, கடை கண்ணியளை (கூடவே கன்னியளையும்) பாத்திட்டு, கடையள் இருக்கிற பக்கம் போடுவினம். பாவம் முருகன். முழுச்சனமும் தன்னட்ட தான் வந்ததெண்டு நம்பி, பேப்பர்களுக்கும் "லட்சக்கணக்கான பக்தர்களின் அரோகராக கோஷத்திடையே கொடியேறினது, தேரோடினது" எண்டு அறிக்கை விட்டிடுவார். ஆனா அங்க போய்ப் பாத்தால் எல்லோ உண்மை விளங்கும். முருகனைச் சாட்டி வாற ஆக்களுக்கு வலை வீச, இலங்கையில் உள்ள எல்லாக் கொம்பனியளும் நல்லூர் திருவிழா எண்ட உடன வந்திடுவினம். பாதளத்தில ஓடுற சைக்கிள் காரரில இருந்து பனடோல் கொம்பனி வரைக்கும் வந்திறங்கி, எல்லாப் பொருள்களையும் பரப்பி வைச்சு குந்தின இடத்திலேயே கெட்டித்தனமாக 'மார்க்கெட்டிங்' செய்வினம்.

இதெல்லாத்தையும் விட நல்லூர் திருவிழா எண்ட உடன புளுகத்தில துள்ளிக் குதிக்கிற இன்னொரு குரூப்பும் இருக்கு. அவை தான் உண்மையாவே நல்லூர்க் காலத்தில முருகனை அடிக்கடி மனசுக்க கும்பிடுறவை. அப்பிடிக் கும்பிட்டபடி ஒற்றைக் கண்ணால முன்னால இருக்கிறவையின்ர கழுத்தில என்ன இருக்கெண்டு நோட்டமிடுவினம். பிறகு சனக் கூட்டம் ஒருக்கா சுனாமியா நெரிபடேக்க, இவையும் 'அரோகரா' எண்டு எல்லாரையும் விட பிலத்துச் சொல்லிக் கொண்டு, முன்னுக்கு நிண்ட ஆளின்ர கழுத்தில உள்ளதை அறுத்துக் கொண்டு போடுவினம். பறிகுடுத்தவரும் 'அரோகரா அரோகரா' எண்டு அழுதபடி அலைய வேண்டியதுதான். அறுத்த குரூப் அடுத்த கழுத்தை தேடி இன்னொரு மூலைக்கு போயிருக்கும்.

ஆனா இந்த முறை அதுக்கு ஆப்பு. முருகன்ர ஆறுமுகத்தில இருக்கிற பன்னெண்டு கண்ணுக்கு மேலதிகமாக, எக்கச் சக்கமான கண்கள் நல்லூரில எல்லாரையும் கண்காணிச்சபடியே இருக்கு. மாநகர சபை முக்கியமான இடங்களில இந்த முறை 'சீசிடி' கமெராக்களை பூட்டினதால, தப்பித் தவறி ஆரும் கழுத்தில கை வைச்சால், அறுத்தது ஆரெண்டு பிடிச்சிடலாம். ஆனா என்ன கவலை என்னெண்டா, வீட்டுக் காரருக்கு போக்கு காட்டிப் போட்டு, நைசா 'கண்ணும் கண்ணும் நோக்கியா' காதலர்களுக்கு உந்த 'சிசிடி' கமெராக்கள் வில்லனா வந்திட்டு. அப்ப இந்த முறை நிம்மதியா நல்லூருக்கு போகலாம். கச்சான் வாங்கலாம். கடையளைப் பாக்கலாம். ஐஸ்கிறீம் குடிக்கலாம். பம்பலடிக்கலாம். பாதளச் சைக்கிளோட்டம் பாத்து புல்லரிக்கலாம். இதையெல்லாம் முடிச்சு நேரமிருந்தா முருகனையும் கும்பிடலாம்.



○ பிரதீப் குணரட்ணம்

# 'காட்போட்' குழந்தைகள்



வடலியடைப்பில், காட்போட் பெட்டியொன்றில் கிடத்தப் பட்டு கைவிடப்பட்ட பிறந்து 20 நாளான ஆண் சிசுவொன்று கடந்தவாரம் மீட்கப்பட்டது. அதிகாலை வேளையில் பெண்ணொருத்தி தன்னுடைய குழந்தையை வீடொன்றின் முன்னால் கைவிட்டுச் சென்றிருக்கிறார். குறித்த பெண் என்று சந்தேகிக்கப்படும் குழந்தையின் தாயை பால்காரர் ஒருவர் கண்டிருந்தார் எனவும் கூறப்பட்டது. காலையில் குழந்தை கண்டெடுக் கப்பட்டு தெல்லிப்பளை வைத்திய சாலையினூடாக யாழ்போதனா வைத் தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது. அழகான அந்த ஆண் குழந்தை ஊடகங் களில் பரபப்பை ஏற்படுத்தியதுடன் அதனைத் தத்தெடுக்க பலர் முன் வந்துள்ளனரெனவும் தெரிவிக்கப்பட் டது. விசாரணைகளின் காரணமாகவும் மருத்துவப் பராமரிப்புக்காகவும் தொடர்ந்தும் குழந்தை யாழ்.போதனா வைத்தியசாலையிலேயே உள்ளது.

இந்த நிலையில் பொலிஸாரின் தீவிர விசாரணையின் பின்னர் கடந்த புதன் கிழமை கைவிடப்பட்ட ஆண் குழந்தையின் பெற்றோரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.ஏற்கனவே திருமணமாகி, மூன்று பிள்ளைகளுக்குத் தாயான 36 வயதுடைய பெண்ணே அந்தக் குழந்தையின் தாய். அவர் கணவனைப் பிரிந்து வாழ்கிறார். இந்த நிலையில் அவருக்கும் வடலியடைப்பைச் சேர்ந்த 26 வயதான இளைஞருக்கும் இடையில் ஏற்பட்ட உறவாலேயே அந்தக் குழந்தை பிறந்துள்ளது.

தன்னையும், குழந்தையையும் ஏற்கச் செய்வதற்காகவே குறித்த பெண் காட்போட் பெட்டிக்குள் அந்தக் குழந்தையை, தன்னோடு உறவு கொண்ட இளைஞனின் வீட்டருகில் கைவிட்டுச் சென்றதாகக் கூறியுள்ளார்.

ஒரு குழந்தை ரோட்டில் அநாதரவாக வீசப்படுவதை மிகச் சாதாரணமாக இந்தச் சமூகம் ஒரு பத்திரிகைச் செய்தியாக மட்டும் எடுத்துக் கொள்வது தொடர்ந்தும் நம்முடைய சமூகம் கீழே சென்று கொண்டிருக்கின்றது என்பதையே குறிக்கும். 2009 பின்னர் இதே போன்ற சிசுக் கைவிடுகைகள் வட பகுதியில் கணிசமான இடை வெளிகளில் அவதானிக்க முடிகிறது. போருக்கு முன்னர் நடந்த பாலியல் வன்கொடுமைகள், அதிகாரம் முன் நிறுத்தப்பட்டு துப்பாக்கி முனையில் நடந்த பாலியல் சுரண்டல்கள், இத்தகைய சமூகச் சிக்கலுக்குள் அல்லல்படும் குழந்தைப் பிரசவங்களுக்கு காரணமாக அமைந்தன. ஆனால் தற்போதுள்ள சூழ்நிலை வேறுவிதமான வடிவங்களில் குழந்தைகளை கைவிட்டுச் செல்லும் வழிவகைகளை உருவாக்கியுள்ளது.

அண்மையில் வன்னியில் இப்படியான சம்பவம் ஒன்று நடைபெற்று, குழந்தை யின் தாய் கண்டு பிடிக்கப்பட்டார். விசாரித்ததில் குறித்த பெண் சிவில் பாதுகாப்பு படையில் இருப்பவர் என்று தெரிய வந்தது. இது தொடர்ச்சியாக நிகழ்கின்றது. பொதுவாக தற்பொழுது உள்ள சமூக நிலையில் பாலியல் சுரண்டலோ, பாலியல் ஏமாற்று வேலைகளோ ஆயுத முனையில் நடைபெறுவது இல்லை. தற்பொழுது அவை நிகழ்வதற்கு இரண்டு பிரதான காரணங்களே உள்ளன.

01. வறுமை

02. பாலியல் தூண்டல்

நாட்டின் முறையற்ற பொருளாதார முகாமைத்துவம் சாதாரண அடித்தட்டு குடிமக்களை பாலியல் ரீதியான சுரண்ட லுக்குள் தள்ளுகின்றது. வயிற்றுப் பிழைப்புக்காக பாலியல் சுரண்டலை பொருளாதார தளம் உள்ள தரப்பு விளிம்பு நிலையில் உள்ள தரப்பைச் சுரண்டுகின்றது. குறிப்பாக இங்கே துப்பாக்கியற்ற, ஆனால் அதற்கு சற்றும் குறைவில்லாத பாலியல் வன்முறை நிகழ்த்தப்படுகின்றது. இதற்கு தற்போதுள்ள கட்டற்ற சுதந்திரம் மிக்க ஊடக வெளி, நவீன தொலைத்தொடர்பு சாதனங்கள் உதவி செய்கின்றன.

இங்கே வறுமை தவிர பாலியல் தூண்டல்கள் நிகழ்கின்றன. 2009 இன் பின்னர் நம்முடைய சமூகச் சூழல் கட்டற்ற பாலியல் நுகர்ச்சிகளை எடுக்கக் கூடிய சுதந்திரத்தை அடைகின்றது. குறிப்பாக ஆண்கள் சிகரட், சாரயம், கஞ்சா வரை போதைப் பொருட்களை நுகர்வதும், பாலியல் ரீதியான அவர்களின் வன் முறைகளுக்கு ஊக்கமளிக்கின்றன.

சமூக வலைத்தளங்களும், தொலைத் தொடர்பு வசதியும், ஆண்களுக்கு மட்டுமல்ல பெண்களுக்கும் அதிக பாலியல் சுதந்திரத்தை வழங்குகின்றது. ஆரோக்கியமான பாலியல் கல்வி இருக்கின்ற நாட்டில் வழங்கப்படும் பாலியல் சுதந்திரம் என்பது ஆரோக்கிய மான வன்முறையற்ற ஒன்றாகவே நிகழும். ஆனால் சிறு வயதில் இருந்தே ஆண் பிள்ளைக்கு பெண் உடல் ஒரு இரகசிய போதை நுகர்ச்சிக்கான பண்டத்தைப் போலும், பெண்ணுக்கு ஆணுடல் பயத்தையும், பாலியல் தூண்டலையும் தரக்கூடிய ஒன்றாகவும் நம்ப வைக்கப்படும் ஒரு பிறழ்வான சமூக அமைப்பு எங்களுடையது. எதிர்பால் உடல்களை பாலியல் போசிப்பு சார்ந்து மட்டும் பார்க்கும் இளம் சமுதாயத்தை அதிகம் வளர்த்து வைத்திருக்கிறோம். ஏற்கனவே ஆண் - பெண் சமத்துவம் என்பது இல்லாத சமூகம் இது. இந்தச் சம நிலையற்ற தன்மை இப்பிரச்சினை களை இன்னும் கூராக்குகின்றது.

இதன் விளைவாக ஆண் - பெண் இருபாலரும் பக்குவப்படாத வயதில், காதல், நட்பு என்ற பெயரில் பரஸ்பர முறையற்ற பாலியல் நுகர்ச்சி க்கு தூண்டப்படுகின்றனர். நாள் முழுக்கவும் இரவு நடுநிசிக்குப் பிறகும் செல்போனுக்குள் தலையைக் கொடுத்துக் கொண்டு இருக்கும் பிள்ளை எந்த வகையான உரையாடல் களை செய்கின்றது வீடியோக்களை பார்க்கின்றது என்று அறியாத கண் மூடித்தனமான நம்பிக்கையையும் அன்பையும் கொண்ட பெற்றோரை இந்தச் சமூகம் பெற்றிருப்பது பெரும் சாபக்கேடு. அதே போல தொழிநுட்பம் இறுகப்பற்றாத தலைமுறையைச் சேர்ந்த அப்பாவிப் பெற்றோரின் அன்பையும் நம்பிக்கையையும் சிதைக்கும் குழந்தைகளைப்பெற்றதும் சமூகத்தின் மிகைப் பிறழ்வேயாகும்.

"வெட் சட் (wet chat)", 'ஐட்டப் படம்', 'சரக்கு', 'மாஞ்சான்', 'மேட்டர்' இப்படியான சொற்களுக்கு இந்த தலை முறையின் பெற்றோருக்கு அர்த்தம் தெரியாது. இவை அனைத்தும் பாலியல் பக்குவமற்று இயங்கும் குறித்த தலை முறையின் மோசமான சொற்கள். இந்தச் சொற்களை போலவே அவர்களின் பாலியல் நடத்தைகளும் எவ்வாறு உருவாகி வந்தது என்பதும் நுட்பமாக ஆராய்ந்தே கண்டுபிடிக்க வேண்டியுள்ளது.

இவை தவிர இன்று குடும்பங்களுக் குள் நிகழ்த்தப்படும் பாலியல் வன் முறைகளை கேள்வியுறும் போது அதிர்ச்சியாக இருக்கின்றது. தந்தை மகளை பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்குதல், மனைவியின் தங்கையை பாலியல் சுரண்டலுக்கு உட்படுத்துதல், என்று சமூகம் ஏற்படுத்தி வைத்த மனிதத் தனத்தை எல்லாம் உடைத் தெறிந்தபடி பாலியல் மிருக நுகர்ச்சியாக மாறிவிட்டது.

இத்தகைய பக்குவமற்ற, பாலியல் விழிப்புணர்வற்ற சிற்றின்பத்திற்கு அடிமையான சமுதாயம் நிகழ்த்தும் தவறுகள், மேற்சொன்ன செய்தியைப் போல ரோட்டில் குழந்தைகளை விட்டுச் செல்லும் நிலைகளையே கொண்டு வரும். குறிப்பாக பாதிக்கப்படும் அல்லது தவறிழைக்கும் பெண்களே ஆண்களை விட பாதிக்கப்படுகின்றனர். ஏனெனில் பெண் தவறிழைப்பது என்பது இந்த சமூகத்தில் பாரதூரமான குற்றமாக கருதப்படும் அவலம் இன்னும் முடியவில்லை. கற்பொழுக்கம் என்பது இன்னும் பெண்ணுக்கு மட்டும்தான் என்று நம்பும் ஆண் சமுதாயமே தொடர்ந்தும் பெண்களுக்கு குழந்தைகளாய் பிறக்கின்றது.

இன்னும் இத்தகைய பாலியல் பிறழ்வுகள் சமூகத்தில் கூர்ப்படையும் பட்சத்தில், இது போன்ற சமூகக் கொடுமைகள் புதுப்புது ரூபங்களில் நிகழத்தான் போகின்றது. குற்றம் நடந்த பிறகு தண்டனை கொடுத்து தங்களை ஹீரோக்கள் போல காட்டிக் கொள்ளும் அதிகாரிகளைப் பெற்ற நம்மிடம் இப்படியான குற்றங்கள் நடக்காமல் தடுக்கும் வழிவகைகள் பற்றிய விழிப்புணர்வில்லை.

தொடர்ந்தும் அரச கல்வி முறைமை பாலியல் கல்வியை வெறும் தெரிவுப்பாடமாகவே வைத்திருக்கின்றது, வளர்ச்சியடைந்த நாடுகள் சிறுவயது முதலே இலகுமுறையில் தன்னுடைய குழந்தைப் பிரஜைகளுக்கு பாலியல் கல்வியினைப் புகட்டுகின்றன. அங்கே பாலியல் வன்முறைகள் மிகக்குறைவு. வித்தியாக்களும், சேயாக்களும் கற்பழிக்கப்படுவதில்லை. இளம் பிள்ளைகள் தற்கொலை செய்வதில்லை. குழந்தைகள் காட் போட் பெட்டிக்குள் வைத்து கைவிடப்படுவதில்லை. அங்கே பாதுகாப்பான, பக்குவமான பாலியல் தொடர்புகள், பாலியல் பகிர்வுகள் பற்றிய விழிப்புணர்வு வழங்கப்படுகின்றது. குழந்தையை ரோட்டில் வீச வெட்கப்படாத எங்களுடைய தலைமுறைகள் ஆணுறையை பயன்படுத்த வெட்கப்படுவது நகைமுரண் அல்லவா?

அரசும் அதன் அதிகார பீடங்களும் இதைப்பற்றிய விழிப்புணர்வுகளை கல்வி முறையாகவும் சட்ட பூர்வ மாகவும் மாற்றுதல் வேண்டும், கட்டற்ற பாலியல் சுதந்திரம் என்பது பக்குவப்பட்ட பாலியல் சமூகம் ஒன்றினாலேயே நுகரப்பட வேண்டியது.

ஆடு வெட்டுவதற்கு எதிர்ப்புச் சொல்லி பண்பாட்டை நசுக்கிக் கொண்டிருக்கும் இந்த அரசிற்கும் நீதித்துறைக்கும் பாலியல் விழிப்பு ணர்வு பற்றியெல்லாம் அறிவு வருமா? என்று விளிம்பு நிலைப்பிரஜைகள் நக்கலாக கேட்பது இப்போது எங்களுடைய காதுகளுக்குள் ஒலிக்கின்றது.

## பிறந்த தினம் - ஆவணி 13



பிடல் காஸ்ட்ரோ

பிடல் காஸ்ட்ரோ, கியூப பொதுவுடைமைப் புரட்சியாளரும் பொதுவுடைமை அரசியல் வாதியும் ஆவார். கியூபாவில் 1959 இல் புரட்சியை வழி நடத்தி, புல்ஜென்சியோ பாட்டிஸ்ட்டாவின் அரசை வீழ்த்தி தலைமை அமைச்சர் பொறுப்பை ஏற்ற காஸ்ட்ரோ, 1959 முதல் 1976 வரை கியூபாவின் பிரதமராகவும், 1976 முதல் 2008 வரை ஜனாதிபதியாகவும் பொறுப்பு வகித்தார். 49 ஆண்டுகள் கியூபாவை ஆண்ட காஸ்ட்ரோ பெப்ரவரி 24. 2008 அன்று பதவியிலிருந்து விலகினார். உலகத்தில் நீண்ட காலத்துக்கு தலைமைப் பொறுப்பில் இருந்த தலைவர் காஸ்ட்ரோ மட்டுமே. சர்வதேச அளவில், காஸ்ட்ரோ 1979 இல் இருந்து 1983 வரை மற்றும் 2006 முதல் 2008 வரை, அணி சேரா இயக்கத்தின் பொதுச் செயலாளராக இருந்துள்ளார்.

அமெரிக்காவில் இருந்து 93 மைல் தூரத்தில் இருந்தாலும் கியூபாவை ஒரு சோசலிச நாடாகப் பேணிய பெருமை இவரைச் சாரும்.

## உலக மனிதநேய தினம் ஆவணி 19




அப்படியும்

இப்படியும்

போர், நோய், சத்துக் குறைவு, இயற்கை பாதிப்பு போன்ற காரணங்களால் பாதிக்கப்பட்ட மக்களை நினைவு கூருவதற்கும் இது போன்றவற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி செய்பவர்களை கௌரவிக்கும் தினமாகவும் உருவாக்கப்பட்டதுதான் உலக மனித நேய தினம்.

## வாரச்சக்கரம்



திரையுலகம் கண்ட மிகச் சிறந்த திரைக்கதை ஆசிரியர்களில் ஒருவர் வியட்நாம் வீடு சுந்தரம். 1970 ஆம் ஆண்டு வியட்நாம் வீடு என்ற மாபெரும் வெற்றிப் படத்தின் மூலம் திரைக்கதை ஆசிரியராக திரையுலகில் அறிமுகமானார். அவரது மறைவு தமிழ் திரையுலகிற்கு மிகப் பெரிய இழப்பாகும்

மறைவு - 2016 ஓகஸ்ட் 07



ஆவணி - 19 ரைட் சகோதரர்களின் தினம்

வானில் பறந்த முதல் மனிதர்கள்

# வாரப் பலன்

**மேடம்**
மனை விருத்தி. மக்கள் நலம். மனக் குழப்பம். காரிய மேன்மை. உறவினால் நன்மை. கலை விருத்தி. பொருள் சேர்க்கை. உணவு உறக்க சுகம்.

**மிதுனம்**
சமூக மேம்பாடு. கௌரவம். காரிய அனுகூலம். கள்வர் பயம். வீண் அலைச்சல். எடுத்த காரிய சித்தி. தொழில் மேன்மை. மன உளைச்சல். பண வரவு.

**சிம்மம்**
பொன் பொருள் சேர்க்கை. பயிர் பலிதம். பாவ புண்ணிய மற்ற சமநிலை. வைத்திய மேன்மை. விருந்தோம்பல். களிப்பு. தெய்வ தரிசனம்.

**துலாம்**
பூர்வ புண்ணிய சேர்க்கை. துறவி வருகை. தூரதேச செய்தி நலம். பண்பட்ட நிலை. சமூக உயர்வு. தாழ்ந்த நிலை. தடுமாற்றம். பொன் ஆபரணம் சேர்தல்.

**தனுசு**
பணி மேம்பாடு. எண்ணம் ஈடேறும். மனை விருத்தி. வட யாத்திரை. வழக்கு வெற்றி. வாய்மை. குடும்ப விருத்தி. சிறுவர் கல்வி மேம்பாடு.

**கும்பம்**
தரும காரிய விருத்தி. மனைப் பொருள் சேர்க்கை. மனக் குழப்பம். பிரயாணம். தல வழிபாடு. முயற்சிக்கேற்ற வரவு. விருந்து சிறக்கும். பிறர் உதவுதல்.

**ரிஷபம்**
குழப்ப நிலை. வேளாண்மை விருத்தி. கொடுக்கல் வாங்கல் நன்மை. கவலை தீரும். தரும சிந்தனை. பிதிர் கடன். பசியின்மை. இல்லச் சிறப்பு

**கடகம்**
சென்றதை எண்ணிக் கவலை. தானிய விருத்தி. சோம்பல் நிலை. முயற்சிக்கேற்ற பலனின்மை. காரிய தாமதம். எண்ண ஈடேற்றம். பொருள் சேர்க்கை. பகைவர் நண்பராவர்.

**கன்னி**
பண வர்வு பற்றாக் குறை. அந்நியரால் உதவி. அருந்தவம். தெய்வ சிந்தனை. தரும காரிய சித்தி. தார சுகம். பணி மேம்பாடு. குடும்ப சிறப்பு. கல்வி மேன்மை.

**விருச்சிகம்**
பயிர் விரயம். பகல் கனவு. உடல் சுகத்தில் கவனம் தேவை. சீரிய சிந்தனை. மனை மாட்சி. பிராணிகளால் நன்மை. வாகன மேன்மை. பண வரவு சுகம்.

**மகரம்**
ஆகார சுகம். மட்டற்ற மகிழ்ச்சி. எதிர்ப்பாலாரால் நன்மை. சீரிய நட்பு. தன விருத்தி. கனவை எண்ணிக் கவலை. காரிய மேம்பாடு. கடவுள் சிந்தனை. கல்வி விருத்தி.

**மீனம்**
வீண் சிந்தனை, கனவு நனவாகும். காரிய முடக்கம். அரசால் லாபம். தனி வழிப்போக்கு. சமூகம் பற்றிய கவலை. தாழ்ந்த நிலை. தெய்வ அனுக்கிரகம்.

அருட்செல்வ மாஸ்டர் என எல்லோராலும் அறியப் பட்ட இரா. அருட்செல்வம், பல சாதனையாளர்களை உருவாக்கிய சாதனையாளன். அண்ணாந்து பார்க்கப் படவேண்டிய வானுயர்ந்த ஏணியாக மட்டுமல்ல நுகர்பொருள் கலாசாரத் தில் ஊறிக்கிடக்கின்ற மாயை நிறைந்த சமூகத்தில் முகமூடியற்ற மனிதன் என்பது அனைவருக்கும் வெளிச்சம்.







## வானுயர்ந்த ஏணியாகி

# அண்ணார்ந்து பார்க்க வைக்கும் அருள் கல்வி நிலையம்

உமா சந்தோஸ்

கே. கே. எஸ் வீதிவழியாகக் கோண்டாவில் கிராமத்தைத் தாண்டிச் செல்வோர் எவரையாவது துரை வீதி எங்கே? என்று கேட்டால் இலகுவாக அடையாளங்காட்டி விடுவார்கள். அந்த வீதி அத்தனை பிரபலம். இணுவில் கிராமத்திற்குரிய முக்கியமான பஸ் தரிப்புக்களில் அதுவும் ஒன்று. துரை வீதியினூடாகப் பயணிக்கும்போது, சற்றுத் தொலைவில், பிள்ளையார் கோயிலை நோக்கிச் செல்லுகின்ற அந்த வளைவையொட்டி பல துவிச்சக்கர வண்டிகள் அடுக்கிவிடப்பட்டிருக்கும்.

அருட்செல்வம் மாஸ்டரின் ATC கல்வி நிறுவனம் அங்குதான் இருக்கிறது. இணுவில் கிராம வாசிகள் மட்டுமல்ல, அயற்கிராமங்களான உடுவில், தாவடி, மானிப்பாய், கோண்டாவில் பிரதேசவாசிகள் பலரின் பிள்ளைகள் இங்கு தான் பயிற்றப்பட்டவர்கள். இன்றும் பயின்று கொண்டிருக்கிறார்கள். இந்த நிறுவனத்திற்கு ATC அதாவது அருள் ரியூசன் சென்ரர் என்று பெயர் சூட்டியவர்கள் மாணவர்கள்.

"க.பொ.த உயர்தரத்தின் பின்னர் அரச சேவையில் ஆசிரியராக இணைவதற்குரிய முயற்சியை மேற்கொண்டேன். அதற்கு விண்ணப்பித்தேன். எனது முயற்சிகள் பலனளிக்காது போகவே, நம்பிக்கையோடு வீட்டிலேயே எனது முயற்சியை ஆரப்பித்தேன். 1977 ஆம் ஆண்டு மூன்று மாணவர்களோடு கற்பித்தலைத் தொடங்கினேன்.

அந்த மூன்று பிள்ளைகளும் விசேட சித்தியெய்தினர். அவர்களது சாதாரணதரப் பெறுபேறுகள் சமூகத்தில் ஒருவித அதிர்வையும், நம்பிக்கையும் ஏற்படுத்தியது.

1978 - 1979 ஆம் ஆண்டுகளில் க.பொ.த சாதாரணத்தில் படிக்கும் மாணவர் எண்ணிக்கை முப்பதாக உயர்ந்தது. நான் போதித்த கணிதம் மற்றும் விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் அவர்கள் அதி விஷேட சித்தியைப் பெற்றனர். கற்பித்தலில் எனக்கு உறுதுணையாக எனது சக நண்பரொருவரும் இணைந்து கொண்டார்.

இன்று, யாழ். போதனா வைத்திய சாலையில் றேடியோலஜித் துறையில் முன்னணி வகிக்கும் வைத்திய கலாநிதி கேதீஸ்வரி எமது நிறுவனத்தில் கற்றவர்.

1982 இல் அவர் எட்டுப் பாடங்களிலும் விசேட சித்தியைப் பெற்றார். அதற்கு பின்னர் எமது நிறுவனம் பிரபலமடைந்தது. மாணவர் தொகை அதிகரிப்பால் தரம் 6 தொட்டு 11 வரை வகுப்புக்களை நடத்த வேண்டியேற்பட்டது. இன்று எமது நிறுவனத்தில் ஆண்டு ஒன்று தொடக்கம் ஆண்டு 11 வரை 450 மாணவர்களுக்கு மேல் கல்வி கற்கிறார்கள். இந்த நிறுவனத்தில் என்னுடன் சேர்ந்து 19 ஆசிரியர்கள் பணியாற்றுகின்றனர்.

**இரா. அருட்செல்வம் மாஸ்டர்**
அருள் ரியூசன் சென்ரர் (A.T.C)



இங்கு பணியாற்றுகின்ற ஆசிரியர்கள் அனைவரும் தமது உழைப்பிற்கு ஏற்ற ஊதியத்தை எதிர்பார்ப்பதில்லை. அவர்கள் ஒத்தாசையுடன் எமது நிறுவனம் இலவச கல்வித் திட்டங்களையும் அமுல்படுத்துகின்றது. இதன்படி 1977 காலப்பகுதி தொடக்கம் எமது கிராமங்களிலும்,அயல் கிராமங்களிலும் இருந்து வரும், வறுமைக் கோட்டிற்கு கீழேயுள்ள குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு முன்னுரிமை அளித்துச் சிறந்த கல்வியை வழங்கி வருகிறோம். அதனூடாகப் பயனடைந்தவர்கள் பலர். இன்று அரசு மற்றும் அரசு சார்பற்ற நிறுவனங்களில் உயர் பதவிகளை வகித்துக் கொண்டிருக்கிறார்கள். இது எமக்கு ஆன்ம திருப்தியை ஏற்படுத்தியிருக்கிறது. இங்கு கல்வி கற்கும் மொத்த மாணவர் தொகையில் 30 சதவீத மாணவர்கள் எமது இலவச கல்வித் திட்டத்தின் கீழ் பயனடைகிறார்கள்.

இந்த நிறுவனத்தை ஆரம்பித்தது தொடக்கம் இன்று வரை கடந்த 37 ஆண்டு காலப் பகுதியில், எந்த ஒரு மாணவனையும் பணம் கட்டவில்லை என்று திருப்பி அனுப்பியதில்லை. ஒவ்வொரு தடவையும் க.பொ.த சாதாரணத்திற்குத் தோற்றுகின்ற எமது நிறுவன மாணவர்களில் 95 சத வீதமானோர் பரீட்சையில் சித்தியடைகின்றனர்.

எந்தவொரு விளம்பரங்களும் இல்லாமலே எமது நிறுவனத்தை நோக்கி வருகின்ற மாணவர் தொகை அதிகரிப்பதற்குக் காரணம் பணம் என்பதற்கப்பால் கற்பித்தலை பெரும்பாலும் சேவையாகக் கொண்டிருக்கிறோம். இங்கு வருகின்ற மாணவர்களுக்கு கல்வியுடன், ஒழுக்கத்தையும் போதிக்கின்றோம்" என்கிறார் அருட்செல்வம் மாஸ்டர்.

"சில வருடங்களுக்கு முன்னர் யாழ். குடா நாட்டின் கல்வி வளர்ச்சி குறைந்து காணப்பட்டது உண்மை. நாட்டில் நடைபெற்ற போரினால் ஏற்பட்ட சீரற்ற நிலைமையும் இதற்குரிய காரணம். மீண்டும் கல்வி வளர்ச்சியில் பாரிய முன்னேற்றங்கள் ஏற்பட்டுக் கொண்டிருப்பதை கடந்த கால பெறுபேறுகள் நிரூபிக்கின்றன.

கடந்த வருடம் க.பொ.த உயர்தரப் பரீட்சையிலே யாழ்ப்பாணம் மீண்டும் முன்னணிக்கு வந்திருக்கிறது. இத்தகைய வளர்ச்சிக்கு பாடசாலைகளின் பங்களிப்பை முக்கியமாகக் குறிப்பிட வேண்டும். பாடசாலைகளில் தற்போது இலவசக் கையேடுகள் வழங்கப்படுகின்றன. பயிற்சிப்பட்டறைகள் மற்றும் புலமை சார் வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

ஒரு பாடசாலை ஆசிரியர்கள் இன்னொரு பாடசாலை ஆசிரியர்களோடு இணைந்து கற்பித்தல் என பல நடவடிக்கைகளால் மாணவர்களை ஊக்குவிக்கின்றனர். பாடசாலை நடவடிக்கைகளை எமது செயற்பாடுகள் இலகுவாக்குகின்றன" என்று சமூகப் பொறுப்புடன் கூறுகின்ற அருட்செல்வ மாஸ்டரின் இயற் பெயர் - இரா. அருட்செல்வம். பல சாதனையாளர்களை உருவாக்கிய சாதனையாளன். அவர் அண்ணார்ந்து பார்க்கப்பட வேண்டிய வானுயர்ந்த ஏணியாக மட்டுமல்ல நுகர்பொருள் கலாசாரத்தில் ஊறிக்கிடக்கின்ற மாயை நிறைந்த சமூகத்தில் முகமூடியற்ற மனிதன் என்பது அனைவருக்கும் வெளிச்சம்.

சிறுவர் தொடர்

09



செங்கை ஆழியான்

# பூதத்தீவுப்புதிர்கள்

பூதத்தீவின் பாதையோரத்தில் கல்லாக அமர்ந்து விட்ட மூர்த்தி ஆசிரியர் கோட்டைக் கடக்க முயன்ற வசந்தனை "நில் என் வினாவிற்கு பதில் தந்து விட்டுச்செல்" எனத்தடுத்தார்.

வசந்தனுக்கு மூர்த்தி மாஸ்ரரைப் பார்க்க பரிதாபமாக இருந்தது.

"சரி சொல்லுங்கள்" என்றான்.

கற்சிலையின் உதடுகள் அசைந்த துடன் விழி மடல்களும் திறந்தன.

வசந்தா பிழையாகச் சொல் எனக்கு விடுதலை கொடு என்பது போல விழிகள் அவனிடம் கெஞ்சின.

"வசந்தா கவனமாகப் பதில் சொல்" என்றாள் பயத்துடன் ஆசிரியை கமலம்

மூர்த்தி வேடன் அவனுக்கிட்ட அதே வினாவை மீண்டும் கேட்டார்.

அவர் வினாவைத் தொடங்கும் போதே வசந்தன் அதற்கான விடையை மனதில் சொல்லிக் கொண்டான்.

"கழுதையின் மீது எத்தனை மூடைகள்? குதிரையின் மீது எத்தனை மூடைகள்? எருதின் மீது எத்தனை மூடைகள்?"

"கழுதையின் மேல் ஏழு மூடைகள்.. குதிரையின் மேல் ஐந்து மூடைகள். எருதின் மேல் மூன்று மூடைகள்"

என்றான் வசந்தன்.

"விடை சரியா சேர்..." என சீலன் கேட்டான்.

"அவருக்கு விடை தெரிந்தால் அவரேன் இதில் கல்லாக உட்காந்திருக்கிறார். வசந்தனின் உடல் கல்லாக மாறத் தொடங்கவில்லை, எனவே விடை சரி வாருங்கள் போகலாம்" என்றான் வேடன்.

வசந்தன் முதலில் கோட்டைக் கடக்க ஏனையோர் அவனைப் பின்பற்றினர். சற்றுத்தூரம் சென்றதுமொரு பழத்தோட்டம் குறுக்கிட்டது. அவர்கள் அவ்விடத்தில் தரித்து நின்றனர். மா மரங்களில் பழங்கள் கனிந்து தொங்கின. அப்பிள் மரங்களில் பழங்கள். பலவகைப் பழமரங்களும் அத்தோட்டத்தில் இருந்தன.

எல்லோரும் அத்தோட்டத்தில் கனிந்து தொங்கிய பழங்களைப் பசியோடு பார்த்தனர்.

"போய்ப் பிடுங்கிச் சாப்பிடுவோமா டீச்சர்?" என்று மாலா கமலம் ஆசிரியரிடம் கேட்டாள்.

"பொறுங்கள்" என்றான் வசந்தன்.

"இதில் ஏதோ மர்மம் இருக்கிறது பழங்கள் பழுத்திருக்கின்றன. ஒரு பறவை கூட தோட்டத்தில் காணப்படவில்லை. இவ்வளவு பழங்கள் இருந்தும் அவற்றின் வாசனை சற்றும் வரவில்லை..."

வசந்தன் சொன்ன பின்னர்தான் அவர்கள் கவனித்தனர். அப்பழத்தோட்டம் சீராக வேலியிடப்பட்டிருந்தது. உள் செல்வதற்கு ஒரு வாயில் மட்டும் காணப்பட்டது.

படகோட்டி மாணிக்கம் இவையேதையும் கவனியாது, வேலியோரமாகப் பழுத்திருந்த மாம்பழத்தை எட்டிப்பற்றிப் பிடுங்கிக் கொண்டான். பசியோடு கடித்தான்.

"ஐயோ இது கல் பழம்" என்றான். வசந்தன் அப்பழத்தைத் தொட்டுப்பார்த்தான். உண்மை தான். அது நசியவில்லை. மணக்கவில்லை.

"பழத்தைப் பிடுங்கியவரே முன்னே வா" என்று ஒரு குரல் எழுந்தது. எங்கிருந்து அக்குரல் வந்தது எனப்பார்த்தனர். பழத் தோட்டத்தின் வாசலில் சற்று ஒதுக்காக அமைக்கப்பட்டிருந்த ஒரு குடிசையின் வாசலில் ஒரு கமக்காரன் அமர்ந்திருந்தான். அவன் அருகில் ஒரு மண்வெட்டி காணப்பட்டது. கோடரி ஒன்றும் தண்ணீர் அள்ளும் வாளியொன்றும் காணப்பட்டன.

"ஐய்யோ நானில்லை..." எனப் படகோட்டி மாணிக்கம் பயத்தால் அலறினான். மூர்த்தி மாஸ்ரருக்கு நிகழ்ந்துவிட்ட பரிதாபம் பூதாகரமாக நினைவில் எழுந்தது.

(புதிர்கள் தொடரும்...)



# தேநீரின் கதை

என்ர குஞ்சுகள் உங்களுக்கு தேத்தண்ணி பிடிக்கும் தானே? இந்த தேத்தண்ணியின்ர கதையத்தான் இப்ப சொல்லப்போறன்.

தேநீர் உலகில் உள்ள பல்வேறு நாடுகளில் விரும்பி அருந்தப்படும் ஒரு பானம். தேயிலைச் செடியிலுள்ள இலைகள், தளிர்கள் மற்றும் மொட்டுக்களில் இருந்து தேநீர் தயாரிக்கப்படுகிறது. தேயிலைகளை பெரும்பாலான மக்கள் சூடான நீரில் வடித்துப் பின் அவரவர் விருப்பத்திற்கிணங்க பால் மற்றும் சர்க்கரையைக் (இலங்கைத் தமிழ்: சீனி) கலந்தோ எதையும் கலக்காமலோ அருந்துகின்றனர். சிலர் தேநீரைக் குளிர்வித்தும் அருந்துகின்றனர்.

ஒவ்வொரு நாட்டிலும் தேநீர் எப்பிடிக்கண்டு பிடிக்கப்பட்டதெண்டதுக்கு ஒவ்வொரு நாடோடிக் கதையள் இருக்கு.

கி.மு 2737 இல் இடம் பெற்றதாகக் கூறப்படும் ஒரு புகழ்பெற்ற சீனக் கதையொன்றின்படி, வேளாண்மையையும், சீன மருத்துவ முறையையும் கண்டுபிடித்ததாகக் கருதப்படும் ஷென்னொங் என்னும் சீனப் பேரரசன், ஒரு நாள் சுடுநீர் அருந்திக்கொண்டு இருந்தானாம். அப்போது, காற்று வீச அருகிலிருந்த மரமொன்றிலிருந்து சில இலைகள் அவன் அருந்திக் கொண்டிருந்த நீருள் விழுந்தனவாம். அப்போது நீரின் நிறம் மாறுவதை அவன் கவனித்தான். புதிய விடயங்களை அறிந்து கொள்வதில் ஆர்வம் கொண்டிருந்த பேரரசன், அந்த நீரில் ஒரு மிடறு அருந்தி அதன் வாசனையையும், உற்சாகம் தரும் இயல்பையும் அறிந்து வியந்தானாம்

இப்பிடிதான் திபெத்தில இன்னொரு கதை இருக்கு, ஒரு ஆடு மேய்க்கிற பெடியன் ஆடு ஒண்டு ஒரு செடியை கடிச்சு திண்டதும் உற்சாகமா ஓடித்திரியிறத கண்டிருக்கிறான் , அவனும் அதை பிடுங்கிச்சாப்பிட்டு போட்டு உற்சாகத்த உணர்ந்திருக்கிறான் அதுக்குப்பிறகுதான் அந்த செடி தேயிலைச்செடியாக உலகமெங்கும் பரவினதா அந்த திபெத்திய கதை சொல்லுது.

எங்கட நாடும் சுவையான தேயிலையை உற்பத்தி செய்யிற நாடுதானே. உலகம் முழுக்க எங்கட நாட்டின்ர தேயிலைக்கு ஒரு தனி மதிப்பு இருக்குதானே பாருங்கோ!

## குட்டீஸ் பக்கம்



# அதிசய நீர்

ஒரு இளைஞன் வெளியூர் சென்று திரும்பும்போது பாலைவனத்தின் வழியே திரும்ப நேர்ந்தது. அப்போது ஒரு சுனையில் நீரைக் கண்டான்.

ஆவலுடன் ஓடிச்சென்று நீரை பருகியவன், அந்த நீரின் சுவையில் அளவற்ற மகிழ்ச்சியடைந்தான்.

குடிமக்களை சிறந்த முறையில் பரிபாலனம் செய்யக்கூடிய தனது நாட்டு மன்னனுக்கு அந்த நீரைக் கொடுத்தால் அவர் மிகவும் மகிழ்ச்சியடைவார் என்று கருதி, தன்னுடைய தோல் பையில் அந்த நீரை கொஞ்சம் நிரப்பிக் கொண்டான்.

நான்கு நாட்கள் பயண முடிவில் தன்னுடைய ஊரைச் சென்றடைந்தவன், அரண்மனைக்கு சென்று அரசனிடம் அந்த நீரின் அருமை பெருமைகளை கூறி, உலகிலேயே இது போல சுவையான நீர் இருக்க முடியாது என்று கூறி, அதை அவருக்கு அளித்தான்.

மன்னன் சிறிதும் தாமதிக்காமல் மொத்த நீரையும் குடிக்க ஆரம்பித்தான்.

இதை அருகே அமர்ந்து கவனித்துக் கொண்டிருந்த பட்டத்து ராணி, எனக்கும் கொஞ்சம் அந்த நீரை கொடுங்களேன்.

எனக்கும் அதை குடிக்க ஆசையாக இருக்கிறது என்று கூற, அவள் கூறியதை காதில் வாங்கிக் கொள்ளாமல் மொத்த நீரையும் குடித்து முடித்து விட்டான் மன்னன்.

"பிரமாதம் உண்மையில் இதுபோல ஒரு சுவையான ஒரு நீரை நான் இது வரை என் வாழ்க்கையில் அருந்தியதேயில்லை. உனக்கு எவ்வளவு நன்றி சொன்னாலும் தகும். நீ நீடூழி வாழ்க!" என்று வாழ்த்தி பரிசுகள் வழங்கி அனுப்புகிறார்.

இளைஞன் தனது மன்னனுக்கு அந்த அதிசய நீரை கொடுத்த சந்தோஷத்தில் விடைபெற்று சென்றான்.

அவன் சென்ற பிறகு,

ராணி, "இருந்தாலும் உங்களுக்கு இத்தனை சுயநலம் ஆகாது. அந்த நீரை எனக்கும் கொஞ்சம் கொடுத்தால் என்ன குறைந்தா போய்விடுவீர்கள்?" என்றாள்

"இல்லை ராணி நான் மொத்த நீரையும் குடிக்கவில்லை. அதில் கொஞ்சம் நீர் இன்னும் இருக்கிறது. வேண்டுமானால் நீ கொஞ்சம் குடித்துப் பாரேன்"

அரசன் சொல்ல, ஆர்வமுடன் எடுத்து குடிப்பவள், ஒரு வாய் குடித்ததும். "சே சே என்ன தண்ணீர் என்ன இப்படி நாற்றமடிக்கிறது?" என்று கூறி அந்த நீரை உடனடியாக துப்பி விட்டாள்.

"தேவி நீ நீரை தான் சுவைத்தாய். ஆனால் நான் அவன் என் மீது வைத்திருந்த அன்பை சுவைத்தேன்.

பாலைவனத்தில் தாகமெடுத்து அலைந்து திரிந்த அவனுக்கு ஒரு சாதாரண சுனை நீரே தேவாமிர்தம் போல இருந்திருக்கிறது. அதை மன்னனாகிய எனக்கு கொடுக்க வேண்டும் என்று கருதி தனது தோல்பையில் நிரப்பி கொண்டு வந்தான். எனவே தோலின் வாடையும் நீரில் ஏறிவிட்டது. நீரின் சுவை முற்றிலும் மாறி விட்டது.

அவன் இருக்கும்போது நீரை உனக்கு கொடுத்திருந்தால் நீ இப்போது செய்ததைப் போலவே அவன் முன்பு செய்திருப்பாய். அவன் மனம் வேதனைப்பட்டிருக்கும். அன்பைவிட இவ்வுலகில் சுவையானது வேறு எதுவும் இல்லை" என்றான் மன்னன்.

## குட்டீஸ் பரிசுப் பொதி – 05

★ கிழக்குத் திசையில் இருந்து மேற்கு நோக்கி ஒரு மின்சார ரயில் 90 கி.மீ. வேகத்தில் செல்கிறது. அது வெளியிடும் புகை எந்தத் திசையில் செல்லும்?

விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி:

**குட்டீஸ் பரிசுப்பொதி – 05**
புதுவிதி, 107, இராசவீதி,
கோப்பாய் திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

முடிவுத்திகதி: 23.08.2016

குட்டீஸ் பரிசுப் பொதி – 03
முடிவுகள்
[18 ஆம் பக்கம் பார்க்க]

## சூர்யா படத்தில் கீர்த்திசுரேஸ்



நடிகை கீர்த்தி சுரேஸ் 'கொம்பன்' படத்தை இயக்கிய இயக்குனர் முத்தையாவின் இயக்கத்தில் சூரியா நடிக்கும் 'கிராமத்து அக்சன்' படத்தில் நடிக்க உள்ளதாக உத்தியோக பூர்வமற்ற செய்திகள் வெளியாகியுள்ளன. தனுசுடன் நடித்த 'தொடரி' வெளியாக உள்ள நிலையில் தற்பொழுது விஜயின் 60 ஆவது படத்திலும், 'ரெமோ' படத்திலும் பிசியாக நடித்துக் கொண்டிருக்கிறார் கீர்த்தி சுரேஸ்.

## காந்தியார் போல நடந்தேன்



சென்னை ஆழ்வார்பேட்டையில் உள்ள தனது அலுவலக மாடிப் படியில் இருந்து கடந்த 13 ஆம் திகதி நடிகர் கமல்ஹாசன் தவறி விழுந்தார். "காந்தியார் போல தோள் தாங்க இருவருடன் சேர்ந்து இன்று மருத்து வமனையில் நடந்தேன். வலி சற்று குறைந்திருக்கிறது" என்று நடிகர் கமல்ஹாசன் தனது ட்விட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

## 'வாஸ்கொடகாமா'



ஏ.ஆர்.முருகதாஸ் தன்னுடைய அடுத்த படத்திற்கான படப்பிடிப்பில் இறங்கிவிட்டார். மகேஷ்பாபு ஹீரோவாக நடிக்கும் தமிழ், தெலுங்கில் உருவாகவிருக்கும் படத்திற்கான படப்பிடிப்பு ஹைதராபாத்தில் தொடங்கியிருக்கிறது. பத்துநாட்கள் படப்பிடிப்பு நடைபெறவிருப்பதாகச் சொல்லப்படுகிறது. இப்படத்திற்கு 'வாஸ்கோடாகாமா' என்று பெயரிட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.




ஜெ.கே ரௌலிங் எழுத்தில் ... பொட்டர் நாவல்கள் உலகம் முழு... புகழ் பெற்றன. அவற்றை படமா... மாற்றி ஹொலிவூட்காரர்கள் மக்க... மாயாஜாலத்திற்குள் தள்ளினர். சிறுவ... முதல் பெரியவர்கள் வரை ஹரிப்... டரை ரசிப்பதுண்டு. நாவல்க... படங்களும் முடிவடைந்த நிலையில் ஜே... ரௌலிங்கின் எழுத்தில் அடுத்த மாயா ... படமொன்றை இயக்கியுள்ளார் இயக்... டேவிட் யாட்ஸ் மாயஜால விலங்குகள... பற்றிய படமான இதற்கு "Fantastic Be... and Where to Find Them" என்று ... வைத்திருக்கிறார்கள். இம்மாதம் பட... முன்னோட்டம் வெளியாகி பரபர... ஏற்படுத்தியுள்ள நிலையில் பட... இவ்வருடம் வெளியிட தீர்மானிக்கப்... டுள்ளது.



சீயான் விக்ரம் நடிப்பில் ஆனந்த் சங்கர் இயக்கியுள்ள 'இருமுகன்' படத்தின் பாடல்கள் மற்றும் டிரைலர் வெளியாகி மாபெரும் வரவேற்பை பெற்றுள்ளன.

'நான்கடவுள்' ராஜேந்திரன் வில்லனாக, காமெடியனாக கெத்து காட்டிய பல படங்கள் இருந்தாலும், விஜய்யுடன் தெறி படத்தில் காமெடியிலும், எமோஷனிலும் சமீபத்தில் வெகுவாகப் பாராட்டப்பெற்றார். இந்நிலையில் மீண்டும் விஜய்யுடன் அவர் நடிக்கிறார் என்ற தகவல் வெளியாகியுள்ளது. பரதன் இயக்கத்தில் 'விஜய் 60' படத்தில் ராஜேந்திரன் டிராபிக் கான்ஸ்டபிளாக நடிக்கவிருக்கிறாராம்.



விஜய் ஆண்டனி நடிக்கும் படங்களின் தலைப்புகளே.அந்தப் படத்திற்கான மிகப் பெரிய எதிர்பார்ப்பை ரசிகர்களிடையே ஏற்படுத்தும். 'நான்', 'சலீம்', 'இந்தியா பாகிஸ்தான்', பிச்சைக்காரன் ஆகிய படங்களின் வரிசையில் இவரது அடுத்த படம் 'சைத்தான்'.







இயக்குனர் பாலா நடிகர் விஜய் சேதுபதியை பல்திறமை வாய்ந்த நடிகர் என... பாராட்டியுள்ளார். அண்மையில் சீனு ராமசாமி இயக்கத்தில் விஜய் சேதுபதி நடிப்... வெளியாக இருக்கும் தர்மதுரை படத்தின் இசை வெளியீட்டு விழாவில் கலந்து கொ... இயக்குனர் பாலா மேற்படி விஜய் சேதுபதி பற்றி சிலாகித்துக்கூறியுள்ளார்.

## மீண்டும் இணையும்ஜோடிகள்

பிருத்திவிராஜ்யும் பார்வதி மேனனும் 'மை ஸ்டோரி' படத்தில் ஜெய்-தாரா என்கிற பெயரில் ஜோடியாக இணைகிறார்கள். இப்படத்தின் இயக்குநர் ரோஷிணி தினகர் என்கிற பெண் இயக்குநர். இந்தப் படத்தை 55 நாட்களுக்குள் எடுத்து முடிக்க வேண்டும் எனவும் திட்டமிட்டுள்ளார்கள்.



## ஹொலிவூட்டில் தீபிகா

பொலிவூட் நடிகை தீபிகா படுகோன் ஹொலிவூட்டில் தயாராகும் ட்ரிபிள் எக்ஸ் (XXX) மூன்றாம் பாகத்தில் ஹீரோயினாக நடிக்கிறார். வின் டீசேல் ஹீரோவாக நடிக்கும் இப்படத்தில் அவருக்கு ஜோடியாக தீபிகா நடிப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. ஏற்கனவே இரண்டு ட்ரிபிள் எக்ஸ் படங் கள் வந்து உலக அளவில் பெரும் வரவேற்பை பெற்றன. தற்பொழுது அதன் மூன்றாம் பாகம் வெளிவரவுள்ளது. இப்படத்தின் முன்னோட்டம் சமீபத்தில் வெளியாகி படம் மீதான எதிர்பார்ப்பை கூட்டியுள்ளது.



# எங்கள் கனவுகளை குழிதோண்டிப் புதைக்க முடியாது

- நடிகை நவயுகா.



ஈழத்திரையுலகில் நடிப்பில் தனிமுத்திரை பதித்து, பலரின் புருவங்களையும் உயரச் செய்து வருபவர் நடிகை நவயுகா. யாழ்ப்பாணம் வசாவிளான் பகுதியைச் சேர்ந்த அவர், அடிப்படையில் தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப ஆசிரியை. எழுத்தாளராக ஆரம்பித்த இவரது கலையுலகப் பயணம், பாடலாசிரியையாக உருவெடுத்து இப்போது குறும்படத் துறையில் நுழைந்திருக்கிறது. தோட்டிஎன்ற குறும்படத்தில் அறிமுகமான நவயுகா அதன் பின்னர் மாசறு, இவண் தந்தை, வினவு, முள்ளின் மேல் ஒரு பயணம் போன்ற குறும்படங்களின் மூலம் தன் நடிப்புத்திறனை வெளிப்படுத்தி சிறந்த நடிகைக்கான விருதையும் வென்றுள்ளார். அவருடன் ஒரு நேர்காணல்.

**★ குறும்படத்துறைக்குள் உங்களை இழுத்து வந்த உந்தல் எப்படி நிகழ்ந்தது?**

சிறு வயதிலிருந்தே நாடகம், இசை, நாட்டுக்கூத்து போன்ற கலை வடிவங்களிலே மிகவும் ஈடுபாடு இருந்தது. அதன் அடுத்த கட்டமாக ஈழத்திலே குறுந்திரைப்படங்கள் உருவாகத் தொடங்கிய போது எனக்கு அதன் மீது பெரும் ஈர்ப்பு ஏற்பட்டது. அத்தோடு நடிப்பு எனும் திறமையை வெளிக்கொணர்வதற்கு மிகப்பொருத்தமான வழி குறும்படம் என்றே நான் நினைத்திருந்தேன். எனவே குறுந்திரை வாய்ப்புக்களை ஏற்று, நடிக்க ஆரம்பித்தேன்.

**★ மாசறு, வினவு இரண்டுமே பெண்களின் துயர்களை, குறிப்பாக பாலியல் சுரண்டல்களைப் பேசுபவை. இந்தப் படங்களில் நடிக்க எப்படி துணிவு வந்தது?**

மாசறு, வினவு படங்களில் நடிக்க முடியுமா எனக் கேட்டார்கள். அவற்றின் கதை என்ன என்று கேட்டேன், சொன்னார்கள். அதன் பின்னர் இதில் நடிக்க ஏதும் ஆட்சேபனை உண்டா? எனக் கேட்டார்கள். உடனடியாகவே நான் இல்லை நான் இதை செய்கிறேன். இது ஒரு அழகான படைப்பு, இதில் பங்குபற்றுவது ஆத்ம திருப்தியைக் கொடுக்கிறது என்று அவர்களுக்கு சொன்னேன். என்னைப் பொறுத்தவரை இப்படியான படங்களில் நடிக்க துணிச்சல் தேவையில்லை. உண்மையாகவே சமுதாயத்தில் நடக்கின்ற விடயங்களை நாம் எடுத்துச் சொல்வதற்கு ஒரு மனுஷியாக அதாவது ஒரு உணர்வுகளுள்ள மனிதராக இருந்தால் மட்டும் போதுமானது. அந்த இரு திரைப்படங்களும் எனக்கு நல்ல பெயரைப் பெற்றுக் கொடுத்தவை.

**★ தென்னிந்தியாவைப் போலவே இங்கும் திரைத்துறையில் பங்குபற்றும் பெண்களைப் பற்றி சிலர் தவறான கண்ணோட்டத்துடனேயே பார்க்கின்றனர். இதை எப்படி எதிர்கொள்கிறீர்கள்?**

திரைத்துறையில் இருக்கின்றார்கள் என்றதுமே அவர்களைப் பிழையான கண்ணோட்டத்துடன் பார்ப்பவர்கள் எம்மத்தியிலேயே அதிகளவானோர் இருக்கின்றார்கள். படித்த சமூகத்தினுள்ளே அவ்வாறான எண்ணம் குறைந்திருக்கின்றது என நான் எண்ணுகின்றேன்.

"நீங்கள் ஒரு ஆசிரியராக இருக்கின்றீர்கள். ஏன் நடிகையாக சாதிக்க எண்ணுகின்றீர்கள்? ஆசிரியத் தொழிலை மட்டும் செய்து கொண்டு பேசாமல் இருக்க வேண்டியது தானே" என்று பலர் என்னிடமே மிகவும் அவதூறான பேச்சுக்கள் எல்லாம் பேசியிருக்கின்றார்கள். உண்மையிலே படித்த சமூகத்துக்குள் இப்படியான கருத்துக்கள் குறைவடைந்துள்ள போதிலும், இன்னமும் இப்படிப் பேசிக்கொண்டிருப்பவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். உண்மையிலே அவர்களுக்கு நான் சொல்லிக் கொள்ள விரும்புகின்ற விஷயம் வரலாற்றிலே நடிகைகளாக விஞ்ஞானிகள் கூட இருந்திருக்கின்றார்கள். நற்றலி போட்மன், கெடிலாமர் போன்றோரை உதாரணமாகச் சொல்லலாம். நடிப்பு என்பது மற்றத் தொழில்களைப் போலவே ஒரு தொழில். அத்தோடு ஆத்ம திருப்தியைத் தருகின்ற ஒன்று. இதை மக்களோ சமூகமோ புரிந்து கொள்ளவில்லையென்பதற்காக எங்களது கனவுகளையும் விருப்பங்களையும் குழிதோண்டிப் புதைக்க முடியாது. புரியாதவர்கள் என்னவிதமான அவதூறு செய்தாலும் எப்படிப் பேசினாலும் நாங்கள் முன்னேறிக் கொண்டே தான் இருக்கின்றோம். கலைத்துறையிலே நான் என்ன செய்ய விரும்புகின்றேனோ அவற்றிக்கெல்லாம் ஆதரவு தந்து என்னை முன்னேற்றுவதற்கு பக்கபலமாக இருப்பவர் எனது கணவர். அவர் எனக்கு மிகப் பெரிய ஊன்றுகோலாக இருக்கின்றார்.

**★ ஈழத்து சினிமாவுக்கான அடையாளம் என்ற ஒன்று தேவை என நினைக்கிறீர்களா?**

ஆம் நிச்சயமாக.இந்தக் கேள்விக்கு மாற்றுக்கருத்துக்கு இடமேயில்லை. எல்லாருமே அடையாளத்துக்காகத் தானே போராடிக்கொண்டிருக்கிறோம். ஈழத்து சினிமாவை எல்லோரையும் திரும்பிப்பார்க்க வைக்க வேண்டும் என்ற மிகப்பெரிய ஆசை எங்கள் எல்லோருக்கும் உள்ளது. அதாவது எங்களிடம் சினிமாவே இல்லை. இப்பொழுது தான் ஆரம்பித்திருக்கின்றோம் என்று சொல்ல வேண்டும்.எங்களது ஆரம்பம் அற்பமாகத்தான் இருக்கின்றது. இன்னும் ஒரு பத்து வருட காலங்களில் எமது சினிமா பெரும் வெற்றியினை அடையும்.




**★ ஈழத்தில் விருது வழங்கும் விழாக்களில் குளறுபடிகள் நடப்பதாக ஒவ்வொரு விழா முடிந்த பின்னரும் குற்றம் சாட்டப்படுகிறதே. இது பற்றி?**

விருது வழங்கும் விழாக்களில் ஏற்பட்ட பிரச்சினைகளைப் பற்றி நானே எனது முகப்புத்தகத்தில் எழுதியிருக்கிறேன். விருதுகளை வழங்குவதன் ஊடாக தங்களுக்கு ஒரு அங்கீகாரம் கிடைக்கவேண்டுமென சிலர் எண்ணுகிறார்களே தவிர,எங்களது கலைப்படைப்புக்களுக்கு சரியான அங்கீகாரம் தரவேண்டுமென நினைப்பதில்லை. எனவே குளறுபடிகள் நடக்கின்றன. இதற்காக எல்லா விருது வழங்கும் விழாக்களையும் நான் குறை கூறவில்லை. ஒரு சில நபர்களின் விருதுகளில் பல குறைகளும் சமாதானமே ஆகவே முடியாத அளவுக்கு பிரச்சினைகளும் உள்ளன. கிராமியப்பாடலா, மெல்லிசைப்பாடலா என்று கூடத்தெரியாது விருதுகள் வழங்கப்பட்ட சந்தர்ப்பங்களும் உள்ளன. அப்படியாக சில விருது வழங்கும் விழாக்கள் இன்னமும் நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கின்றன.

**★ மக்கள் மத்தியில் எம்மவர்கள் படைப்புக்கு இருக்கும் வரவேற்பு எந்த நிலையில் இருக்கிறது?**

மக்கள் மத்தியிலே உண்மையிலேயே எம்மவர் படைப்புக்களுக்கு வரவேற்பு இருக்கிறது. எங்களிடம் இருக்கின்ற குறுகிய வளங்களைப் பயன்படுத்தி அவற்றை மக்களிடம் போதியளவில் கொண்டு போய்ச் சேர்க்க முடியாத கட்டத்தில் நாங்கள் இருக்கின்றோம். எனவே நிறையப் படைப்புகள் மக்களுக்கு தெரியாமலேயே இருக்கின்றன. மக்களின் கைகளிலே போய்ச்சேருகின்ற படைப்புக்களுக்கு மக்களிடம் இருந்து பெரிய ஆதரவு கிடைத்துள்ளது. எனவே ஊடகங்கள் எம்மவர் படைப்புகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தால் அவற்றின் வெற்றி எளிதாகிவிடும்.

நேர்காணல் - பிரபா




லிங் எழுத்தில் ஹாரி
கள் உலகம் முழுவதும்
அவற்றை படமாகவும்
ட்காரர்கள் மக்களை
தள்ளினர். சிறுவர்கள்
ர் வரை ஹரிப்பொட்
ண்டு. நாவல்களும்
டைந்த நிலையில் ஜே.கே
தில் அடுத்த மாயா ஜால
க்கியுள்ளார் இயக்குநர்.
யஜால விலங்குகளைப்
ற்கு "Fantastic Beasts
Them" என்று பெயர்
. இம்மாதம் படத்தின்
வளியாகி பரபரப்பை
நிலையில் படத்தை
ியிட தீர்மானிக்கப்பட்




ம வாய்ந்த நடிகர் என்று
ஜய் சேதுபதி நடிப்பில்
ாவில் கலந்து கொண்ட
ியுள்ளார்.





## காணி நிலம் வேண்டும் பராசக்தி !!!




எங்கள் அரசியல்வாதிகள் இனவாதம் கதைப்பதைத் தவிர்த்து ஏன் ஆக்க பூர்வமான காரியங்களை செய்யக்கூடாது?

உதாரணமாக மணலாறு - வெலிஓயா எனப்பெயர் மாற்றப்பட்டதை உணர்வு பூர்வமாகக் கண்டிக்கும் இவர்கள் (அதில் ஏதும் மாற்றம் வரப்போவதில்லை என்பது தெரிந்திருந்தும்) ஏன் அங்கிருந்து இடம்பெயர்ந்த மக்களுக்கு ஒரு சாத்தியமான தீர்வு கிடைக்க முயற்சி செய்வதில்லை. வெறுமனே உண்ணாவிரதம் இருப்பதாலோ அல்லது கண்டன ஊர்வலம் செய்வதாலோ தீர்வு வந்து விடுமா என்ன? மகாவலி அதிகார சபையுடன் உயர் மட்ட பேச்சுவார்த்தை வைத்து, மகாவலி அமைச்சராக அப்போது இருந்த தற்போதைய ஜனாதிபதியின் ஆலோசனையுடன் ஏன் ஒரு சுமுகமான முடிவுக்கு வரமுடியாது?

வெறுமனே இராணுவம் எங்கள் நிலத்தை ஆக்கிரமிப்பு செய்கிறது என்று கூச்சல் போடாமல், வடக்கு கிழக்கில் என்னென்ன காணிப்பிரச்சனைகள் இருக்கின்றன. (இப்படியான தரவு எந்த அரசியல்வாதியிடமோ அல்லது மாகாண அதிகாரிகளிடமோ இல்லை என்று நான் ஆணித் தரமாக சொல்லுகிறேன்) அதற்கான தீர்வு என்ன என்று யதார்த்த மான அரசியல் செய்யுங்கள்.

இன்று எல்லோரும் தெல்லிப்பளை மற்றும் சம்பூர் பற்றி கவனமெடுக்கிறார்களே தவிர (அடுத்த தேர்தலுக்காக வாக்கு சேர்க்கிறார்களோ என்னவோ) மற்றைய சிறிய பிரச்சினைகள் (இங்கு பாதிக்கப்பட்ட மக்களின் எண்ணிக்கை குறைவாக இருந்தாலும் அதன் தாக்கம் (impact) பலாலி உயர் பாதுகாப்பு வலயத்துக்கு எவ் விதத்திலும் குறைந்தது அல்ல) பற்றி கணக்கில் எடுப்பதில்லை.

அரச அதிகாரிகளின் அசமந்த போக்கும் பல பிரச்சினைகளுக்கு காரணம் என்பதை மறுக்க முடியாது.

"காணி நிலம் வேண்டும் பராசக்தி...!!!"

Sangeetha Mahinthan

## சூப்பர் மீன்கள்





அதி உயர் பாதுகாப்பு வலயத்தினுள் இருக்கும் மாங்காய்

## சுவரில் கொய்தவை

**Raj Mayuran**

ஆபாசமானது உடுத்துகிற உடையில் இல்லை பார்க்கிற கண்களில் தான் உள்ளது என சொல்லும் பெண்களின் கண்களில் ஒரு கிலோ மிளகாய் தூளை கொட்டிட்டு எரிச்சல் மிளகாய் தூளில் இல்லை உன் கண்களில் தான் என சொல்லிட்டு ஓடியாந்திரனும்....!!!

**ஷாலினி நாதன்**

எடுத்த முடிவு சரிதான் என உணர்த்தும் சம்பவங்கள் பெருநிம்மதி!!

**Satheesh Khan**

எலும்மிச்சம் பழத்திலோ, தேங்காய் உடைப்பதிலேயோ உள்ள நம்பிக்கையை ஹெல்மெட் அல்லது சீட் பெல்டில வச்சா உசிரயாச்சு கப்பத்தலம்.....

**Kugaparan Navaratnam**

காலத்துக்கேற்ப போற்றியும் தூற்றியும் வாழத்தெரிந்தவர்களால் அழிகிறது மனிதம்.

**Jesi Anand**

அநேகமான புன்னகைகளுக்குப் பின்னால் ஒழிந்திருக்கும் மிக வக்ரமான சிரிப்பொலிகளை அவ்வளவு எளிதில் கேட்க முடிவதில்லை

**Stela B Stellu** making other people happy.

தானாகவே கற்றுக்கொண்ட பாடம் பேஸ்புக் மட்டும் தான்!
அதில Exam வச்சா கூட எல்லாரும் Digiry வாங்கி B.A, M.A ன்னு போயிருப்பாங்க...

**Jinthujan Jintha**

ஒரு உப்புமா கூட செய்ய தெரியாதவளுகள் எல்லாம் பிரிஸ்மால போட்டோ எடிட் பண்ணி பேஸ்புக்ல போடுறாளுகள்
இது யாருக்கு புரியுதோ இல்லையோ சந்தியா உனக்கு...,

**Ayshaa Kumaragurumoorthy** feeling funny

உயர்தர பரீட்சை வாழ்த்து பதிவுகளையும் அதுக்கான நன்றிகளையும் பாக்கேக்க..."யோக்கியனுக்கு இங்க என்னடா வேலை"ங்கிற மாதிரி பரீட்சை எழுதுறவனுக்கு பேஸ்புக்கில என்ன வேலை எண்டு மைண்ட் வொய்ஸ் சொல்லுது..#ம்முடியல



**Thirhiharan Amuthalingam**

ஜீ ரீவியில சமையல்குறிப்பு சொல்ற அஞ்சறைப்பெட்டி போயிட்டு இருக்கு. அதில, உப்பு தேவையான அளவு, எண்ணெய் தேவையான அளவு என்று சொல்லிட்டு இருக்காங்கள்.

அடேய்! அந்த தேவையான அளவு என்ன என்று தெரிஞ்சால் நாங்கள் ஏன்டா இதைப் பார்க்கப் போறம்???

**SriSowmiya Purusothamakuru**

குப்பைத்தொட்டியை கடக்கும் போது நாற்றத்தால் மூக்கை பொத்துவதற்கு பதிலாய், அது நம் தவறென உணர்ந்திருந்தால் நாம்தான் மனிதர்கள்!



போகும் போதே என்னை ரசித்து கொண்டே போ..
திரும்பி வரமாட்டேன் உனக்காக..

- இப்படிக்கு வாழ்க்கை

## இந்தவார மீம்ஸ் (Meme)




பணம் படுத்தற பாடு இருக்கே

- நான் உன்னுடன் இருந்தால் நீ **#செல்வந்தன்**.
- நான் உன்னை விட்டு பிரிந்தால் நீ **#ஏழை**.
- என்னைமற்றவரிடம் கொடுத்தால் நீ **#கொடையாளி**.
- என்னை மற்றவரிடமிருந்து பெற்றால் நீ **#கடனாளி**.
- என்னை செலவு செய்தால் நீ **#ஊதாரி**.
- என்னை சேமித்து வைத்தால் நீ **#கஞ்சன்**.
- என்மேல் பற்றுடன் வாழ்ந்தால் நீ **#பேராசைக்காரன்**.
- என்மேல் பற்றற்று வாழ்ந்தால் நீ **#சன்யாசி**.
- உன் தேவைக்கு நீ என்னை **#படைத்தாய்**.
- இன்று உனது தேவை **#நானாக** மட்டும் தான் இருக்கிறேன்.
- உன் நடத்தையை விட நான் இருக்கும் இடத்தை வைத்துதான் உன் மதிப்பு நிர்னயிக்கப்படுகிறது

இப்படிக்கு.
**#நான்_தான்**
**#பணம்**..



## பரீட்சை நாள்




## பெறுபேறு நாளில்

இணையவாசிகளுக்கு உங்களது சமூக வலைத்தள பதிவுகளை எமது முகநூல் பக்கத்திற்கு அனுப்புங்கள். சிறந்த பதிவுகள் புதுவிதியில் பிரசுரமாகும். https://www.facebook.com/puthuvithieditorial/

# டியர் புலம்பெயர் 'டமில்ஸ்...!'

(சென்ற வாரத் தொடர்ச்சி)

இன்னொரு விடயம் அவர்களது உடைக் கலாசாரம். பிறப்பால் நீங்கள் தமிழர்கள் தான். எங்கு சென்று வசித்தாலும் உங்கள் அடையாளமும் அது தான். ஆனால் நீங்கள் உங்களது அடையாளங்களை இழந்து பல வருடங்கள் ஆகிவிட்டன. நீங்கள் வாழும் இடங்களில் எங்களது கலாசாரத்தை நீங்கள் பின்பற்ற வில்லை, பின்பற்றவும் முடியாது என்கிறீர்கள். அதற்கான காரணங் களையும் வரிசைப்படுத்துகிறீர்கள்.

அதைக் கொஞ்சம் ஏற்கக் கூடியதாய் இருந்தாலும் இங்கு வந்து நிற்கும் அந்த ஒரு மாத காலத்திலும் நீங்கள் அப்படியே தானே உள்ளீர்கள். அந்த சில நாட்களுக்காவது எமது கலாசாரத்தைப் பின்பற்றும் விதமாய் நடந்து கொள்கிறீர்களா? இல்லை முயற்சிதான் செய்கிறீர்களா?

மூன்று தலை முறைகளாக திரும்பி வரும் சில குடும்பங்களில் எது தாய்? எது மகள்? எது பாட்டி? என்று வித்தியாசப்படுத்தி அறிய முடியாதிருக்கின்றது. அந்தளவுக்கு உங்களது உடைக் கலாசாரத்தில் சிறந்து விளங்குகிறீர்கள். நீங்கள் இங்கு வந்தால் கட்டாயமாக எமது கலாசாரத்துக்கு ஏற்றவாறு தான் உடை அணியவேண்டும் என்று சொல்லவில்லை. ஆனால் அதற்கு முயற்சித்தாவது பார்க்கலாம். கோயிலிற்கு செல்லும் போது கூடவுமா தொடை தெரியுமளவிற்கு உடை அணிய வேண்டும்? ஏன் வேட்டியும் சேலையும் இடுப்பில் நிற்காதா? இங்கிருந்து வெளிநாடு சென்றவுடனேயே அந் நாட்டு உடைக்கும் கலாசாரத்துக்கும் மாறத்தெரிந்த உங்களிற்கு இங்கு திரும்பி வரும் போது மட்டும் மீண்டும் எம் கலாசரத்துக்கு ஏன் மாறத் தெரியவில்லை?

எல்லாவற்றையும் விட மிகவும் கேவலமானது ஒன்று, புலம்பெயர் தமிழர்கள் என்று திரும்பி வரும் குடும்பங்களின் இளைய தலை முறையினருக்குத் தமிழ் தெரிவதில்லை. நூற்றுக்கு எண்பது சதவீதமான குடும்பங்களில் இது தான் நிலை. அதில் மூன்று வகையினர். சிலர் அதற்காக வெட்கப்படுவதுமுண்டு, தங்களது பிள்ளைகளுக்கு தமிழ் தெரியாது என்பதை ஒரு மாதிரியாக சொல்லி சமாளிப்பார்கள். "மூத்தவனுக்கு தெரியும் மற்றவையளுக்கு தெரியாது" "கதைச்சால் விளங்கும் ஆனால் அவையள் கதைக்க மாட்டினம்" இப்படி ஏதாவதை சொல்லி சமாளிப்பார்கள். ஆனால் பிள்ளைகளிடம் தமிழில் கதை கேட்டால் பிள்ளைகள் பேயைப் பார்ப்பது போல் முழிக்கும். தமிழ் தெரியாது என்பதை எப்படி யெல்லாமோ சமாளிக்கப் பார்ப்பார்கள்.

அடுத்த வகையினர் பிள்ளைக்கு தமிழ் தெரியாது என்பதை ஒப்புக் கொண்டு அதற்கு அவர்களாவே விளக்கம் வைப்பவர்கள். "அங்க தமிழ் எல்லாம் தேவையில்லை, அதோட அவையள் படிக்குறதும் இங்லிஷ்ல தான், தமிழ் கதைச்சு பழக்க அங்க தமிழ் சனம் சரியான குறைவு" இப்படி அவர்களது காரணங்கள் இருக்கும். நாங்களெல்லாம் தமிழ் பள்ளிகூடத்துல போய் தான் படித்தோமா? தமிழ் படிக்கவும் படிப்பிக்கவும் பள்ளிக் கூடமும் தமிழ்ச் சனமும் தேவையில்லை. தமிழ் பெற்றோர் மட்டுமே போதும். ஏன் நீங்கள் எல்லாம் தமிழர்கள் இல்லையா? தமிழ்ப் பெற்றோர் இல்லையா?



மூன்றாவது வகையினர். மற்ற இரண்டு வகையினரை விட மேலானவர்கள். தமது பிள்ளைகளுக்கு தமிழ் தெரியாது என்பதை பெருமையாகச் சொல்பவர்கள், அதற்காக துளி அளவேனும் வருந்தாதவர்கள். இது புலம் பெயர் 'டமிலர்கள்' பற்றியது என்பதால் அவர்களை பற்றி கதைக்க ஒன்றுமில்லை.

நான் வரப்போறன் உங்களுக்கு என்ன வாங்கிவாறது என்று ஒரு மாதத்துக்கு முதலிருந்தே அலுப்பு தொடங்கிவிடும். தங்களை எங்களுக்கு மத்தியில் நிரூபிக்க போடப்படும் முதல் அடி தான் இது. இன்னமும் யாழ்ப்பாணம் 1995 ஆம் ஆண்டில் இருப்பது போல நினைப்பு. விழியுங்கள். நீங்கள் அங்கே என்னென்ன வாங்க முடியுமோ, அங்கே என்னென்ன இருக்கின்றதோ அவைகள் எல்லாமே இலங்கையிலும் உள்ளன. விலைகள் கொஞ்சம் உயர்வாக இருக்கலாம். தகுதி படைத்தவன் வாங்கிக் கொள்வான், மற்றவர் தகுதிக்குள் வாழ்ந்து கொள்வர். யாழ்ப்பாணம் ஒன்றும் பொருளாதாரத் தடைக்கு உட்பட்ட ஒதுக்கப்பட்ட நிலம் கிடையாது.





தணிகன்

அங்கிருந்து இங்கு வரமுதலே எங்கெங்கு செல்ல வேண்டும் என்ற வரைபை தயார்ப்படுத்திக்கொண்டு தான் எல்லோரும் வருகின்றனர். அதில் பெரும்பாலும் இருப்பது நல்லூர், கசூரினா கடற்கரை, கோட்டை, நயினா தீவு இப்படியான இடங்களே. பத்து நாட்கள் இங்கு நிற்கிறார்கள் என்றால் அதில் எட்டு நாட்கள் இப்படியான இடங்களில் தான். பத்து நாட்களுக்கு மேல் என்றால் நிச்சயமாக அவர்களது வரைபில் திருகோணமலை, கண்டி போன்ற இடங்களை உள்ளடக்கிய ஒரு வார சுற்றுலா தானாகவே இணைந்துவிடும். இதில் எந்தத் தவறும் இல்லை. பல ஆண்டுகளுக்கு பிறகு இலங்கை வந்தால் கட்டயாமாக எல்லா இடங்களுக்கும் போய் பார்க்கத் தோன்றும்.

இதையெல்லாம் நாம் தவறாகச் சொல்லவில்லை. ஆனால் இனம் சனத்தை, உறவுகளை பார்க்க வருகின் றோம் என்று சொல்லிக் கொண்டு வரத்தேவையில்லையே! "இங்கு இப்போது கோடை விடுமுறை, அதைக் குடும்பத்துடன் அங்கை வந்து களிக்கலாம் என்று வருகிறோம்" என்று சொன்னால் நாங்கள் என்ன வரவேண்டாம் என்று சொல்லவா போகின்றோம். இல்லை வரும் உங்களை நல்ல விதமாக உபசரிக்காமல் தான் விட்டு விடுவோமா? இல்லை. எனவே இனி வருங் காலங்களில் இவ்வாறான சம்பிரதாய பேச்சுக்கள் தேவையில்லை. உள்ளதை உள்ளபடி சொல்லிவிட்டு வாருங்கள். என்றும் போலவே உங்களை யாழ்ப்பாணத்து மக்கள் உபசரிப்பார்கள்.

ஒரு புலம்பெயர் குடும்பம் வருகின்றது என்றால், அவர்களது உறவினர் குடும்பங்களுக்கு சாமான்கள் கொண்டு வருகின்றோம் என்ற பெயரில் நிச்சயம் நாலைந்து பொதிகளுடன் தான் வருவார்கள். அதற்கு முதல்

தங்களை எங்கள் மத்தியில் போலியாகவாவது நிரூபித்துவிட வேண்டும் என்பதற்காக அவர்கள் பெரும்பாடு படுகிறார்கள். கையில் காசில்லை யென்றால் கூடசேமித்து அல்லது கடன் பட்டாவது பொருட்களை அள்ளிக்கட்டிக் கொண்டு தான் வருகிறார்கள். அதுகூட அங்கு கோடை விடுமுறை காலத்தில் நடைபெறும் மலிவு விற்பனையில் தான் பெரும்பாலானவை வாங்கப்படுகின்றன.

யாருக்காக இந்த வெட்டி விலாசம்? யாருக்கு உங்களை நிரூபிக்க பாடுபடுகிறீர்கள்? உங்கள் உறவினர்களுக்கா? என்ன காரணத்திற் காக? யாழ்ப்பாணத்தில் வாழ வழியற்று வெளிநாடு போனார்கள், அங்கேயும் வாழ வழியற்று தான் இருக்கிறார்கள் என்று உங்கள் உறவினர்கள் சொல்லி விடுவார்களோ என்ற பயத்தில் தான் இப்படி எல்லாம் நடந்து கொள்கிறார்களோ தெரியவில்லை.

அதற்கான இன்னொரு உத்தியாக அவர்கள் இப்போது நவீனமாக கையாள்வது போரால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வலிந்து சென்று உதவுதல். கோயில் திருவிழாக்கு சென்றால் கச்சான் வாங்குவது எப்படி எழுதப்படாத விதியோ அப்படி ஆகிவிட்டது புலம் பெயர் தமிழர் நாட்டுக்கு வந்தால் போரால் பாதிக்கப்பட்ட குடும்பமொன்றுக்கு உதவுவது. இங்கு ஒரு குடும்பத்து க்கு பத்தாயிரம் ரூபாய் கொடுத்து உதவினால் அதை வைத்து அங்கு பத்தாயிரம் டொலர்கள் சம்பாதிப்பது வழக்கமாகிவிட்டது. உண்மையில் உதவுபவர்கள் அது வெளியில் தெரியாமல் வைத்திருப்பார்கள்.

ஆனால் இவர்களுள் பலர், பத்தாயிரம் கொடுத்தாலும் சரி பத்து ரூபாய் கொடுத்தாலும் சரி அந்த குடும்பத்துடன் நின்று ஒரு புகைப்படம். பிறகு அது பேஸ்புக்கில் டுவிட்டரில் பரவும் வெளிநாடு திரும்பியவுடன் அதை வைத்து அங்கு அரசியல் பண்ணி செலவழித்ததன் பத்து மடங்கை ஈட்டி விடுவார்கள். இதற்குள் அந்த உதவித் தொகையை இங்கு கொடுப்பதற்கு முன்னர் அவர்களை துருவி துருவி விசாரணை. கொடுத்த பிறகு கிழமைக்கு ஒரு முறை தொடர்பு கொண்டு கணக்குவழக்கு கேட்பது என்று ஏற்கனவே உடலாலும் மனதாலும் காயப்பட்டிருக்கும் மக்களை மேலும் காயப்படுத்துவது. நீங்கள் எல்லாம் உதவி செய்யவில்லை என்று அவர்கள் வந்து உங்களிடம் அழுதார்களா? உதவி கேட்டு கெஞ்சி னார்களா? ஒருபோதுமில்லை. பிறகு ஏன் இந்த அற்ப பிழைப்பு உங்களுக்கு?

**இறுதியாக... காலத்தின் கட்டாயத் தில் வெளிநாட்டில் வாழ்ந்து வந்தா லும் சதா சர்வகாலமும் புலத்தில் உள்ள உறவுகளின் நினைவுடன், எப்படா விடுமுறை கிடைக்கும் என்று காத்திருந்து தாய் நாட்டுக்கு வந்து, மடித்துக் கட்டிய சாரத்துடன் சைக்கிளில் தனது உறவுகளை தேடி ஓடும் ஒரு சாரார் இன்னமும் இருக்கத்தான் செய்கின்றார்கள். நீங்களே உண்மையான புலம்பெயர் உறவுகள். உங்களை யாழ்ப்பாணம் என்றும் நேசிக்கும். மேற்கூறிய கருத்துக்கள் உங்களுக்கானதல்ல உறவுகளே.**

இது புலம்பெயர் 'டமில்ஸ்' உறவுகளுக்கு மட்டுமே போய்ச்சேர வேண்டிய கருத்துக்கள்.



யாரிடம் பெற்ற சாபமோ அவரை வாட்டுது, எண்பது வயதை தாண்டிய மெல்லிய உருவம். முட்டிக்கு மேல் சாரத்தை மடித்துக் கட்டிய ஒரு நாட்டாமை. பெற்றா போன்ற வர்த்தகப் பகுதிகளில் நாட்டாமை என்பது பிரபலமான சொல். கரத்தகளையும் நாட்டாமைகளையும் பிரிக்க முடியாது.

○ ஆதி பார்த்தீபன்

# ஹதியா



## சிறுகதை

அந்த வீட்டை நான் கடந்த போது வழமை போல அவளின் குரல் வந்தது. இன்று கொஞ்சம் அழுகை அல்லது சிணுங்கலின் தொனி கொஞ்சம் அதிகமாகவே "உம்மா எனக்கு அந்த பூப்போட்ட பென்சில் வாங்கித்தா" கிட்டத்தட்ட நான் அவர்கள் வீட்டைக் கடக்கும் ஒவ்வொரு முறையும், சரியாகச் சொல்லப் போனால் ஒரு கிழமையாக, இன்னும் பென்சில் பிரச்சினை முடிவுக்கு வருவதாக இல்லை.

எனக்கொரு சந்தேகம், ஒரு பென்சில் வெறும் பத்து ரூபாவோ இருபது ரூபாவோ வராது. ஆனால் வழமை போல ஒரு பென்சில் சண்டை நடந்து கொண்டேயிருக்கும்.

முதலில் இந்த சம்பவங்களின் அடிப்படையிலிருந்து வந்து விடுகிறேன். புதிய வேலை கொழும்பு பெற்றா அஞ்சுலாம்புச் சந்தியில் ஒரு கொம்பனியில், நானிருக்கும் இருப்பிடத்திலிருந்து அஞ்சுலாம்புச் சந்திக்கு போகவேணு மெண்டா விவேகா்னந்தா மேடு, ஆட்டுப்பட்டித்தெரு கடந்துதான் போகவேணும், காலம எட்டு மணிக்கு வெளிக்கிட்டா நடந்து போக இருபது நிமிடம் கொம்பனிய அடைந்து விடலாம். கிட்டத்தட்ட ஒரு வருடம் வேலை செய்து ஓராயிரம் கதை மனிதர்களுடன் வாழ்ந்துவிட்டு வந்தேன்.

காலம நான் வெளிக்கிட்டு செல்லும் நேரத்தில் விவேகானந்தா கொலிஜ் முன்னாலிருக்கும் கார்மண்டில் வேலை செய்யும் பெண்களை சந்திக்கலாம். வேறுபட்ட வயதுடைய வர்கள். வேறுபட்ட இனம், மதம், மொழி, அழகு என எல்லாவிதமான வேறுபாடுகளும் நிரம்பிய ஒரு நாற்பது பெண்களை ஒருநாளில் கடப்பது என்பது எவ்வளவு அற்புதமான விசயம். எனது பார்வையில் அடிக் கடி அந்த முஸ்லிம் பெண்ணும், ஒரு கரத்தை இழுக்கும் பெரியவரும் சிக்கிக் கொள்வார்கள். உண்மைய சொன்னா அந்த பெரியவரிலயும் அந்த முஸ்லிம் பெண்ணிலயும் எனக்கு இன்று வரை காதல் கருணை அதைத் தாண்டிய பல விடயங்கள் ஓடிக் கொண்டிருக்கும். அவள் ஒவ்வொரு முறை என்னைக் கடக்கும் போதும் ஒரு தடவை பார்ப்பாள், முதியவரும் அவ்வாறே அந்தக் கரத்தயை இழுக்க முடியாமல் இழுத்துச் செல்வார்.

உண்மையான காரணம் என்னெண்டு பாத்தா ஆட்டுப்பட்டித்தெரு கொஞ்சம் மேடான தெரு. ஆனா தெருவின் உயரம் எவ்வளவோ அங்கிருக்கும் மக்களின் வாழ்க்கைத் தரம் அவ்வளவு அடியாழத்தில் இருக்கும்.ஒன்றுக்கு மேல் இன்னொன்று ஏறாத குறையாக நெருக்கப்பட்ட வீடுகள். மனைவியை கார்மண்ட் வேலைக்கு அனுப்பிவிட்டு இரவு வரை சீட்டாடும் கணவன்மார். வீதியில் தகரப் பேணியை வைத்து பேஸ்பால் விளையாட்டுப் போல அடித்து விளையாடும் சிறுவர்கள், அவர்களைத் தாண்டும் போது எங்கே நம்மில் பட்டுவிடுமோ என உயிர்ப் பயம் தோன்றும். அவர்கள் மனித நடமாட்டத்தைக் கவனிக்கமாட்டார்கள். ஒவ்வொரு தடவையும் அந்த தகரத்தை அடித்து துவம்சம் செய்வார்கள். இரண்டு லொட்ஜ்கள் உள்ளன. அவற்றின் முன்னே வாசல் பக்கமாக காலை வேளையில் சில லிப்ஸ்ரிக் பூசிய பெண்களை காண முடியும். இவற்றைவிட ஒரு பைத்தியக்காரனும் அந்தத் தெருவில் இருக்கிறான். நடு வீதியில் நின்று 'ட்ரபிக் பொலிஸ்' போல வாகனமறிப்பு செய்துகொண்டே கிரிக்கட் விளையாட்டின் சிக்சர் பவுண்டரி சைகைகளை காட்டுவான். அவன் பைத்தியமாகாவிடில் ஒரு நல்ல அம்பயராக வரவேண்டியவன் எண்டு நினைச்சுக் கொள்ளுவன்.

கார்மண்ட் பெண்களை பொறுத்த வரை அவர்களது வாழ்க்கை சிக்கல் தன்மை நிறைஞ்சதாவே இருக்கும். மலையக பெண்கள் அதிகம், பன்னிரண்டு மணி நேர வேலை, எண்ணூறு ரூபா சம்பளத்துக் காக பிள்ளைகளை சரியாக கவனிக்க முடியாத ஓட்டம், இளம்பெண்களுக்கு காதலர்கள் ஆண்களின் கார்மண்டில் வேலை செய்வார்கள். இரவு வேலை முடிந்ததும் பொறுத்திருந்து தமது சோடிகளை அழைத்துக் கொண்டு ஒழுங்கைகள் ஒதுக்குப் புறங்களை நாடி ஒரு அரைமணிநேரம் காதல் லீலைகளில் ஈடுபடுவார்கள். மறுநாள் மறுபடியும் இந்த வாழ்க்கையின் சலித்துப்போன ஒருபக்கம் புரட்டப்படும். முக்கியமாக கண் காணிப்பாளர்களின் பாலியல் சுரண்டல் களையும் சமாளிக்க வேண்டியிருக்கும்.

அந்தத் தெரு வெற்றிலை பான்பறாக் கறைகளின் நிறம். கருஞ்சிவப்பு பளுப்பு. சேற்றுவாடையுடன் கூடிய மாட்டிறைச்சி நாற்றம். இதையெல்லாம் விடப் பிரபலம், அங்கு ரோட்டு நெடுகிலும் வீட்டு வாசலில் அவர்கள் அவித்துவிற்கும் மரவள்ளியுடன் சிவப்புச்சம்பல், கடலை கௌபி, வீட்டு வியாபாரம் எண்டு அதை சொல்லிவிடலாம். பாணும் நெத்தலி போட்ட பருப்புக்கறியும் ஸ்பெஷல் சாப்பாடாக இருக்கும். சாப்பாட்டுக் கடையொண்டு இருக்கு, அதுதான் என்ர காலையுணவின் தலைமைப் பீடம். அந்த உணவை சாப்பிட்டிட்டு ஒரு ரின்பால் ரீயையும் குடிச்சிட்டா போதும் இரவுவரை நாக்கில ஒட்டிக் கொள்ளும் சுவை. இப்படி சில சிறப்புகளையும் சிறப்பின்மைகளையும் சரிக்குச்சமன் கொண்ட அந்த தெருவால் கடப்பதைத் தான் நான் வழக்கப் படுத்திக் கொண்டேன்.

அன்றும் வழமை போல அந்த முஸ்லிம் பெண் என்னைப்பார்த்திட்டு குனிந்து கடந்து விட்டாள். அடுத்து பெரியவர் கரத்தயை இழுந்தபடி வந்தார். தலை நிலத்தில் முட்டி விடும் தோற்றம். எனக்கு பெரியவரைக் காணும் போதெல்லாம் சிசி பஸை நினைக்கத் தோன்றும், சிசி பஸை பாறையை ஏற்றுவதைப் போல அந்த கரத்தயை நகர்த்திக் கொண்டிருப்பார்.

யாரிடம் பெற்ற சாபமோ அவரை வாட்டுது. எண்பது வயதை தாண்டிய மெல்லிய உருவம். முட்டிக்கு மேல் சாரத்தை மடித்துக் கட்டிய ஒரு நாட்டாமை. பெற்றா போன்ற வர்த்தகப் பகுதிகளில் நாட்டாமை என்பது பிரபலமான சொல். கரத்தகளையும் நாட்டாமை களையும் பிரிக்க முடியாது. காலை தொடங்கி இரவு வரை மூடையேத்த வேண்டிய நிலையில் வாழ்பவர்கள். படிப்பறிவற்றவர்கள், முரடர்கள், சிலர் கஞ்சா குடு உபயோகிப்பவர்கள், முக்கியமாக திருமணமான நாட்டாமைகள் எல்லோரும் காதல் திருமணம் செய்தவர்கள். ஒரு மூடைக்கு பத்து ரூபா, இருபது ரூபா அல்லது ஐந்து ரூபா நிறைகளைப் பொறுத்து வேறுபடும், கிட்டத்தட்ட ஒரு நாளில் குறைந்தது ஆயிரம் ரூபா சம்பாதித்து விடுவார்கள். காசைப் பெற்றுக் கொள்ளும் போது அந்தக் காசை கைகளில் விரித்து வைத்து முத்தமிடுவார்கள். அது அவர்களது நாகரிகம். இவை ஒரு பெரிய சம்பவங்களின் கோர்வை.

பானு, கதையின் ஆரம்பத்தில் அழுத சிறுமியின் பெயர், பென்சிலுக்காக அழுதவள், நோன்பு மாதம் ஆரம்பித்து விட்டதால் அந்த வீட்டின் சண்டையும் வழமையிலும் அதிகமாகவே இருந்தது. இப்போது புது உடை எடுப்பதைப் பற்றியான பிரச்சனையொலிகள்

அந்த வீட்டைக் கடக்கும் போது வரும். ஒரு சிறுமியின் குரல், மிஞ்சிப் போனாலும் அவளுக்கு ஒரு ஐந்து வயது இருக்காது, அவளது சோகமான கோரிக்கைகளின் ஒலி எனது பயண வேகத்தை பல தடவை தடைப்பட வைத்தது. ஒரு நாள் வீட்டைக் கடக்கும் போது இரவு ரீவிச்சத்தம் கேட்க வீட்டை எட்டிப் பார்த்தேன்.

(18 ஆம் பக்கம் பார்க்க...)



# அலம்பல் ஆச்சி

○ செல்வி

படியுங்கோ படியுங்கோ எண்டு நாங்கள் சொல்லுறதைக் கேட்டு பிள்ளையள் இப்ப அறப் படிச்சிட்டுதுகள். இலக்கியம் படியுங் கோடாப்பா எண்டு சொன்னா படிக்கிறதை விட்டுப்போட்டு படைக்க வெளிக்கிட்டாங்கள். ஒரு பக்கத்திலை சனம் நல்லிணக்கப் பொறிமுறை.. சர்வதேச விசாரணை எண்டு சொல்லிக் கொண்டிருக்க.. முந்த நாள் பிறந்தது கள் எல்லாம் இனப் படுகொலை இல்லையெண்டுறவனுக்கும் நடுநிலை எண்டு தேசியமறுப்பு கதைக்கிறவனுக்கும் வால்பிடிச்சுக் கொண்டிருக்கிதுகள். உதிலை பகிடி என்னெண்டா சர்வதேச விசாரணையிலை பதில் குடுக்கிறதுக்கு ஆயத்தமாகிறதுக்கு பதிலா.. இனப் படுகொலையோ இல்லையோ எண்டு தொகுப்புச் சொல்லுறாங்களாம் உவங்கள்.

நீங்கள் பிரபலமாகோணுமெண்டா கனக்க வழிகள் இருக்கு அப்பனவை. அவ்வவு அவசரமெண்டா யாழ்ப்பாணத்து றோட்டிலை உரிஞ்சுபோட்டு ஓடுங்கோ. சும்மா கட கட வெண்டு பிரபலமாகலாம். அதை விட்டுட்டு தாய் நாட்டின்ரை சீலையை உரியாதைங்கோ. உங்கடை சின்னப் பிள்ளை விளையாட்டுக்கள் உங்களுக்கு தெரிஞ்சோ தெரியாமலோ நாளைக்கு உந்த குப்பை எழுத்துக்களெல்லாம் பதிவாகப் போகுது. வரலாற்றுப் பிழைகளாகப் போகுது. ஐயோ உதெல்லாம் அவங்கள் பிரபலமாகிறதுக்குத்தான் எழுதினவங்கள் எண்டு சொல்லுறதுக்கு ஆரும் உயிரோடை இருக்கமாட்டம். ஒரு பக்கத்தாலை நாங்கள் பயங்கரவாதிகள் இல்லையடாப்பா எண்டு நிரூபிக்கிறதுக்கு சிங்கள இலக்கியங்களோடை மல்லுக்கட்டுறதுக்கு ஏலாமைக் கிடக்கு. இதுக்கை உங்களோடையும் மல்லுக்கட்டுறதுக்கு வலு இல்லையுங்கோ. உங்கடை வரலாற்றுப் புத்தகத்திலை உள்ள பிழைகள் விளங்கினா.. இல்லாட்டி உள்ளடக் கப்படாத வரலாறுகள் பற்றி விளங்கினா.. நீங்கள் உப்பிடி செய்யமாட்டியள். அதுக்குத்தான் சொல்லுறன்.. படியுங்கோடாப்பா முதல்லை.. ஆடு அறுக்க முன்னம் அதை அறுக்க நிக்காதேங்கோ. இண்டைக்கு தமிழுலகத்திலை அறிவு ஜீவிகளுக்கான பஞ்சம் உப்பிடி அறுக்க வெளிக்கிட்டதாலைதான் வந்தது.

உந்த பொது மக்களின்ரை நல்லிணக்கப் பொறி முறைகளைக் கேட்டியளென்டா நீங்கள் பிச்சையெடுக்க போகோணும். அதுகளிட்டை இருக்குற அரசியல் தெளிவு எங்கடை அரசியல் வாதியளிட்டை கூட இல்லை. பின்னை 30 வருசமா பிள்ளையையும் தம்பியையும் அப்பாவையும் மாமாவையும் காணாமல் தேடித் திரிஞ்சு திரிஞ்சே அதுகள் அரசியல்லை தெளிவா இருக்கிதுகள். உந்த விளக்கமெல்லாம் அமெரிக்க தேசத்தின் அரசியல் கட்டமைப்பு எப்பிடியிருக்கும்..? இந்தியாவின்ரை மாநில ஆட்சி எப்பிடி இருக்கும் எண்டு போட்டோக் கொப்பி எடுத்திட்டு சோதினையிலை பக்கம் பக்கமா எழுதிப்போட்டு பக்கக்கணக்கிலை கிளாசடிச்சிட்டு போற எங்கடை அரசறிவியல் பெடி பெட்டையளுக்கு தெரியுமோ? தம்பி கலப்புப் பொறிமுறை விசாரணைதான் வேணுமோ எண்டு கேட்டா பெடியன் வேர்த்து விறுவிறுத்து போட்டோக் கொப்பியளை தேடிகளைச்சுப்போடும். ஏனெண்டா அது விரிவுரையாளர் தான் படிக்கேக்கை எடுத்துவைச்ச குறிப்புக்கள். அதைத் தான் இப்பவும் படிச்சுக் கொண்டிருக்கினை. வெளியிலை வந்து படியுங்கோப்பா. அதை விட்டுட்டு அவன் அப்பிடி சொல்லிப்போட்டான்.. உவன் இப்பிடிச் சொல்லிப் போட்டான் எண்டு உங்களுக்கை சண்டை போடாதேங்கோ. நடந்தது என்ன எண்டு எங்களுக்கும் எதிரிக்கும் தான் தெரியும். உதுக்கை இந்தியக்காரன் கருத்துக்களை ஒரு காதாலை கேட்டு மற்றக் காதாலை விடோணும்.

உந்த விழல் கதையளிலை புலனுகளைச் செலுத்துற நேரங்களிலை பொது மக்கள் கருத்துக் கணிப்பு எல்லா மாவட்டங்களிலையும் நடக்கிது. போயிருந்து கேளுங்கோ எங்கடை பொது மக்களின்ரை பிரச்சினையள் என்ன எண்டதை. அதை விசீட்டு இணையத்திலை மேய்ஞ்சுகொண்டு கிடக்காதேங்கோ. நானும் ஒருக்கா போட்டுவாறன் உந்த கூட்டத்துக்கு. என்ன மோனையவை. சிறு பிள்ளை வேளாண்மை வீடு வந்து சேராது. அதனாலை ஆச்சியும் களத்திலை இறங்கிட்டா.

# பொழிவு - அறிமுகம்

○ ராதேயன்




சிறுகதைத்தொகுதி
ஜீவநதி வெளியீடு
பக்கம் - 117
விலை - ரூபா 300.00

ஈழத்துப் படைப்பாளிகளிடையே குறிப்பிடத்தக்க முக்கியமான, அற்புதமான ஆளுமையான க. சட்டநாதன் அவர்களின் ஆறாவது சிறுகதைத்தொகுதி 'பொழிவு'

பன்னிரண்டு சிறுகதைகள் அடங்கிய இந்த தொகுதி சமூகத்தின் பல்வேறு தளங்கள் மீதான அவரது விசாலமான - ஆழமான - பார்வையை துல்லியமாகவும் அழுத்தமாகவும் பதிவு செய்துள்ளன.

இத்தொகுதிக்கான தன் முன்னுரையில் திரு. செல்வ மனோகரன் அவர்கள் "கருத்தியல் தளத்தில் இப் புனைவுகள் வாழ்வின் மீதான ஈடுபாடு, சகிப்பு, தனது நிலம், பண்பாடு, சக மனிதர்கள் என நேரிய தன்மை வாய்ந்த யதார்த்தப் படைப்புகளாகத் திகழ்கின்றன" எனக் குறிப்பிட்டுள்ளமை, அர்த்தமுள்ள கருத்தாகும்.

சட்டநாதனின் கதை சொல்லும் உத்தியானது அலாதியான கலைத்துவமானது. சமூக அக்கறையும், மனித நேயப் பண்பும் மிக்கது.

அதுவே ஈழத்தமிழ் இலக்கியப் பரப்பில் இவருக்குத் தனி அடையாளத்தை நிரந்தரமாகப் பெற்றுக் கொடுத்துள்ளது. பொழிவு சிறுகதைத் தொகுதி அதை மீண்டும் உறுதி செய்துள்ளது.



யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனின் ஏற்பாட்டில் தென்மராட்சி பிரதேசத்திற்கு உட்பட்ட தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான விசேட வழிகாட்டல் கருத்தரங்கு சாவகச்சேரி நகர சபை பொன்விழா மண்டபத்தில் கடந்த 6 ஆம் திகதி நடைபெற்றது. இதில் இம்முறை பரீட்சைக்கு தோற்றும் 750 க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து பயன் அடைந்தனர்.



யாழ். பொதுசன நூலக வாசகர் வட்டத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற 'காலம்' இதழின் ஆசிரியர் செல்வம் அருளானந்தத்தின் "எழுதித்தீராத பக்கங்கள்" என்ற புலம்பெயர் மற்றும் கடந்தகால ஞாபகங்களின் தொகுப்பு நிகழ்வு கடந்த சனிக்கிழமை (06.08.2016) மாலை நூலகக் கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது.

(04 ஆம் பக்கத் தொடர்ச்சி)

# பிரபாகரனின் மீசை



ஆண்கள் என்றால் மீசை இருக்க வேண்டும் என்று பல ஆயிரம் வருடங்கள் நம்பப்படும் ஒரு ஐதீகமே நம்முடைய மீசைகளையும் தாடிகளையும் இன்னும் வளர வைத்தபடியிருக்கின்றது. அப்படிப் பார்த்தால் நம்முடைய பெண்கள் ஆண்களை விட வேகமாக நேர்க் கூர்ப்படைந்து விட்டனர். நாங்கள் இன்னும் குரங்குத் தன்மைகளை இழக்காமலிருக்கின்றோம்.

இங்கே சீனர்கள் நேர் மாறானவர்கள். சீனர்களிற்கு மீசையும் தாடியும் பெரிதாக வளர்வதில்லை. இதற்குச் சுவாரஸ்யமான நம்பிக்கை ஒன்று சொல்லப்படுகின்றது. சீனத்தின் பெண்களுக்கு மீசை வைத்த ஆண்களைப் பிடிப்பதில்லையாம். அந்த விருப்பத்தின் கூட்டு நம்பிக்கையின் விளைவாக சீனப் பெண்களின் உடலின் மரபணுக்கள், மீசை இல்லாத ஆண்களை பெறுவதற்கு கூர்ப்பாகிவிட்டதாம், இதனால் சீன ஆண்களுக்கு மீசை முளைப்பதில்லை. இயற்கையில் பெண் என்ற சிருஷ்டிக் கர்த்தாவிற்குள் அத்தனை சக்தி மறைந்திருக்கின்றது என்பதற்கு இதனை உதாரணமாக நண்பர் ஒருவர் அடிக்கடி சொல்வதுண்டு. மீசையை முறுக்கிக்கொண்டு மனைவியை போட்டு அடித்தாலும், சீனப் பெண்களைப் போன்று அல்லாமல் ஆண்களை இன்னும் மீசையோடு இருக்க அனுமதிக்கின்றார்கள் தமிழ்ப் பெண்கள்.

இனத்தினைப் போலவே மதங்களிடையேயும் மீசை, தாடி என்பன செல்வாக்குள்ள நம்பிக்கை உடலரசியலைக் கொண்டிருக்கின்றன. அரேபிய தேசங்களில் மீசை தாடி வைத்துக் கொள்வது சக்தியின் அல்லது வலிமையின் அடையாளமாக சொல்லப்படுகின்றது. அங்கேயும் வலிமையானவர்கள் ஆண்களே என்ற மூட நம்பிக்கையுடனேயே சமூகம் நகர்கின்றது.

மீசையை - தாடியைக் கொண்டு ஒரு சமூகத்தின் கலாசாரத்தை, வரலாற்றை, கலையுணர்வை வாசிக்கலாம்.

உலகில் புகழ் பெற்ற மீசைக்காரர்கள் இருக்கின்றார்கள். சிலவகையான மீசைகள் ஒரே வடிவத்தையும் எதிர் எதிரான அர்த்தங்களையும் ஏற்படுத்திக்கொண்டு ஒன்றையொன்று கேலிக்குள்ளாக்கும், அர்த்தச் சிதைப்பு வேலையையும் செய்யும்.

உதாரணத்திற்கு ஹிட்லரின் குறு மீசை உலகப்புகழ் பெற்றது. வன்முறையின் பெரும் அடையாளமாகச் சொல்லப்படும் ஹிட்லரின் அதே மீசையை சார்லி சப்ளின் வைத்துக் கொண்டு நகைச்சுவையாக மாற்றியிருப்பார்.

ஒட்டுமொத்த தமிழ் சினிமாவும் கட்டப்பொம்மன் காலத்தில் தொடங்கி மீசைக்குக் கொடுத்திருந்த வீரம், ஆண்மை போன்ற கற்பிதங்களை சிம்புதேவன் இம்சையரசன் படத்தில் வடிவேலுவிற்கு கொடுக்கும் மீசையை வைத்து உடைத்து நொருக்கியிருப்பார். அதிலும் மாமன்னன் புலிகேசி, உறங்கும் காவலாளியின் மூக்கினுள் மீசையை விடும் காட்சி மீசை என்ற பிம்பத்தை நகைச்சுவையால் தகர்க்கும். காட்சிக்குக் காட்சி அரசியல் தன்மை வாய்ந்த படம் அது.

தோழர் சேகுவேரா, ஓஷோ, பாரதி, ஸ்ராலின், பிரபாகரன், ப்ரைடா போன்றோருடைய மீசை - எனக்கு எப்போதும் பிரியமான ஒன்று. குறிப்பாக பிரபாகரனுடையது.

சிரிக்கும் போது உதட்டுக்கு மேலாக அதுவும் சேர்ந்து சிரிக்கும். அத்தனை உயிர்த் தன்மையை அந்த மீசையில் கண்டிருக்கிறேன். பால்யகாலத்தில் வயதிற்குவர முதலே ஷேவிங் ரேசரால் வழித்து வழித்து அப்படியொரு மீசை வளராதா என்று ஏங்கியிருக்கிறேன்.

பிரபாகரன் பெரும்பாலும் மீசையுடனேயே காணப்படுவார். அவரை மீசை இல்லாமல் கிளீன்ஷேவில் காண்பது அரிதாம்.

இந்தியாவில் நடந்த பேச்சு வார்த்தைக்குச் சென்ற பிரபாகரன் மீசையை மழித்து விட்டுச் சென்றாராம். ராணுவத் தளபதிகள் பகிடியாகக்கேட்ட போது, சிரித்துக் கொண்டு "சண்டைக்கு செல்லும்போதுதான் மீசை தேவை. சமாதானத்திற்கு எதற்கு?" என்றாராம்.

நன்றாகக் கவனித்துப்பாருங்கள் 2002 இல் பிரபாகரன் போர் நிறுத்த ஒப்பந்தத்தில் கையெழுத்து இடும் போது மீசையை எடுத்திருப்பார்.அவரிடம் மீசைக்கென்றொரு அரசியல் இருந்திருக்கிறது. (1995 முதல் 2002 வரை பிரபாகரன் மீசையை மழித்து விட்டிருந்தார்)

2009 இல் இலங்கை இராணுவம் பிரபாகரனின் உடலைக் காட்டியபோது, அவருடைய மீசை வழமைபோல் 'ரிம்' செய்யப்பட்டு தாடி 'ஷேவ்' செய்யப்பட்டு இருந்தது. "இல்லை இது பொய்யான உடல் போர்காலத்தில் இருந்த பிரபாகரன் 'ஷேவ்' எடுத்திருப்பாரா?" என்று அடிபட்டது ஒரு கூட்டம். இன்றுவரை பல திண்ணைகளில் பிரபாகரன் 'ஷேவ்' செய்த விவகாரம் ஓடிக்கொண்டேயிருக்கிறது.

அந்த உடலை முதன் முதலில் பார்க்கும் போது நான் அந்த உடலில் ஒன்றை மட்டுமே கவனித்தேன், உயிரற்றுக் காட்டப்பட்ட அந்த உடலில் அப்போதும் மீசை உயிருடன் இருந்தது.

(16 ஆம் பக்கத் தொடர்ச்சி)

# ஹதியா



## சிறுகதை

ஒரு பதினான்கு இஞ்ச் ரீவியில் ஏதோ கிளியர் இல்லாத படம் ஓடிக் கொண்டிருந்தது.

அப்போது அவள் தாயார் பானு என்று கூப்பிடுவது என் காதைக் கடந்தது. பானு அவளது பேர். இரவின் நிழலில் மெல்லிய சிறுமியின் உருவம் அந்த வீட்டைக் குறுக்காக கடக்க அவள் தான் என்டு யூகிச்சுக் கொண்டு நடந்தேன். மறுநாளும் அதே வீட்டில் அதே பிரச்சினை, பானுவின் குரல், நான் ஒரு நிலையில்லாத மனநிலைக்குள் சிக்கியதை உணர்ந்தேன். அன்றைய இரவு தூக்கமின்றி படுத்திருந்தபோது ஒரு யோசனை. மறு நாளிலிருந்து ஒவ்வொரு நாளும் அந்த வீட்டு வாசலைக் கடக்கும்போது அந்த வீட்டு வாசலில் ஒரு இருபது ரூபாவை விட்டெறியத் தொடங்கினேன்.

இப்போது கொஞ்சம் சத்தம் ஓய்ந்துவிட்டதாகவே தோன்றியது. நானும் வழமை போல் இருபது ரூபா பெருநாளுக்கு முதல்நாள் ஐம்பது ரூபா என விட்டெறிந்தேன். இதால எனக்குள்ள ஒரு நிம்மதி, என்னையறியாத சந்தோசம், ஏதோ பெரிய கடவுளின் நிலையில என்னை உணரத் தொடங்கினேன். பெருநாள் கழிந்து மறுநாள் வேலைவிட்டு வந்து கொண்டிருக்கும்போது,

அந்த வீட்டுக்கு முன்னால் ஒரு சின்னப் பெண். அவள்தான் அது அவளே தான். தேஜஸை ஒட்டிவைத்த முகம். புன்னகை கழராத உதடுகள். அவளை நெருங்கி மெல்லக் கடந்து விட்டேன்.

'நானா' என்றொரு குரல் நிச்சயமாக அவள்தான் அதே சோகமான குரல்

"நானா கொஞ்சம்" என்னைத்தான் கூப்பிடுறாள், "என்ன தங்கச்சி?" "இங்கிட்டு கொஞ்சம் வாங்களேன். இது உங்க சல்லி தானே"

நான் எதுவும் பேசவில்லை, 'இல்லை' என்று பொய் சொல்ல முயற்சித்துக் கொண்டிருந்தேன்.

"நான் பார்த்தேன். மிச்ச நாளா நீங்க பணிய வீசிட்டு போறத. நீங்க தான் அது" "இல்ல அது நானில்ல" அது எனக்குள்ள இருந்த கடவுளா இருக்கலாம், இந்தக் கேள்விக்கு பிறகு அந்த கடவுளும் செத்திட்டான். 'ம்ம்'

மீண்டும் அவள் "நானா இதப் பிடிங்க," திணித்து விட்டாள், கையில் நிறைந்து கிடந்தது, என்ன ஒரு மர்ம நிலை இது.

அந்தக் காசுடன் கூடவே ஒரு உருவமற்ற இறையன்பையும் நான் யாசகம் பெற்றிருக்கிறேன், நான் ஒன்றும் சொல்லேல, மெதுவாகத் திரும்பிப் பாக்காமல் நடந்து கொண்டிருந்தேன். வழமை போல அந்த கரத்தையிழுக்கும் முதியவர் மிகவும் களைத்துப்போன வாக்கில் என்னெதிரில் கடந்து கொண்டிருந்தார்.

எனக்குள் இறந்துபோன இறை வாசகம் இது "என்னருமை தோழர்களே நீங்கள் உங்களைக் கடந்து விட்டால் இந்த உலகத்தின் வாசலில் வேறு யாருடைய செருப்புகளும் பிய்ந்து போனவையாகவோ அழுக்கடைந்தவையாகவோ தோன்றாது"

சுபானல்லா !

## குட்டீஸ் பக்கம்

## குட்டீஸ் பரிசுப் போதி - 03 முடிவுகள்

### வெற்றியாளர்கள்

- நவரட்ணம் திலகா
  363 , பாரதிபுரம் மத்தி,
  கிளிநொச்சி.
- கு.அபிஷன்
  வடலியடைப்பு,
  பண்டத்தரிப்பு.
- தி. தனுஜன் தரம் -7 கிளி/
  கனகபுரம் மகா வித்தியாலயம்

ஒரு தந்தைக்கு நான்கு பெண் பிள்ளைகள் இருந்தனர். நான்கு மகள்களுக்கும் ஒவ்வொரு ஆண் சகோதரர் இருந்தார். எனின் அவருக்கு எத்தனை பிள்ளைகள்?

விடை:

5 பிள்ளைகள்



Dr.எஸ்.கிருபானந்தகுமாரன்
கால்நடை வைத்தியர்

# கும்கியாக்குதல்

அண்மையில் தமிழகத்தின் கோவை மதுக்கரை பகுதியில் வைத்து தமிழக வனத்துறையால் பிடிக்கப்பட்டிருந்த காட்டு யானை சில தினங்களில் இறந்து போனமை மிகப் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தி இருந்தது.கிராம மக்களுக்கு அடிக்கடி தொல்லை கொடுத்திருந்த மேற்படி ஒற்றை ஆண் யானை தமிழக தலைமை வனத்துறை அதிகாரியின் உத்தரவுக்கு அமைய "மிஷன் மதுக்கரை மகாராஜ்" எனும் பெயருடன் அமைந்த நடவடிக்கை மூலம் பிடிக்கப்பட்டிருந்தது. இந்த யானையை காட்டுக்குள் பல முறை விரட்டி அடித்த போதும் அது மீள மீள ஊருக்குள் வர தொடங்கி இருந்தது. அதிகாலை நான்கு மணிக்கு தொடங்கிய இந்த யானை பிடிப்புச் செயற்பாடு இரவு வரை நீண்டிருந்தது. இதற்கு அதிகளவான வன அலுவலர்கள், கால்நடை வைத்தியர்கள, கும்கி யானைகள் என மிகப் பெரும் மனித மற்றும் மிருக வலு பிரயோகிக்கப்பட்டிருந்தது.

யானைகளை மயக்கும் மருந்துகள் செலுத்தி மேற்படி யானை அரை மயக்க நிலைக்கு கொண்டுவரப்பட்டு கும்கி யானைகளின் உதவியுடன் வாகனத்தில் மிக கஷ்டப்பட்டு ஏற்றப்பட்டு பிடிபட்ட இடத்திலிருந்து ஏறக்குறைய 100 கிலோமீட்டர் தொலைவிலுள்ள டாப்சிலிப் எனும் பகுதியில் அமைந்துள்ள வனத்துறையின் இடத்துக்கு கொண்டு செல்லப்பட்டிருந்தது. செல்லும் வழியில் மீண்டும் ஒரு முறை மயக்க மருந்து செலுத்தப்பட்டிருந்திருக்கிறது. டாப்சிலிப்



யானைகளின் முகாமில் "காரல்" எனப்படும். பிரத்தியேக யானைக் கூண்டுக்குள் மிக கஷ்டப்பட்டு இந்த யானை புகுத்தப்பட்டிருந்தது. யானைக் கூண்டு மிக சக்தி வாய்ந்த மரங்களால் அமைக்கப்பட்டது. இந்தக் காட்சிகள் மிக துல்லியமாக வீடியோவில் பதிவிடப்பட்டிருந்தது. யானை பிடிப்பு நிகழ்வு ஒரு திருவிழாப் போல அன்று அரங்கேறி இருந்தது.

வனத்துறையைப் பொறுத்த வரை மேற்படி காட்டு யானையை கும்கி ஆக்குவதுதான் இலக்காக இருந்தது. அதாவது மூர்க்கம் கொண்ட யானைகளை அடிமைப்படுத்தி பழக்கிக் காட்டு யானைகளை விரட்டும் சாதுவான யானையாக மாற்றும் செயற்பாடு.எனினும் பிடிபட்ட மேற்படி மதுக்கரை மகாராஜ் தன்னுடைய மூர்க்கத்தை குறைக்கவில்லை. இன்னொரு தடவை மயக்க மருந்து போடப்பட்டிருந்தது. எனினும் மயக்கம் தெளிய மறுபடி மூர்க்கமாக செயற்பட்டு பலம் வாய்ந்த மர கம்புகளை மோதி இருக்கிறது. இறுதியில் தலைப்பகுதி சேதமுற்று இறந்து போனது. அதாவது மதுக்கரை மகாராஜ் தற்கொலை செய்து கொண்டது போன்ற ஒரு நிலை. யானையின் தந்தம் உடைந்திருக்கிறது. தலையிலும் பெரிய காயம் இருந்திருக்கிறது. பிரேத பரிசோதனையில் தலை சேதமடைந்த படியால்தான் இறந்ததாக கூறப்படுகிறது. வனத்துறையின் மிருக வைத்தியர்களால் மேற்கொள்ளப்பட்ட பிரேத பரிசோதனைக்கு எதிராகவும் அடிக்கடி மயக்க மருந்து செலுத்தப்பட்டமைக்கு எதிராகவும் பல விலங்கு நல ஆர்வலர்கள் கடும் விமர்சனம் செய்திருக்கின்றனர். ஒரு விலங்கு வைத்தியராக அந்த விமர்சனங்களை ஏற்றுக் கொள்ள நான் மறுக்கிறேன். பல்கலைக்கழகத்தில் படித்த போது நாங்கள் சில யானைகளை கட்டுப்படுத்த மயக்க மருந்துகளைத்தான் பயன்படுத்தினோம். காட்டு யானைகளை உயிருடன் பிடிக்க இந்த வழிமுறையைத் தவிர வேறு முறைகள் கிடையாது. இல்லாது விட்டால் அந்த யானையை நேரடியாக கொல்லத்தான் முடியும்.

இந்த யானை கும்கியாகும் செயற்பாட்டுக்கு உட்பட்டிருந்தது. பிடிபட்டு மூர்க்கமான யானைகள், குறித்த நாட்களுக்கு உணவு கொடுக்காமல் அல்லது கட்டுப்படுத்தி யானைக் கூண்டுகளுக்குள் அடைத்து வைக்கப்படும். தினமும் பல நூறு கிலோ உணவை உண்ணும் இவை சில நாட்களிலே அடிபணிந்து விடும். பிறகு யானைகளை அடக்கும் அல்லது விரட்டும் பயிற்சி அளிக்கப்படும். அதாவது யானையை விரட்டும் ஒரே ஒரு பணியை மட்டுமே மேற்படி கும்கிகள் செய்யும்.

அண்மையில் வெளிவந்திருந்த கும்கி எனும் தமிழ் திரைப்படம் கும்கி யானைகளின் வாழ்வியலின் சில விடயங்களை காட்டியிருந்தது. தமிழகத்தில் யானை விரட்டுவதற்காக கும்கிகள் பாவிக்கப்படுகின்றன. இந்த மதுக்கரை மகாராஜ் இறந்த போது நல்ல கும்கி ஒன்றை இழந்ததாக வனத்துறை அதிகாரிகள் அங்கலாய்த்துக் கொண்டனர்.

(கும்கி தொடரும்...)

## சொல்லுங்கள் - 09 — வெல்லுங்கள்

கீழுள்ள வினாவுக்குரிய விடையைத் தபால் அட்டையில் எழுதி அனுப்புங்கள். சரியான விடை எழுதும் ஐவருக்கு பணப்பரிசு காத்திருக்கிறது. பலர் சரியான விடையை எழுதி அனுப்பியிருப்பின் குலுக்கல் முறையில் வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.

**வினா** - 2016 ஒலிம்பிக் போட்டியில் இந்தியாவுக்கு முதலாவது தங்கப்பதக்கத்தை பெற்றுக்கொடுத்த வீராங்கனை யார்?

**விடை:**..........................................

முதற்பரிசு - ரூபா. 2000.00
இரண்டாம் பரிசு - ரூபா. 1500.00
மூன்றாம் பரிசு - ரூபா. 1000.00
ஆறுதல் பரிசுகள் - ரூபா. 500.00 இருவருக்கு

**முடிவுத்திகதி: 23.08.2016**

அனுப்பவேண்டிய முகவரி:

"சொல்லுங்கள் வெல்லுங்கள்" - 09
புதுவிதி, 107, இராசவீதி,
கோப்பாய் - திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

## சொல்லுங்கள் வெல்லுங்கள் -07 முடிவுகள்

**விடை :** இந்திய முன்னாள் ஜனாதிபதி அப்துல்கலாம் ஜூலை 27.2015 காலமானார்.

**முதலாம் பரிசு - ரூ. 2000**

1. சி.அருந்ததி
வாணி வைத்திய நிலையம்,
முல்லை வீதி, விஸ்வமடு.

**இரண்டாம் பரிசு - ரூ. 1500**

2. மேருஜா
நரியிட்டான், மல்லாகம்.

**மூன்றாம் பரிசு - ரூ. 1000**

3. தி.சந்திரகலா
இல.44 கனகபுரம், கிளிநொச்சி.

**ஆறுதல் பரிசு - (தலா ரூ.500 வீதம்)**

i. வ. வித்தகன்
30 வீட்டுத்திட்டம், விநாயகபுரம், துணுக்காய்.

ii. தி.பவித்திரா
கணுக்கேணி மேற்கு, முள்ளியவளை.

## புதுவிதி பாராட்டுப்பெறுவோர்

- செ.கிருஷ்ணாஜினி - குப்பிளான் தெற்கு, ஏழாலை.
- கு.அபிஷன் - வடலியடைப்பு, பண்டத்தரிப்பு.
- கே.குகேஸ் - 28, அம்மன் வீதி, கந்தர்மடம்.
- தி.கம்ஷாயினி
- ஜதியன் - அரசடி வீதி, வடலியடைப்பு.
- பரிதியன் - அரசடி வீதி, வடலியடைப்பு.
- வை.தனபாலசிங்கம் - சாவகச்சேரி.
- இ.குலசிங்கம் - பிரதேச செயலகம், வேலணை.
- பு. சிவசங்கர் - 83, பூதவராயர் வீதி, திருநெல்வேலி.
- த. சினேகா - மகாத்மா வீதி, அல்வாய் வடக்கு.
- ஸ்ரீனிவாசன் - வெள்ளவத்தை
- து.வற்சலா - தெல்லிப்பளை
- சி.தருண் - அராலி முருகமூர்த்தி வித்தியாசலை
- சி.விஜயராணி - அராலிமத்தி, வட்டுக்கோட்டை.
- இ.சிவசிறிதரன் - அராலிமத்தி, வட்டுக்கோட்டை
- சி.பாவரசன் - அராலி முருகமூர்த்தி வித்தியாசலை
- செ.உதயன் - முல்லைத்தீவு
- அ.தயாளினி - சூசையப்பர் ஆலயவீதி, புலோலி.
- பி.தரண்ஜா - கொட்டாவத்தை, சண்டிலிப்பாய்.
- ஏ.சீ.எம் நுதம்மில் - குளியாப்பிட்டிய.
- சர்மாளா - தெல்லிப்பளை, யாழ்ப்பாணம்.

(பரிசில்கள் விரைவில் அனுப்பி வைக்கப்படும்)



# கூத்தால் உருவான மெலிஞ்சிமுனை

(03 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மெலிஞ்சிமுனைக் கடல் வளத்தின் அதிசிறப்பு, ஏழாற்றுப் பிரிவுகள் இறுதியாக வந்து சங்கமிக்கும் இடம் இதுவென்பது. மெலிஞ்சிமுனைத் துறை முகத்தின் தென் கிழக்கில் அமைந்துள்ள 'பிரண்டையாறு' என்ற கடலாறு ஒரு தனிச்சிறப்பு.

பிரண்டைக் கொடியின் சாறுபோல் எந்த நேரமும் பச்சையாகவே இது காணப்படுவதால் இந்தப் பெயர் வந்ததென்கிறார்கள் ஊர்வாசிகள். பிரண்டையாறு அமைந்துள்ள இடம் சுருவில் கரைக்கும் நரையாம்பிட்டி என்று ஒரு குட்டித் தீவுக்கும் இடையில். இந்தப் பிரண்டையாறு அப்படியே வேலணைப் பாலம் வரை சென்று சேர்கிறது. இந்த வழியால் கடற்பயணம் போனால், புத்தளம் வரையும் அதற்கும் அப்பாலும் தடையின்றிப் போகலாம்.

மேலும், தீவுகளின் வடகரையாகவும், தீவுசூழ் கடல் பிராந்தியம் ஒதுக்குப் புறமாகவும் அமைந்திருப்பதால் இந்து சமுத்திரத்தின் அத்தனை கடல் வாழ் உயிரினங்களும் அந்தந்தப் பருவ காலங்களுக்கு இந்தத் திடலுக்குள் இயற்கையாகவே வந்து சேரும். கடல் வாழ் உயிரிகளைப் பொறுத்தவரை தீவுகளுக்குள் மிகவும் முக்கியத்துவமானது அனலைதீவு. இது கடல்வாழ் உயிரிகளின் ஒரு தங்குமடமாகவும், சரணாலயமாகவும், இனப்பெருக்கத்துக்கான வளங்களையும் கொண்டதாகும்.

அனலைதீவின் மேற்குக்கரையில் ஆழ்கடல் மீன்களின் நடமாட்டமும், தரிப்பிடம் அதிகமாகவும், கிழக்குக் கடல் களக்கடல் உயிரிகள் அதிகமாகவும் காணப்படும். நீலக்கால் நண்டு, விளை மீன் போன்ற இனங்கள் இந்தக் கிழக்குக் கடலில் மிக அதிகம்.

மெலிஞ்சிமுனை மீனவர்களின் பருவகாலத் தொழிலுக்கு (சோளகம்) சிறந்த இடமாகவும், பாரம்பரிய மீன் பிடித்தளமாகவும் இந்த அனலை தீவின் கிழக்குக் கடல் உகந்ததாக அமைகிறது. இப்போ இந்திய இழுவைப் படகுகள் அனலை தீவைக் குறிவைத்தே அதிகமாக வருகின்றன. சில மாதங்களிலேயே அவர்கள் மொட்டையடித்து விடுவார்கள். அதன் பின் இந்தத் தீவக மீனவர்கள் தெருப்பிச்சை எடுக்க வேண்டியதுதான்.

அருளப்பன், அவுறான், இசிதோர், சந்தியோகு, சலமோன், சரவணையான், சுவானி என்ற இந்த ஏழு குடிப்பரம்பல்களில் இருந்து வந்தவர்கள்தான் ஒட்டு மொத்த மெலிஞ்சிமுனையின் குடிகளாவர். அத்தைனையும் ஒரே குடிப்பரம்பலின் விதைகள்.

மெலிஞ்சிமுனைக் கிராமம் உருவாகியது ஒரு கூத்துப் பிரச்சினை யால்தான். கரம்பனில் ஆடிய கூத்தொன்றில் ஒரு குடும்பத்துக்கு இடம் சரியாகக் கொடுக்கப்படவில்லை என்ற பிணக்கில் ஊரை விட்டுக் கிளம்பியவர்களே மெலிஞ்சி முனையில் குடிபதித்தவர்கள். கூடவே சரவணை, நாவாந்துறை, வேலணை, கரம்பன் பக்கத்திலிருந்த குடும்ப உறவுகளும் ஒன்றாகி மெலிஞ்சி முனையில் சேர்ந்தன. இது நடந்தது, 1956, 57 இல்.

அப்படி வந்து குடியேறிய சனங்கள் தனிச்சுப்போன கதை இன்றளவும் தொடருது.

தனியூருக்கு வந்த சனங்கள், காடாக இருந்த நிலத்தை ஊராக்கினார்கள். அப்படியே தங்களுடைய உழைப்பில் கோயிலைக் கட்டினார்கள். கூடவே ஒரு பள்ளிக் கூடத்தையும் நிறுவினார்கள். கூத்தால் பிணக்குப்பட்டு வந்ததாலோ என்னவோ கூத்தையே ஆயுதமாக்கி, அதையே தங்களின் அடையாளமாக்கினார்கள். அப்படியே அந்த வரலாறு இன்னும் தொடருது. ஆனால், கூத்தும் கோயிலும் வளம் பெற்ற அளவுக்கு ஊரும் சனங்களின் வாழ்க்கையும் வளமாகவில்லை.

ஊரையும் வீட்டையும் வளப்படுத்துவதற்கென்று மெலிஞ்சிமுனையார் ஊர்விட்டுப் போகத்துக்குப் போகம் வெளியூர் போய்த் தொழில் செய்வது முண்டு. அல்லைப்பிட்டி, வலைப்பாடு, இலுப்பைக்கடவை, இரணைதீவு, பள்ளிக்குடா, நாச்சிக்குடா, சிலாவத் துறை, பளுக்காத்துறை இப்படி கடலோ ஊரோ தேடித் தொழில் செய்வார்கள். ஆனாலுமென்ன, "கடல்மேல் பிறக்க வைத்தான், எங்களைக் கண்ணீரில் கரைய வைத்தான்..." என்ற கதைதான்.

மெலிஞ்சிமுனை சின்னஞ் சிறிய காய்ந்துபோன கிராமமாக இருந்தாலும் கலையால் செழித்தது. கூத்து மட்டுமில்லை. கதையாலும் கவிதையாலும் கூடச் செழித்தது. அத்தாங்கு என்றும் பிரண்டையாறு என்றும் மெலிஞ்சிமுனைச் சனங்களின் கதைகளைத் தந்த மெலிஞ்சி முத்தன், எப்போதும் ஒரு கலகக்காரனாகவே இருக்கும் உரத்த இரவுகள், ஏழு கடற் கன்னிகள் போன்றவற்றைத் தந்த தமயந்தி எல்லாம் மெலிஞ்சிமுனையின் விளைச்சல்களே.

யாழ்ப்பாணத்தில் முதன் முதலாக ஒரு வித்தியாசமான ஒளிப்படக் காட்சியை இந்த மெலிஞ்சிமுனை இளைஞன் தமயந்தியே நடத்தினான். கடலையும் கடல்சார் வாழ்க்கையையும் பேசிய காட்சி அது.

கடுகு சிறியதாக இருந்தாலும் காரம் பெரிசு என்று சொல்வார்களல்லவா..!

ஏழாற்றுக் கடலும் ஏழு கடற் கன்னிகளைப் பற்றிய கதைகளுமான மெலிஞ்சிமுனைக் கடற்கரையில் ஒரு நாள் நின்றேன். சிமோன் கிழவன் நடந்து வந்தார். நடந்து வந்தாரா..? இல்லை, கெந்திக் கெந்தியே வந்தார். களைத்துப் போன முகத்திலும் ஒரு நம்பிக்கை ஊற்று. கூடவே அந்த இளங்காலையில் கூத்துப்பாட்டின் முணுமுணுப்பு. கொஞ்சம் கிட்டவாக அவர் வரும் போது ஊன்றிக் கவனித்தேன், ஒரு கால் இல்லை. வந்தவர் ஒரு மரநிழலில் சற்று நின்று ஆறினார். மெல்லச் சென்று கேட்டேன். "என்ன நடந்தது?" என்று.

"மிதிவெடி திண்டது" என்றார்.

எந்த மிதிவெடி என்று எனக்கு விளங்கிக் கொள்ள முடியவில்லை இன்னும்.

# கங்காரு கறி சமைப்பது எப்படி?



## தேவையான பொருட்கள்

1. உலகின் 'முதல்தர' கங்காருக்கள் -11
2. ஹேரத் -1
3.,டில்ருவான் பெரேரா -1
4. மெண்டிஸ் -1
5. சண்டகன் - தேவையான அளவு
6. நிதானமான ரசிகர்கள் - தாராளமாக

**செய்முறை:**

பெரிய சட்டி அதாவது பல்லேகல அல்லது காலி கிரவுண்ட் போல இருக்கணும். அதுல கங்காருக்கள எல்லா பக்கமும் நிப்பாட்டி 'மெண்டிச' வச்சு ஓட ஓட அடிக்கணும்.

அப்பிடி அடிச்சுக் கொண்டிருக்கும் போது கங்காருகள்ட முகம் அப்பிடியே பயத்தில கறுத்து போய் இருக்கும் அதே நேரம் இலங்கை வாழ் இந்திய கிரிக்கட் ஆதரவு செம்மல்களின் வயிறு எரிஞ்ச வாசம் வீசும். அந்த நேரம் பார்த்து நிப்பாட்டிட்டு.

'ஹேரத்தையும்' டில்ருவானையும் வச்சு நல்லா வறுத்து எடுக்கணும் இடையிடையே சீரகம் கடுகு போடுற மாதிரி சண்டகனையும் பயன்படுத்திக் கொள்ளலாம். இப்பிடி இரண்டு அல்லது இரண்டரை நாள் வறுத்து எடுத்தால் சட்டப்படி 'கங்காரு கறி' கிடைக்கும். கிட்டத்தட்ட 17 வருசமா இப்பிடி ஒரு கங்காரு கறி சாப்பிட்டிருக்கவேமாட்டீங்க.

● கணபதிப்பிள்ளை பிரபாகரன்

# ஊர் கூடி உயிர்பெற்ற கலையரங்கு




● யாழினி யோகேஸ்வரன்

வடலியடைப்பு கலைவாணி வீதிக்குட்பட்ட அனைத்துக் கிராம மக்களும் தமது புலம்பெயர் உறவுகளுடன் ஒன்றிணைந்து வடலியடைப்பு கலைவாணி இளைஞர் மன்றத்திற்காக கலையரங்கம் ஒன்றினை அமைத்துக் கொடுத்துள்ளனர். பொருள் தானம், சிரம தானம் என்பவற்றுடன் நிர்மாணப் பணிகளில் பங்காற்றியவர்களுக்கு பலர் உணவு சமைத்துப் பரிமாறியும் தமது ஆதரவை வழங்கியுள்ளனர். வான் நோக்கி வளர்ந்திருக்கும் இவ்வரங்கச் செயற்பாடுகள் மூலம் கிராம உறவு வலுப்பட்டிருக்கிறது. விலைமதிக்க முடியாத எம்மவரின் வியர்வைத்துளிகளுடன் நிமிர்ந்திருக்கும் இவ்வரங்கம் பிற கிராமங்களுக்கும் முன்னுதாரணமாக திகழ்ந்து வடலியடைப்பு மக்களைப் பெருமைப்படுத்துகிறது.

இதோ வெளிவந்துவிட்டது
உங்கள் குடும்பச் சஞ்சிகை
ஒகஸ்ட் மாத இதழ்!
திருத்தற் சேவையுடன் தரம் - 5 சிங்கள மொழிபெயர்ப்பு வினாத்தாள் (I,II)
தொலைந்து போகாதீர்கள்!




காலம் சொல்லும் பாடம்
விடுதலைக்கு பெண்கள் தயாரா?
Free
சுயதொழில் கையேடு
போட்டிப்பரீட்சை கையேடு
● கைவண்ணம் அங்கே கண்டேன் கால்வண்ணம் இங்கே கண்டேன்
● விளையாட்டு வினையாகியது
● சாதனைப் பயணத்தில் யாழ். கொக்குவில் இந்துக்கல்லூரி
● முதிர்கன்னி
● திருமதி சுதாகர்
● அன்பு நண்பி குந்தவைக்கு
● பாட்டி வைத்தியம்
● அற்புத அழகுக் குறிப்பு
● தோப்புக்கரணம் போடுவது ஏன்?
● யார் அழுவார் நீ உயிர் துறக்கையில்?
● ஒரு கைப் பிடி சாதம்
* பொது அறிவு
* பொது விவேகம்
* போட்டிகள்
குடும்ப முன்னேற்றத்துக்கான அனைத்து ஆக்கங்களும் ஒரே சஞ்சிகையில்!
பிரதிகளைப் பெற்றுக்கொள்ள:- கொழும்பு- 071- 8628372 வடக்கு: 077-6569617/071-8628369, கிழக்கு: 071-8724057, வவுனியா: 077-2772726, மலையகம்: 071 - 8724056, ஏனைய மாவட்டங்கள்: 071 - 4114990

# யாழ்ப்பாண வைபவ மாலை



யாழ்ப்பாண வைபவமாலை என்பது யாழ்ப்பாணத்தின் வரலாற்றைக் கூறவென எழுந்த ஒரு நூலாகும். 18 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த மயில்வாகனப் புலவர் என்பவரால்,கி.பி 1736 ஆம் ஆண்டளவில் அக்காலத்திலிருந்த ஒல்லாந்த அதிகாரியொருவரென நம்பப்படும் மேக்கறுான் என்பவரின் வேண்டுகோளுக்கிணங்க இது எழுதப்பட்டதாக, இந்த நூலிலுள்ள சிறப்புப் பாயிரச் செய்யுளொன்றினால் அறியப்படுகிறது.

மயில்வாகனப் புலவருக்கு பின் வந்த பல வரலாற்று அறிஞர்கள் இந்த நூலை செம்மை செய்து, உரையெழுதியுள்ளனர்.

கைலாய மாலை, வையா பாடல், பரராசசேகரன் உலா மற்றும் இராச முறை போன்ற நூல்களை முதல் நூல்களாகக் கொண்டே வைபவ மாலையை இயற்றினாரென்று மேற்படி செய்யுளில் புலவர் எடுத்துக் கூறியுள்ளார். யாழ்ப்பாணத் தையாண்ட ஆரியச் சக்கரவர்த்திகள் கால வரலாறு பற்றிக் கூடிய அளவு தகவல்களைக் கொண்டுள்ள, தற்போது கிடைக்கக் கூடிய நூல் இதுவேயாகும்.

எனினும் மேற்படி காலப் பகுதியின் இறுதியின் பின் 150 தொடக்கம் 200 ஆண்டுகள் வரை கழிந்த பின்னரே இந்த நூல் எழுதப்பட்ட காரணத்தால், பல்வேறு நிகழ்வுகளின் காலங்கள் தொடர்பிலும், மேலும் பல விடயங்களிலும், பிழைகளும், குழப்பங்களும் நேர்ந்துள்ளதாகச் சில ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். எனினும் யாழ்ப்பாண வரலாறு தொடர்பில் இந்த நூலின் பெறுமதியைக் குறைத்து மதிப்பிடுவதற்கில்லை.

பண்டைய தமிழ் மன்னர் வரலாற்றுக் காலம் தொட்டு போர்த்துக்கீசர் ஆட்சி பற்றியும், பின்னர் அவர்களின் வீழ்ச்சி பற்றியும் கூறும் இந்த நூல், ஒல்லாந்தரின் ஆட்சி பற்றியும் ஓரளவு கூறி நிறைவு பெறுகிறது.

ஒல்லாந்தர் ஆட்சியின் போது அவ்வரசின் அதிகாரியொருவரின் வேண்டுகோளின் பேரில் எழுதப்பட்ட இந்த நூலில் காணப்படும் ஒல்லாந்தர் ஆட்சிபற்றிய சில கடுமையான விமர்சனங்களும், பிரித்தானியர் ஆட்சிபற்றி வருகின்ற பகுதிகளும், பிற்காலத்தில் சேர்க்கப்பட்டவை என்பது ஆய்வாளர்கள் கருத்தாகும்.

வரலாற்று எழுத்தில் பெரும் இடைவெளிகளை நிரப்புவதற்கு பேரினத்துவத்தின் வரலாற்றை மையப்படுத்திய கல்வி முறையால் திணிக்கப்படும் நம்முடைய சமூகத்தின் ஒவ்வொரு சந்ததியும் சொந்த நிலத்தின் வரலாற்றை தேடியறிதல் முக்கியமாகும். அந்த வகையில் இதுபோன்ற வரலாற்று நூல்கள் நம்முடைய மரபின், வரலாற்றின் கதைகளை அறிந்துகொள்ள ஆதாரமாக இருக்கின்றன.



# ஏத்து

நீரியல் பண்பாடு என்பது எம்முடைய விவசாய, நீர் வழங்கல் பண்பாட்டைக் குறிக்கும். நம்முடைய முன்னோர் இயற்கையுடன் முரண்படாமல், இயற்கைக்கு மிக நெருக்கமாக வாழப்பழகியவர்கள். வேலையை இலகுபடுத்த அவர்கள் தம்முடைய உழைப்பினை இயற்கையில் இருந்தே பெற்றனர்.குறிப்பாக நீரியல் பண்பாட்டில் அவர்கள் கையாண்ட கருவிகள், இயற்கையை மாசுபடுத்தாத, மனித உழைப்போடு சேர்ந்த அமைப்பினைக் கொண்டு இருந்தன. அத்தகையதொரு கருவிதான் ஏத்து.

ஏத்து என்பது விவசாய செய்கையின் போது நீர் இறைக்கப் பயன்படுத்தப்படும் ஒரு கருவியாகும். தற்போது இதற்கு மாற்றிடாக நீர்ப் பம்பிகள் பயன்படுத்தப்படுவதனால் இதன் பாவனை மிக மிக அரிதாக உள்ளது. எனினும் இது அக் காலத்தில் காணப்பட்ட வியக்கத்தக்க தொழில் நுட்ப செயற்பாடாகும்.

இலகுவான, பாரமற்ற மரத்தில் இருந்து இவ்வகைக் கருவிகள் செய்யப்பட்டன. மனித உழைப்புடன் இணைந்து இவை துணை விவசாயக் கருவிகளாகப் பயன்பட்டிருக்கின்றன.

நம்முடைய பண்பாட்டின் வளர்ச்சி நிலையினை, மரபுத் தொழில் நுட்பங்களை அடுத்த சந்ததிக்கு கடத்துவதற்கு இது போன்ற கருவிகளை அறிதல் அவசியமானதாகும்.



# ராணிக்கோபுரம்



நெடுந்தீவின் தென் கிழக்கு பகுதியில் தொட்டாரம் என அழைக்கப்படும் பகுதியின் கடற் கரையை அண்டிய பகுதியில் இக் கோபுரம் உள்ளது. பிரித்தானிய அரசி விக்டோரியா மகாராணியின் ஆட்சிக் காலத்தில் 1902 இல் கட்டப்பட்ட தாகும். இவரது ஆட்சிக் காலத்தில் கட்டப்பட் டதனால் இராணிக் கோபுரம் (Queen Tower) என அழைக் கப்பட்டது. ஆனால் பிற் காலத்தில் இது மருவி 'குயிந்தா' என அழைக்கப்படுகின்றது.

வாய் மொழிக் கதைகளில் இக் கோபுரத்தின் தோற்றத்தில் ஒரு வெளிச்ச வீட்டினுடைய தன்மை நிலையே உள்ளது என முன்னோர்கள் கூறினர். காரணம் அடிப்பகுதி அகலமாகவும் மேல் நோக்கிச் செல்லச் செல்ல நுனிப்பகுதி குறுகியதாகவும் காணப்பட்டு அதன் மேலே துவாரமும் காணப்படுகின்றது. கடற்பயணங்களையும் நாடுகாண் பயணங்களையும் கடற்கலங்களில் தொழில் செய்வோரையும் குறித்த இடத்தை அடையாளம் காட்டும் வெளிச்சவீடு அல்லது புகை வீடு எனவும் வாய்மொழிக் கதைகள் பரவி உலாவந்த வண்ணமே உள்ளன.

இதனை மூதாதையரின் செவி வழிப் பரம்பரைக் கதைகளிலும் அக் கோபுரத் தின் கட்டட அமைப்புக் காலம் என்பவற்றைக் கொண்டும் அறிய முடிகிறது.

இந்த வகையில் கப்பலுக்கு வழிகாட்டும் இந்தக் கோபுர வெளிச்ச வீட்டின் உயரமானது 23 அடி அல்லது 5 மீற்றர் எனவும் இதன் ஒளிச்சமிக்ஞையானது இரவில் தொடர்ந்து எரியும் வண்ணம் காணப்படுவதாகவும் அமைந்துள்ளது. இன்று இக் கோபுரம் அழிவடைந்து பாழ்பட்டுள்ளது.

## மரபுரிமைப்போட்டி - 09

**கடலதெனியா என்ற விகாரையைக் கட்டிய தமிழ்ச் சிற்பியின் பெயர் என்ன?**

சரியான விடை எழுதி அனுப்புபவர்களில் ஒருவருக்கு குலுக்கல் முறையில் ரூபா. 1000 பரிசாக வழங்கப்படும். முடிவுத் திகதி 23.08.2016

அனுப்பவேண்டிய முகவரி: புதுவிதி, 107, இராச வீதி, கோப்பாய், திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

## மரபுரிமைப்போட்டி - 07 முடிவு

சரியானவிடை - ஐநூற்றுவர் வளவு.

வெற்றிபெற்றவர்: ச. ஜதியன்
அரசடி வீதி, வடலியடைப்பு.

புதுவிதி

நேர்காணல் - கணபதிசர்வானந்தா
ஒளிப்படம் - தனுஸ்



# வெள்ளரிக்காய் பிஞ்சு வெள்ளரிக்காய்

நான் சிறுவனாயிருந்த காலத்தே, ஆடி மாதத்தில் வரும் கோடை விடுமுறையில் குடும்ப சகிதம் சண்டிலிப்பாய் மாமி வீட்டிற்குச் செல்வது வழக்கம். வாடகைக்கு அமர்த்தப்பட்ட 'ஏ-40' அல்லது சோமசெட் காரில் மரவள்ளிக் கிழங்கு அடிக்கியதைப்போல எல்லாரும் ஏறி அமர்ந்து கொள்வோம். கார் உடுவில் கேர்ள்ஸ் கொலிஜ்சைத் தாண்டி, வளைந்து வளைந்து, வீதி வழியே சங்குவேலி வயல் காணிகளூடே செல்லும். அந்தக் காலங்களில் பட்டு விரித்ததைப் போல வயல் வெளிகளை நிரப்பிக் கிடக்கும் வெள்ளரிக் கொடி களைப் பார்க்க ஆசையாக இருக்கும். கொடிகளின் நடுவே சில பழங்கள் முழுமையாகவும், சில வெடித்துப் பிரிந்தும் கிடக்கும். சாலை விளிம்பில் பனை ஓலைப் பிளாக்களில் குடலை குடலையாகக் கட்டப்பட்ட பழங்களை விற்பனைக்கு வைத்திருப்பர். காரை நிறுத்தி ஓரிரு பழங்களை ஐயா வாங்குவார்.

**வெள்ளரிப் பழம் இந்தியாவைப் பிறப்பிடமாகக்கொண்டது. ஏறத்தாழ 3500 வருடங்களாக மனித பயன் பாட்டில் இருப்பதாக வரலாறு சொல்கிறது. சுமேரிய மக்கள் இதைத் தமது அன்றாட உணவாகக் கொண்டிருந்ததாக கல்வெட்டொன்றில் பதிவிருப்பதாக இணையத்தில் கண்டேன். பாலைவனக் கோடையைத் தணிக்க அரேபியர்கள் இதை அதிகம் பயன்படுத் தியிருக் கிறார்கள். காய்ப் பருவத்திலும் தித்திப்பாக இருக்கும் வெள்ளரிக்கு "பெல்ட் ஆப்பிள்" என்று ஆங்கிலப் பெயரும் உண்டு. வெள்ளரி, பித்தத்தைத் தணித்து உடலுக்கு குளிர்ச்சியூட்டும். நீர்ச்சத்து அதிகம் காணப்படும் வெள்ளரி சிறு நீரகக் கோளாற்றை சரிசெய்வதோடு பல மருத்துவக் குணங்களைக் கொண்ட தென நிகண்டு குறிப்பிடுகிறது.**





மஞ்சள் வெல்வெற் துணியை ஞாபகப்படுத்தும் வெள்ளரிப் பழத்தில் வரிவரியாகக் காணப்படும் விதைகளை நீக்கி சீனியுடன் அல்லது பனங்கட்டி யுடன் பழத்தை ருசி த்த ஞாபகம் மேலெழ, பழமும் வாங்கலாம் அத்துடன் "புதுவிதி"யில் பழம் பற்றிய குறிப்புகள் சிலவற்றைப் பதிவுசெய்யலாம் என்ற இரு நோக்கங்கள் முளைவிட்டன. சங்குவேலியை நோக்கிப் பயணிக்கத் தொடங்கினோம்.

உடுவிலையும் சண்டிலிப்பாயை யும் இணைக்கின்ற வீதியில் குடிமனைகளைத்தாண்டி வயல் வெளி தொடங்கும் இடத்தில் ஒரு சிறு குடிலின் முன்பு சில மாம்பழங்களும் வெள்ளரிப் பழங்களும் வைக்கப்பட்டிருந்தன. சற்றுத் தொலைவில் இரண்டு சிறுமிகள் அமர்ந்திருந்தனர். எம்மைக் கண்டதும் வயதில் இளையவள் ஓடி வந்தாள்.

"என்ன வெள்ளரிப் பழமே? எத்தினை ரூபாக்கு வேணும்?" கட கட வெனக் கேள்விகளை அடுக்கிக் கொண்டே போனாள். சிறுமியின் துடிப்பும், வியாபார ஆர்வமும் எங்களைக்கவர அவளிடம் கதை கொடுத்தோம்.

"பழம் பிறகு வேண்டிறம். முதல்ல, உங்களிட்டை, உங்கடை இந்தப் பழ வியாபாரத்தைப் பற்றிக் கொஞ்சம் கதைக்க வேணும்"

"அப்பிடியெண்டால், அதை எங்கடை அண்ணாவோடைதான் கதைக்க வேணும். அவர் இப்பதான் உங்கை முன்னுக்கு போறார். அந்த அம்மன் கோயிலுக்குக் கிட்டவும் பழம் விக்கிற கடையிருக்கு. அங்கை போய் பாருங்கோ நிப்பார்" என்று ஒரு கிலோ மீற்றர் தொலைவுக்கப்பாலுள்ள கோயிலொன்றை அடையாளம் காட்டினாள். அது வயல் வெளி முடியு மிடத்திலிருந்தது. அதை நோக்கி நகர்ந்தோம்.

நாம் தேடிச் சென்றவர் அங்கு இல்லை. திரும்பும் வழியில், வயல் வெளியில் வெள்ளரிப் பழக்கடை ஒன்றை நடத்திக் கொண்டிருந்த 'ராசு அண்ணை குடும்பத்திடம்' பேச்சுக் கொடுத்தோம். அவர்களிடமும் எமது பருப்பு அவியவில்லை. அவர்களை ஓரிரு புகைப் படங்கள் எடுத்துக் கொண்டு வந்து மீண்டும் சிறுமியிடமே கதையைக் கொடுத்தோம்.

"ஏன் எண்டு சொல்லுங்கோ. என்னத்துக்கு இதையெல்லாம் கேக்கிறீங்கள்? 'அடம்பிடித்தாள்' அவளைச் சமாதானப்படுத்த சில நிமிடங்கள் சென்றன. போர் அவர்களது வாழ்க்கையை சின்னாபின்னப் படுத்தியிருந்தது. பல இடப் பெயர்வுகளும் பல வேதனைகளையும் தாண்டி, காயப்பட்ட பறவயொன்று மெல்ல சிறகு விரித்துப் பறக்க எத்தனிப்பதைப் போல வாழ்வை ஒழுங்கு நிலைக்கு கொண்டுவரப் போராடுகின்ற வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் அவர்கள். தேவையற்ற உரையாடல்கள் அவர்களது வாழ்வைச் சிதைத்து விடுமோ என்ற பயத்தால் அவர்கள் எவரையும் நம்பத் தயாரில்லை என்று மட்டும் தெட்டத் தெளிவாகத் தெரிந்தது. அவள் மூன்று முன் நிபந்தனைகளுடன் பேச ஒத்துக் கொண்டாள். ஒன்று புகைப் படம் எடுக்கக்கூடாது. இரண்டாவது பெயரைப் போடக்கூடாது. மூன்றாவது போகும் போது பழம் ஒன்று வாங்க வேண்டும். அனைத்து நிபந்தனைகளுக்கும் சம்மதித்தோம். உரையாடல் ஆரம்பமாகியது. ஏன் பயப்பிடுகிறியள். படம் எடுத்தால் என்ன?"

"நாங்கள் பொம்பிளைப் பிள்ளையள். படம் பேப்பரிலை வரப்பிடாது. முந் தியும் ஆக்கள் வந்து கடையைப் படம் எடுத்துப் போடக் கேட்டவை. அப்பா அம்மாவை இதுக்கு சம்மதிக்கேல்லை" அவர்கள் தங்கள் நிலைகளில் தெளிவாக இருப்பதாக எனக்குப்பட்டது.

"இந்த பழக்கடையை பற்றி சொல்லுங்கோ, என்னென்ன விக்கிறியள்? எப்ப தொடங்கினியள்?"

"அப்பா தான் இந்த யாவாரம் செய்யிறவர். அம்மாவும் கூட நிக்கிறவா. பள்ளிக்கூடம் விடுதலை எண்டதாலை நானும் அக்காவும் நிண்டு கொண்டு அம்மா அப்பாவை விட்டுட்டம். பழங்கள் வாறதுக்கு ஏற்றாப்போலை மாறி மாறி யாவாரம் செய்வம். இந்த வெள்ளரிக்காய் யாவாரம் போன சித்திரையிலை தொடங்கினது. பிறகு மழை வந்து பயிர் அழிஞ்சதாலை கொஞ்சம் பழம் குறைஞ்சிட்டுது. இப்ப திரும்பவும் நட்டிருக்கினம். வாற ஆவணி புரட்டாசி மாதம் வரை பழம் வரும்.

"நீங்கள் உங்கடை தோட்டத்திலை நட்டதைத்தான் விக்கிறியளோ? இல்லை வெளியிலையும் வாங்குவிய ளோ? எப்பிடி?" நாம் கேட்டோம்.

"எங்களுக்குத் தோட்டமில்லை. வாங்கித் தான் விக்கிறம். வாங்குற தெல்லாம் வித்துப்போடும். சில நேரம் மிஞ்சிப்போடும். மிஞ்சிறதை கொஞ்சம் தள்ளியிருக்கிற தெரிஞ்சாக்கள் வீட்டை வச்சிட்டுப்போய் அடுத்தநாள் வந்து எடுப்பம். சில நேரம் பழங்கள் ஆகப் பழுத்து அழுகிப்போம். அதை எறிவம். தோட்டக்காரர் அதைத் திருப்பி எடுக்கா யினம். எங்களுக்கு அது நட்டம்தான்"

"உங்களுக்கத் துணையா ஆருமில்லையே? அப்பா மட்டுந்தான் யாவாரமோ?"

"அண்ணா இருக்கிறார். அவருக் குக் கால் ஏலாது. அவர் காளி கோயிலடியிலை வைச்சுப் பழம் விப்பார். அதோடை நவாலிக்கும் பழம் கொண்டு போறவர். நவாலி இறைச்சிக் கடைக்கருகிலை வைச்சு விப்பார். கடையொண்டுமில்லை. நிலத்திலை வைச்சுத்தான் விப்பார். எங்கடை குடும்பத்திலை எல்லாமா ஆறு பேர். ரண்டு ஆம்பிளையள். நாலு பொம்பிளையள். ஒரு அக்கா கலியாணஞ் செய்து போட்டா. நாங்கள் இப்ப பள்ளிக்கூட லீவெண்ட படியால் வந்து நிக்கிறம். இல்லாட்டிப் பள்ளிக்கூடத்துக்குப் போயிடுவம்"

சிறுமி நிறுத்திவிட்டு எங்களைப் பார்த்த பார்வை இனியும் இங்கே நின்று எங்களுக்கத் தொந்தரவு தராமல் போய்விடுங்கள் என்று சொல்வது போலிருந்தது. மிரண்ட பார்வை. வெளிப்படையான பேச்சு. உழைப்பில் உறுதியான இவர்கள் வாழ்வில் நடிக்கத் தெரியாத ஜீவன்கள். மறுபக்கமற்றவர்கள். பொருளாதாரத் திமிர் நிறைந்த ஒரு சமூகத்தின் இன்னொரு பக்கத்தின் அங்கத்தவர்கள். இவர்கள் ஒருபோதும் பொருளாதாரத்தின் உச்சத்தைத் தொடப்போவதில்லை. ஆனால் குறைந்தபட்ச தேவையுடன் மகிழ்ச்சியோடு மனிதர்களாக வாழ்வார்கள் என்பது மட்டும் உறுதி.




○ கபிலன்

# பனித்தேச வடலி

ஒவ்வொரு நாளும் எங்களிற்குள் மின்னஞ்சல் பரிமாற்றம் நடைபெற்றுக் கொண்டே இருந்தது. அவள் அவனுடன் சண்டை பிடித்திருந்தால் சற்று சோகமான தோனியில் மின்னஞ்சல் வரும். இந்த வகையான மின்னஞ்சல்களே அதிகமாக வந்தன.

காலப்போக்கில் இதற்கு என்ன எழுதுவதென்று தெரியாமல் சலிப்பாக இருந்தது. என்ன மாதிரியான பதிலை நான் எழுதியிருக்க முடியும்?

மாற்றத்திற்கான முதல் அடி அவளிடமிருந்தே வர வேண்டும் என்பதை இலகுவாக என்னால் சொல்லிவிட முடியும்.

இரண்டு படகுகளில் கால் வைத்திருக்கும் அவளிற்கு அது ஒரு போராட்டமாகவே இருந்திருக்க வேண்டும். ஒரு வருடத்தின் பின்னர் நாங்கள் தொலைபேசியில் பேசிக் கொண்டோம். என்னிடம் கைத்தொலைபேசி இல்லையென்பதால் எனது வீட்டு தொலைபேசியில் இருந்தே அவளை தொடர்பு கொண்டேன்.

அவளின் காதலன் இதனை கண்டு பிடித்து எனது அப்பா வரை வந்து விட்டது. ஆணும் பெண்ணும் உடலுறவற்ற ஒரு உறவில் இருக்க முடியுமென்பதை இன்றும் அன்றும் தமிழ் சமூகம் நம்பத் தயாராகவில்லை. அத்துடன் அவளுக்கும் எனக்குமான உறவு தொலைந்துபோனது.

அவள்எப்படி இருப்பாள் என்று சில வருடங்களிற்கு முன்னர் முக நூலில் தான் அவளின் முகவரியில் பார்த்தேன். வேறொரு திருமணம் முடித்து மகிழ்ச்சியாக இருக்கின்றாள். அவ்வப்போது அவளுடன் பழகிய நாட்களை நினைத்து சிரித்துக் கொள்வேன்.

எங்களது நட்பை நான் தொடர விரும்பினாலும் அவளின் சூழல் 10 வருடங்களிற்கு பின்னரும் அதனை அனுமதிக்காது என்பதை புரிந்து கொள்ள முடிகின்றது. என்னைப் போல் அவளும் இணையத்தில் பெற்றோரை தேடியவளாக இருந்திருக்கலாம். இப்போது அவளின் கணவன் என திடத்தை நிரப்பியிருக்க வேண்டும்.

எனவே எனது நட்பு தேவையில்லை என்று அவள் நினைத்திருக்க கூடும்.

இந்த சம்வத்திற்கு பின்னர் எனக்கும் எனது அப்பாவிற்குமான விரிசல் அதிகமாகியது. இணையத்தில் நான் செலவிட்ட நேரங்களும் அதிகமாகின.

எதிர்பாலினத்துடனான எனது தேடல் தொடர்ந்து கொண்டேயிருந்தது. தமிழ் சமூகத்திடம் எனது நல்லவன் என்ற அடையாளத்தை காத்துக் கொண்டு எனது தேடலையும் நிறைவேற்றிக்கொள்ள இணையம் வசதியாக அமைந்தது. இப்படியாக எனது முதல் ஈர்ப்பு (அப்பொழுது நான் இதனை காதல் என்றிருந்தேன்) நடந்தேறியது.

அவளுடன் பேசிய சில வாரங்களிற்குள்ளே அவளும் என்னை காதலிப்பதாக எழுதியிருந்தாள். இந்த 'காதல்' ஒரு 6 மாதம்கூட தாக்குப் பிடிக்கவில்லை.

எங்களுடைய சந்திப்புக்கள் கூடுதலாக தமிழர்கள் நடமாட்டம் இல்லாத கிராமங்களிலயே இடம் பெற்றன. சில மணி நேரங்கள் பயணம் செய்தே அவளை சந்திக்க வேண்டியிருந்தது. என்னை விட படிப்பில் மிகவும் திறமையானவள். எனக்கோ படிப்பு எட்டாக்கனி. ஒரு நாள் அவள் எனது தொடர்பை துண்டிக்கப் போவதாக எழுதிவிட்டு அதன் பின்னர் தொடர்பு கொள்ளவேயில்லை.

என்னைவிட அழகிலும் அறிவிலும் திறமையான ஒருவனை அவள் தேடிப் பிடித்திருக்க வேண்டும் என்பது என் யூகம். அது உண்மையென்றே நம்புகின்றேன்.

வாழ்க்கையை மாற்றிப்போட்ட சம்பவங்கள் அனைவரிற்கும் ஒரு முறையெனும் நடந்திருக்கலாம். எனக்கு இந்த சம்பவமாகவே அது அமைந்தது.

அவளிற்கு நான் யார் என்று காட்ட வேண்டும் என்று பல திட்டங்களை போட்டிருந்தேன். இருந்தாலும் எதையுமே நடைமுறைப்படுத்தவில்லை. ஒருவித பயம் இருந்து கொண்டேயிருந்தது. எனது அனைத்து திட்டங்களும் தமிழ் சினிமாவின் சாயல்களே. அவளின் இழப்பை மறைப்பதற்கு நான் நண்பர்களுடன் அதிக நேரத்தை செலவிட்டேன்.

எனது நண்பர்களும் இணையத் தளங்களில் சுற்றிக் கொண்டுதான் இருந்தார்கள்.

அவள் மீது எனக்கு இன்றும் கோபம் இருக்கின்றது என்றால் நம்பமுடிகிறதா? கோபத்தை எப்படி கையாளுகின்றோம் என்பதில்தான் எமது வெற்றி தங்கியுள்ளது என்பதை அவளின் இழப்பு மூலம் நான் கற்றுக் கொண்டேன்.

இப்படியான அனுபவங்கள் எனக்கு மட்டும் நடைபெறவில்லை. எனது நண்பர்கள் அனைவருக்குமே கிட்டத்தட்ட முதல் காதல் இணையத்தில் தான் மலர்ந்தது. முடிவும் என்னுடையது போலவே இருந்தது. காரணங்கள் சில இடங்களல் மாறுபட்டன. ஒரு விசித்திரமான காரணமாக நான் பார்ப்பது சில பெண்கள் தனது பெற்றோர்கள் சாதி பார்ப்பார்கள் எனவே நாம் பிரிவதே சிறந்தது என முடிவு செய்ததை. உறவை முறித்துக் கொள்ள அவர்கள் கையாண்ட முறைகளில் இது தனித்துவமானது. இன்றும் கூட இந்த விசித்திரம் நடைமுறையில் உள்ளது என்றால் நம்புவீர்களா?

> **“எனது நண்பர்களும் இணையத் தளங்களில் சுற்றிக் கொண்டு தான் இருந்தார்கள். அவள் மீது எனக்கு இன்றும் கோபம் இருக்கின்றது என்றால் நம்பமுடிகிறதா? கோபத்தை எப்படி கையாளுகின்றோம் என்பதில்தான் எமது வெற்றி தங்கியுள்ளது என்பதை அவளின் இழப்பு மூலம் நான் கற்றுக் கொண்டேன்.**

ஒரு கிணற்றிற்குள் நீர் முட்டி விட்டால் அது தானாகவே என்றோ ஒரு நாள் வெளியில் வந்து விடும். சம்மந்தப்பட்டவர்களால் கூட அதன் பின்னர் கட்டுப்படுத்த முடியாது. இரண்டாம் தலைமுறையினரின் இளமைப் பருவம் இப்படியானதாக தான் இருந்திருக்க வேண்டும்.

நானோ அல்லது எனது நண்பர் வட்டாரமோ எங்களிற்கு பிடித்த வாழ்க்கை யை வாழ்ந்தோமா என்றால் இல்லை என்பதே பதிலாக இருக்கும். நாங்கள் கைப்பொம்மைகளாகவே இருந்தோம். எங்களை ஆட்டிப் படைத்த நூல் தமிழ் சமூகத்தின் கைகளில் இருந்தது. எங்களது பெற்றோரும் அதற்குள் அடங்கினார்கள்.

பதின்ம பருவம் முழுவதும் பாலியல் சம்பந்தமானதாகவே இருக்கின்றது என்று நீங்கள் நினைத்தால் தமிழ் சமூகத்தின் சராசரி பிரதிநிதி நீங்களே. பாலியலில் முழுமையடையாத ஒரு சமுதாயம் நிச்சயமாக ஆரோக்கியமானதாக இருக்க முடியாது.

உலகத்திற்கே பாலியல் தந்திரங்களை கற்றுக் கொடுத்த இனமல்லவா நாங்கள். கோயில்களில் அதற்கான உருவங்களை வைத்து வழிபடுகின்ற இனம் எங்கேனும் உண்டா? இப்படியான ஒரு பாரம் பரியத்தில் வந்த எங்களிடம் பாலியல் பேசாப் பொருளானது எதற்காக?

(இன்னும் வளரும்...)



## மனித யாத்திரை

போவோம் நிலம் விட்டு
நிலவின் அமைதி குலைப்போம்

நாம் மனிதர் அழிக்க பிறந்தவர்கள்
நிலவை பிரித்து வேலி சமைத்து
நிழலிடமும் வாடகை கேட்டு
இல்லாத நீருக்கும் ஏலம் போட்டு
அரசியல் கட்சி தொடங்கி நிலவு தேச
த்தில் கொடிகள் நாட்டுவோம்

மூச்சு காற்றால் நஞ்சூட்டி
நிலவின் மகளுக்கான நவீன நரகம்
செய்வொம்

அன்பு என்ற வார்த்தை இல்லா அகராதி
வடிவமைத்து
நட்பின் பகிர்வை 'வைபர் குரூப்பில்'
முடித்து
பசியோடு பலர் இருக்க 'செல்வி
வித் ஐஸ் இன் மூன்' என்று 'போஸ்ட்'
போட்டு 'பேஸ் புக்கை' நிறைப்போம்

இறப்பிற்கான இரங்கலை 'வட்ஸ்
அப்பில்' அனுப்பி
குறைவராமல் 'டுவிட்டரிலும்'
ஆளுக்கொரு 'லைக்' போட்டு
இறுதிச் சடங்கை 'யூ ரியூப்பில்'
பார்த்து
எம் சொந்தங்களுக்கு
விடையளிப்போம்

நம் நாடகம் இனிதே அரங்கேற
நிலா முற்றத்தில் கோவில் அமைத்து
நித்தமும் பூஜை செய்வோம்

எல்லாம் கொஞ்ச காலம் தான்
எம் இனத்தை நாமே அழித்துக்
கொள்வோம்
யாம் மனிதர் மறந்துவிடாதே.

○ சோ-அபிராமி

# மூடு மந்திரம்

தற்போது உதைபந்தாட்ட உலகில் எழுந்துள்ள மில்லியன் டொலர் கேள்வி பிரான்ஸின் மத்திய கள வீரரான போல் போக்பா மான்செஸ்ரர் யுனைற்றட் அணிக்காக விளையாடுவாரா இல்லையா என்பதாகத்தான் இருக்கிறது. நடைபெற்ற யூரோ தொடரில் பிரான்ஸ் இறுதிப்போட்டி வரை முன்னேறுவதற்கு போக்பா வழங்கிய பங்களிப்பும் அளப்பரியது. தற்போது இத்தாலியின் ஜூவென்ரஸ் கழகத்துக்காக விளையாடி வரும் அவரைத் தம் அணியின் பக்கம் இழுத்துக் கொள்வதற்கு மான்செஸ்ரர் யுனைற்றட் நிர்வாகம் பேரம்பேசி வருகின்றது. ஏற்கனவே சுவீடன் நாட்டின் நட்சத்திர வீரரான இப்ராஹிமோவிச்சையும் ஜேர்மனியின் முன்னாள் தலைவர் ஸ்வெயின்ஸ்டெய்கரையும் புதிதாக அணியில் இணைத்துக்கொண்டுள்ள நிலையில் போக்பாவையும் எப்படியாவது அணிக்குள் கொண்டு வந்தே தீரவேண்டும் என்பதில் புதிதாக முகாமையாளராகப் பதவியேற்ற ஜோஸ் மௌறின்கோ முனைப்புக் காட்டி வருகின்றார்.

இத்தனைக்கும் 2012 ஆம் ஆண்டு ஜூவென்ரஸ் அணியில் சேர்வதற்கு முன்னதாக போக்பா மான்செஸ்ரர் யுனைற்றட் அணியில் விளையாடிய வீரரே. ஆனாலும் அப்போது முகாமையாளராக இருந்த அலெக்ஸ் பேர்குசனுக்கும் போக்பாவின் முகவராக இருந்தவருக்கும் இடையில் ஏற்பட்ட முரண்பாட்டினால் அவரைத் தொடர்ந்தும் மான்செஸ்ரர் யுனைற்றட்டில் தக்க வைத்துக்கொள்ள முடியவில்லை. இன்று வரலாறு மீளத் திரும்புகின்றது.

மான்செஸ்ரர் யுனைற்றட் அணி நிலைமை இவ்வாறிருக்க ஜூவென்ரஸ் அணி நிர்வாகமோ போக்பா தமது அணியில் இருந்து விலகிச் செல்வதாய் வெளிவந்துள்ள செய்திகளை மறுத்துள்ளதுடன் அவருடனான ஒப்பந்தம் 2019 வரை உள்ளதென்பதையும் சுட்டிக்காட்டியுள்ளது. ஆனால் மௌறின்கோவோ இன்று (ஒகஸ்ட் 13) தொடங்கவுள்ள பிறீமியர் லீக் உதைபந்தாட்டத் தொடரில் பங்கேற்கும் விதமாக போக்பாவின் ஒப்பந்தம் முடிவுக்கு வரும் என்கிறார்.

இந்த விடயம் சற்று மூடுமந்திரமாகவே இருந்தாலும் உதைபந்தாட்ட வரலாற்றில் இதுவரை வேல்ஸ் நாட்டு வீரரான காரத் பேல் தான் ஸ்பெயினின் றியல் மட்ரிட் அணியால் அதிகதொகை கொடுத்து வாங்கப்பட்ட வீரராகத் திகழ்ந்து வருகின்றார். தற்போது போக்பாவை மான்செஸ்ரர் யுனைற்றட் அணி 100 மில்லியன் ஸ்ரேலிங் பவுண்டுகள் கொடுத்து வாங்குவதற்குத் தயாராகி உள்ள நிலையில் இந்தத்தகவல் உண்மையானால் அதிக விலை கொடுத்து வாங்கப்பட்ட வீரர் என்ற பெருமை போக்பாவையே சேரும்.



# வரமா? சாபமா?




எந்தவொரு விளையாட்டிலும் வீரராக விளையாடி ஓய்வு பெற்ற பின்னரே அந்த அனுபவத்தைக் கொண்டு பயிற்றுனராகப் பதவி வகிப்பது வழமையாக இருக்கின்றது. ஆனால் கிரிக்கெட்டில் முன்னர் எப்போதுமில்லாத அளவுக்கு இருபதுக்கிருபது போட்டித் தொடர்களின் அதிகரிப்பும் பொருளாதார நலன் சார்ந்த வீரர்களின் மனோநிலையில் ஏற்பட்ட மாற்றமும் அந்த வரன்முறைகளை மாற்றி இன்று கிரிக்கெட்டில் எந்தவொரு பாத்திரத்தையும் ஏற்பதற்குத் தயாராக இருக்கின்றார்கள் என்பதை நடந்து முடிந்த கரிபீயன் பிறீமியர் லீக் (சி.பி.எல்) போட்டியில் பங்குபற்றிய அவுஸ்ரேலிய வீரர் பிரட் ஹொட்ஜ் மூலம் மீளவும் நிரூபணமாகியுள்ளது.

சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்ற 41 வயதான பிரட் ஹொட்ஜ் ஐ.பி.எல் போட்டிகளில் கொல்கத்தா நைற்றைடர்ஸ், கொச்சி ரஸ்கர்ஸ், ராஜஸ்தான் றோயல்ஸ் போன்ற அணிகள் சார்பில் வீரராக விளையாடியவர். எனினும் இவ்வருடப் போட்டியில் குஜராத் லயன்ஸ் அணியின் தலைமைப் பயிற்றுநராகப் பதவியேற்றிருந்தார்.

ஐ.பி.எல் போட்டிகளில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்காக முதலில் விளையாடிய நியூசிலாந்தின் ஸ்ரீபன் பிளெமிங், அணியின் தலைமைப் பயிற்றுநராக நியமிக்கப்பட்ட பின்னர் விளையாடுவதைத் தவிர்த்திருந்தார். இதன் தொடர்ச்சியாக பிக்பாஸ் தொடரில் மெல்பேர்ண் ஸ்ராஸ் அணியின் பயிற்சியாளராகவும் பிளெமிங் விளங்கி வருவதும் குறிப்பிடத்தக்கது. எனவே இதேபோன்று தான் பிரட் ஹொட்ஜின் எதிர்காலமும் அமையும் என எதிர்பார்த்திருந்த நிலையில் இம்முறை சி.பி.எல் போட்டியில் சென்கிற்ஸ் அண்ட் நெவிஸ் பற்றியட்ஸ் அணிசார்பில் மீண்டும் வீரராக அவரது பிரசன்னம் நிகழ்ந்திருக்கிறது.

பிரட் ஹொட்ஜ் விடயத்தில் அவருக்கு முன்னோடியாக ஐ.பி.எல் போட்டியின் முதல் தொடரில் ராஜஸ்தான் றோயல்ஸ் அணியின் பயிற்சியாளராகவும் தலைவராகவும் விளங்கி கிண்ணத்தையும் பெற்றுக் கொடுத்திருந்த அவுஸ்ரேலிய வீரர் ஷேன் வோர்ண் தான் இருந்திருக்க வேண்டும். ஐ.பி.எல்லில் 2011 வரை அந்த இரண்டு பாத்திரங்களையும் வகித்திருந்த ஷேன் வோர்ண் அதன்பின்னர் அவுஸ்ரேலியாவில் பிக்பாஸ் தொடரில் மெல்பேர்ண் ஸ்ராஸ் அணிக்காக ஒரு வீரராக மட்டும் விளையாடி இருந்தமையும் நினைவுக்கு வருகின்றது.

எனவே வீரர்களின் திறமை மற்றும் ஆளுமைக்கு அப்பால் கிரிக்கெட் உலகில் தமது நிலை என்ன என்பது குறித்த ஸ்திரமான ஒரு முடிவை எடுக் காமல் பொருளாதாரத்தை மட்டும் கருத்திற்கொண்டு எத்தகைய பாத்திரத்தையும் வகிப்பதற்கு வீரர்களின் வாழ்வு தள்ளப்பட்டுள்ளதை வரம் என்பதா? சாபம் என்பதா?

தொகுப்பு: சி. விமலன்




# ஏனிந்த முரண்பாடு?



**2016** ஒலிம்பிக் போட்டியின் தொடக்க விழாவில் ஒலிம்பிக் தீபத்தை ஏற்றுவார் எனப் பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட சர்வதேச ஒலிம்பிக் குழுவின் அதியுயர் விருதான 'Olympic Order' பெற்ற பிறேசிலின் உதைபந்தாட்ட ஜாம்பவான் பீலே உடல் நிலை சரியில்லாததால் நிகழ்வில் கலந்து கொள்ள முடியவில்லையென அறிவித்ததைத் தொடர்ந்து பிறேசிலின் முன்னாள் மரதன் ஓட்ட வீரர் டிலிமா ஒலிம்பிக் தீபத்தை ஏற்றி உள்ளார்.

இது குறித்து பீலேயின் உதவியாளரான பெபிற்றோ 75 வயதான பீலேக்கு ஏற்பட்ட தசைப் பிடிப்பின் வலிகாரணமாக இவ்வருட ஆரம்பத்தில் சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டதையும் தற்போது அவர் கைத்தடியின் உதவியுடன் உலவி வருவதனையும் பொது நிகழ்வுகளில் பங்குபற்றுதலில் ஏற்பட்டுள்ள அசௌகரியங்களையும் கூறி பீலே கலந்து கொள்ளாமைக்குரிய காரணத்தை நியாயப்படுத்தி உள்ளார். முதுமையின் தாக்கத்தை அதன் இயலாமையைப் புரிந்து கொள்ளக் கூடியதாக இருந்தாலும் இந்தத் தெளிவு அவரை சில தினங்களுக்கு முன்னர் ஒலிம்பிக் தீபத்தை ஏற்றுவதற்காக அணுகும் போது மட்டும் எவ்வாறு இல்லாமல் போனது? என்பது தான் ஆச்சரியமாக உள்ளது.

அப்போது பீலே தனக்கு சில நிறுவனங்களுடன் ஏற்பட்டுள்ள ஒப்பந்தங்களினால் இது குறித்து தன்னிச்சையாக முடிவு எடுக்க முடியாது எனவும் அவர்களுடன் கலந்துரையாடிய பிற்பாடே பதில் கூற முடியும் என்றுதான் கூறியிருந்தார். ஆதலால் மேற்படி நிறுவனங்கள் அனுமதி வழங்காததாலேயே அவர் இதில் கலந்துகொள்ளவில்லையோ என்றதொரு ஐயத்தையும் தற்போது தோற்றுவித்துள்ளது.



இந்தப் பத்திரிகை லக்ஷ்மி பிறின்டர்ஸ் (பிறைவேற்) நிறுவனத்தால் 13.08.2016 அன்று
107, இராச வீதி, கோப்பாய் - திருநெல்வேலி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.